பக்கங்கள்: இருபத்தெட்டு + IV

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 07 புதன்கிழமை (22.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 208



09
பெரியவை சிறியதை நசுக்குகின்றன



14
வீரத்தலைவனின் வெற்றிடம் நிரப்பப்படுமா?



25
சுருண்டது இந்தியா

## பிரபாவின் மனைவி, பிள்ளைகள் தொடர்ந்து அரச பாதுகாப்பில்

### நாடாளுமன்றில் அஸ்வர் எம்.பி. தகவல்

கொழும்பு, ஜூன் 22

இறுதிக்கட்ட போரில் பிரபாகரன் கொல்லப்பட்ட போதிலும், அவரது மனைவி ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அரச பாதுகாப்பில் இருக்கின்றார் என்றும் பிரபாகரனின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி வழங்கப்பட்டு வருகின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு-

இந்தியாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் இல்லாத சுதந்திரம் எமது நாட்டில் உள்ளது. 30 வருட கால யுத்தம் முடிவுக்கு வந்து சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது.

படையினர் ஊடாகவே எமது சுதந்திரம் சாத்தியப்பட்டது. இப்படிப்பட்ட படையினரை அவமதிக்கும் விதமாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சனல் - 4 நிறுவனத்திற்கு வக்காளத்து வாங்குகின்றனர்.

இந்த சனல் - 4 நிறுவனம் 2009ஆம்

(28 ஆம் பக்கம் பார்க்க)



வவுனியா செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் எஞ்சிய மக்களை மீள்குடியமர்த்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நேற்றுமுன்தினம் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து கலந்துரையாடினார்.

# உலகுடன் மோதவும் இலங்கை அஞ்சாது

### போரில் தோற்றோர் பொருளாதாரத்தை வீழ்த்தச் சதி என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 22

போர்க் குற்றங்களை விசாரிக்கும்படி வெளி உலக அழுத்தங்கள் கொழும்பு அரசு மீது குவிந்து வருகின்ற நிலையிலும், உலகுடன் மோதுவதற்கு இலங்கை ஒருபோதும் அஞ்சாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். இந்த நெருக்குவாரங்கள் எல்லாம், 30 வருடங்களுக்குப் பின்னர் மீண்டுவரும் நாட்டின் பொருளாதாரத்தை நசுக்கும் சதிகாரர்களின் செயல் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். ''போர்க்களத்தில் தோற்றவர்கள் இலங்கைப் பொருளாதாரத்தை வீழ்த்துவதற்குச் சர்வதேசத்துடன் இணைந்து சதி செய்கிறார்கள்'' என்றார் பீரிஸ்.

ஜனாதிபதியின் ரஷ்யப் பயணம் தொடர்பாகச் செய்தியாளர்களுக்கு விளக்கும் சந்திப்பை வெளிவிவகார அமைச்சர் நேற்று நடத்தினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்த்தும் நோக்கிலேயே போலியான போர்க் குற்றச்சாட்டுக் காட்சிகளை சனல்-4 தொலைக்காட்சி அவ்வப்போது வெளியிட்டு வருகின்றது என்று அமைச்சர் அப்போது சொன்னார்.

போர்முனையில் நடந்த சண்டை இப்போது அனைத்துலக இராஜதந்திர மட்டத்துக்கு நகர்ந்துள்ளது என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

இலங்கை தனித்து விடப்படவில்லை

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா மீள வலியுறுத்து

நியூயோர்க், ஜூன் 22

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் சனல்-4 வெளியிட்ட ஆவணப் படம் ஆகியவற்றின் அடிப்படையில், இலங்கைக்கு எதிராக அனைத்துலகப் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

''இலங்கையில் அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக நம்பகமான குற்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும் இம்முறை வாக்கு எண்ணிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். தேர்தல் மாவட்டத்துக்குள் அடங்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பிரதேச சபைகளுக்குமான வாக்குகள் இம்முறை கிளிநொச்சி செயலகத்தில் வைத்தே எண்ணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த

(28 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடர்

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.6 இன் வினாத்தாள்-1 இன்றைய உதயனின் 16, 17 ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளது.

## கண்ணிகளை அகற்றி முடிக்க 9 ஆண்டுகள் தேவை

கொழும்பு, ஜூன் 22

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இதுவரை 5,594.89 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள எல்லா கண்ணிவெடிகளையும் முற்றாக அகற்றுவதற்கு இன்னும் ஒன்பது வருடங்கள் பிடிக்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை அதிகரிக்கும்?

கொழும்பு, ஜூன் 22

உலக சந்தையில் பெற்றோலிய பொருள்களின் விலை அதிகரித்துள்ளமையால் தற்போதைய இறக்குமதியின் போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 41 ரூபாவாலும், டீசல் லீற்றர் ஒன்றுக்கு 33 ரூபாவாலும், பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு 2 ரூபாவாலும் நட்டம் ஏற்படுவதாக பெற்றோலி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நிறுத்தம் என அறிவித்த பின்னரும் தொடர்ந்த படையினரின் பதிவுகள்

### இனிமேல் நடக்காது என்கிறார் படைத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். குடாநாட்டில் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் படையினர் ஒளிப்படம் எடுத்துப் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

எனினும், படையினர் மத்தியில் காணப்பட்ட தொடர்பாடல் குறைபாடு காரணமாகவே இந்தத் தவறு இடம்பெற்றது என்றும் உடனடியாகப் பதிவுகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்றும் குடாநாட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்தார்.

''எந்தப் பகுதியிலும் இனிமேல் எந்தவித பதிவு நடவடிக்கைகளிலும் படையினரோ பொலிஸாரோ ஈடுபட மாட்டார்கள்'' என்றார் மேஜர் ஜெனரல்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் குடாநாட்டில் பதிவுகள் அனைத்தும் உடன் நிறுத்தப்பட்டுள்ளன என்று சனிக்கிழமையன்று யாழ். நகரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்திருந்தார்.

அவர் அப்படித்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் சுதந்திர ஆணைக்குழு அமைக்கும் முயற்சி தோல்வி

கொழும்பு, ஜூன் 22

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவால் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் சுதந்திர ஆணைக்குழுவை நிறுவுவதற்கான சட்டமூலம் ஒன்றைக் கோரும் பிரேரணை 63 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இப்பிரேரணைக்கு எதிராக அரசு 93 வாக்கு களை அளித்தது. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகிய எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பிரேரணைக்கு ஆதரவாக 34 வாக்குகளை அளித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மாத்திரம் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார். வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு சார்பில் அவர் மாத்திரமே சபையில் இருந்தார்.

அதேபோல், வாக்கெடுப்பு நேரத்தில் சபையில் அமர்ந்திருந்த ஜன நாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி ஆகிய இருவருமே அக்கட்சியின் சார்பில் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். தனித்தனியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கை இணைத்து அதிகாரத்தைப் பகிர வேண்டும்

### அப்போதே தீர்வு சாத்தியம் என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, ஜூன் 22

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணத்துக்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அதிகாரம் பரவலாக்கப்படாவிட்டால் நாடு பெரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

நவ சமசமாஜக் கட்சியின் (27 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டி தாக்குதல் குறித்து விசாரிக்க விசேட குழு வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அளவெட்டியில் நடத்திய தேர்தல் கூட்டத்தினுள் புகுந்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக விசாரிக்க கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளதாக குடாநாட்டு இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித் தார்.

அளவெட்டிச் சம்பவம் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வெப்பக் காலநிலை நிலவுவதற்கான சாத்தியமுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆனி 21. 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6996.64↓
மிலங்கா(MPI) 6571.34↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.67Bn
பங்குகளின் அளவு(No.) 126.75Mn
வியாபாரம்(No.) 22378
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
மல்ரி பினான்ஸ் 38.30
சதோசா மோட்டர்ஸ் 299.00
ஈஸ்ர் வெஸ்ர் 15.10
த பினான்ஸ் 34.80
இகியூரி ரு 33.60
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஈஸ்ரேன் மேக்கன்ர் 1000.10
கலாமக சிஸ்ரம் 2500.00
பிபுத் 90.20
மேகன்ரைல் ஸிப்பிங் 280.201
சிஙகர் இன்டஸ்ரீஸ் 289.90
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# புத்த ஜயந்தியைக் கொண்டாடும் இந்தப் பூமியில் சூதாட்ட 'கஸினோ'க்களும் களியாட்ட விடுதிகளும்

உத்தியோகபூர்வ தகவல்களைச் சுதந்திரமாகப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் ''தகவல் சுதந்திர ஆணைக்குழு'' ஒன்றை இங்கு உருவாக்கவே முடியாது என்ற நிலைப்பாடு நேற்று நாடாளு மன்றத்தில் வெளிப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கரு ஜெயசூரிய நேற்று நாடாளுமன் றத்தில் ''உத்தியோகபூர்வ தகவல்களைப் பெற்றுக்கொள்வ தற்கான சுதந்திரத்துக்கும், எதன் அடிப்படையில் இந்தத் தகவல் களைப் பெற்றுக்கொள்வதை மறுக்கலாம் என்பதை வரையறை செய்வதற்கும், அதனை உறுதிப்படுத்துவதற்குமான தகவல் சுதந்திர ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் தகுதியான தகவல் அதிகாரிகளை நியமிப்பதற்கும் தகவல்களைப் பெறுவதற்குரிய செயல்முறை களை வகுப்பதற்குமான சட்ட மூலம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும்.

### அரச தரப்பினரின் கடும் ஆட்சேபனை

கருஜெயசூரிய இந்தக் கோரிக்கையை முன்வைக்க ஆரம்பித்த வுடனேயே துள்ளிக்குதித்து எழுந்தார் ஆளும் கட்சி கொறடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன. இப்படியான ஒரு சட்ட மூலம் கொண்டு வருவதை அனுமதிக்க முடியாது. அரசு இதே மாதிரியான ஆலோசனை ஒன்றை ஏற்கனவே அறிவித்துள்ளது. எனினும் உறுப்பினர் கருஜெய சூரிய இதனை மறு பெயரில் வேறு உருவம் கொடுத்து பிரச்சினைகளை உருவாக்க முனைகிறார். எனவே இதனை அனுமதிக்க முடியாது என்று ஆட்சேபணைஒன்றைஎழுப்பினார் அமைச்சர் தினேஸ். அமைச்சருக்கு பக்கபாட்டாக ஆளும் கட்சி உறுப்பினர்களும் கூச்சலிட ஆரம்பித்துவிட்டனர்.

### பிரேரணை கொண்டுவரும் உரிமை உறுப்பினர்களுக்கு இல்லை

ஆளும்கட்சியினரை கடுமையாக விமர்சித்தார் கருஜெய சூரிய. இது மக்கள் நாடாளு மன்றம். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்களின் மன்றம். இந்தச் சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவோ, ஆலோசனைகளை முன்வைக்கவோ உரிமை உண்டு. இதனைத் தடுக்க முடியாது என வாதிட்டார் கரு.

### அனுமதி வழங்கினார் சபாநாயகர்

கருவின் வாதத்தை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ அவருடைய பிரேரணையை முன்வைக்கும் படியும் ஏதாவது ஆட்சேபனையோ மறுப்போ இருந்தால் பிரேரணை முன் வைக்கப்பட்ட பின்னர் தெரிவிக்கலாம் எனவும் சபாநாயகர் கூறி விட்டார். சபாநாயகரின் இந்தத் தீர்ப்பு அரச தரப்பினருக்கு ஓர் அடியாகவே அமைந்துவிட்டது.

### வழிமொழிந்தார் ரணில்

சபாநாயகரின் இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து கருஜெய சூரிய தனது பிரேரணையை முன்வைத்தார். அதனை உத்தியோகபூர்வமாக வழிமொழிந் தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வழமையானகேள்வி நேரத்தின் பின் சபாநாயகரின்




அனுமதியுடன் தகவல் சுதந்திர ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான பிரேரணையை ஆளும் கட்சியினரின் கடுமையான ஆட்சேபனைகளுக்கும், மறுப்புகளுக்கும் மத்தியில் கருஜெய சூரிய முன்வைத்தார்.

### தோற்கடிக்கப்பட்ட சுதந்திர ஆணைக்குழுப் பிரேரணை

கருஜெயசூரிய பிரேரணையை முன்வைத்த பின் சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா மேற்குறிப் பிட்ட பிரேரணையை அரச தரப்பில் எதிர்ப்பதாகவும் இப்படியான ஒரு பிரேரணை கொண்டு வர முடியாது அதற்கு அனுமதி வழங்க இடமளிக்கக் கூடாது என அரச தரப்பில் பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைத்தார்.

கரு ஜெயசூரியவின் பிரேரணைக்கு பூர்வாங்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால் இந்தப் பிரேரணை மீது விவாதிக்க அனுமதிப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் வகையில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு உத்தர விட்டார் சபாநாயகர். இதன் படி வாக்கெடுப்பிற்கான கோரம் மணி ஒலிக்கப்பட்டுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கருஜெயசூரியவின் பிரேரணைக்கு ஆதரவாக 34 வாக்குகளும் எதிராக 97 வாக்குகளும் அளிக்கப்பட்டு தகவல் சுதந்திர ஆணைக்குழு அமைப்பதற்கான பிரேரணை ஆரம்பத்திலேயே தோற்கடிக்கப்பட்டது.

### அரசுக்கு எதிராக வாக்களித்த விளையாட்டுத்துறை அமைச்சர் அளுத் கமகே

இந்த வாக்கெடுப்பின்போது ஒரு சுவையான சம்பவமும் இடம்பெற்றது. வழமையாக அரசுக்கு ஆதரவு, ஆதரவு என்று வாக்களித்து பழக்கப்பட்டவர்கள் ஆளும் தரப்பினர். அதன்படி கருவின் பிரேரணைக்கும் 'ஆதரவு' என்று பலத்த குரலில் கூறி வாக்களித்து விட்டார். அப்படியானால் என்ன நடக்கிறது என்று தெரியாமலே வழமைபோல் வாக்களித்து விட்டார் அமைச்சர். இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேசைகளைத் தட்டி வரவேற்றனர். அதன் பின்னர் தான் நிலைமையைப் புரிந்துகொண்டு தான் தவறுதலாக வாக்களித்து விட்டதாகவும் எதிர்த்து வாக்களிப்பதாக திருத்திக்கொண்டதாகவும் அதன் படி வாக்கைப் பதியும் படியும் கேட்டுக்கொண்டார்.

### சபாநாயகர் கண்டனம்

நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களான ரவி கருணாநாயக்கவும், தயாசிறி ஜயசேகரவும் பல முறை எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படாமல் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் விடயம் சபாநாயகரின் கண்டனத்துக்கு உள்ளானது. கடந்த பத்து வருடங்களாக கடன் வழங்கிய நாடுகள், சர்வதேச நிதிநிறுவனங்கள், வங்கிகள் வழங்கிய கடன்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கும்படி நிதி திட்டமிடல் அமைச்சரிடம் கேட்டிருந்தன. இந்தக் கேள்வி நான்காவது தடவையாக எழுப்பப்பட்டபோதும் நான்காவது முறையும் கால அவகாசமே கேட்கப்பட்டது. பதில் கிடைக்கவில்லை.

அதேபோன்று தயாசிறி ஜயசேகர, துறைமுகங்கள் நெடுஞ் சாலைகள் அமைச்சரிடம் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தொடர்பாகவே கேள்வி எழுப்பினார். அதாவது கடந்த 20 வருடங்களில் பாதை அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் எவ்வளவு? வழங்கப்பட்ட நட்டஈடு எவ்வளவு? இன்னும் வழங்கப்படவுள்ள நட்டஈடுகள் எவ்வளவு? என்று கேட்டார். இந்தக் கேள்வி மூன்றாவது தடவையாகக் கேட்கப்பட்டது. ஆனாலும் பதில் இல்லை.

இதனை அவதானித்த சபாநாயகர் அமைச்சர்களின் செயலாளர்கள் என்ன செய்கின்றார்கள். அவர்கள் முறையாகச் செயற்பட்டால் இப்படியான தாமதங்கள் ஏற்படாது. அமைச்சர்கள் தமது செயலாளர்களிடம் சரியாக வேலைவாங்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எச்சரித்தார்.

### புத்த ஜெயந்தியைக் கொண்டாடும் பூமியில் கஸினோக்களும் களியாட்ட விடுதிகளும்

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர நிதி திட்டமிடல் அமைச்சரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார். ஐயா! எமது நாடு பௌத்த கலாசாரத்தைக் கடைப்பிடிக்கும் நாடு. ஆனால் வகைதொகையின்றி சூதாட்ட கிளப்புகளும் களியாட்ட விடுதிகளும் திறக்கப்படுகின்றன.

உதயன் சபைச் செய்தியாளர்
**புத்திரசிகாமணி**

இந்த நிலையில் சட்ட பூர்வமாக அனுமதிபெற்ற கஸினோ கிளப்புகள் எத்தனை. அதன் உரிமையாளர்கள் யார் என்பதை வெளியிட முடியுமா? என்று கேட்டார். ஆனால் இந்தக் கேள்விக்கும் அமைச்சர்களிடம் இருந்து பதில் எதுவும் இல்லை.

### அஸ்வரின் கண்டுபிடிப்பு

ஆளும் கட்சியின் பிரசார பீரங்கியாக இருக்கும் ஏ.எச்.எம். அஸ்வர் நேற்று தனது உரையை பெருமளவில் ஆங்கிலத்திலேயே ஆற்றினார். இதனால் தானோ என்னவோ ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை ஆதாரம் காட்டி புலிகளின் ஊடகப் பிரிவில் கடமையாற்றிய இசைப்பிரியா சனல் 4 இல் அறிவிப்பாளராகக் கடமையாற்றியதாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்றார் அஸ்வர்.

# பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பாதையில் இருகதவு பஸ்களுக்கு அனுமதி இல்லை

வடமராட்சி, ஜூன் 22

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சேவையில் ஈடுபடுவதற்கென இரு கதவுகளைக் கொண்ட மூன்றுபெரிய பஸ்கள் தயாராக இருக்கின்ற போதிலும்உரியவர்களின் அனுமதி கிடைக்காமையினால் அந்த பஸ்கள் முடங்கியுள்ளன.

'ஏ பி' தரத்தைக்கொண்ட பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சேவையில் ஈடுபடுவதற்கென வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் மூன்று அங்கத்தவர்கள் இரு கதவுகளைக் கொண்ட பெரிய பஸ்களை சொகுசாகச் செய்து சேவைக்குத் தயார் நிலையில் வைத்திருக்கின்றனர். இந்த நிலையில் இருகதவுகளைக் கொண்ட பெரிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அனுமதியை மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நிகழ்வுகள்

## திறப்பு விழா

மீசாலை, சாவகச்சேரியில் அமைந்துள்ள ''பழமுதிர்சோலை'' பழங்கள் சேகரித்தல், பதப்படுத்தல் மற்றும் விற்பனை நிலையம் திறப்பு விழா இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண பணிப்பாளர் கே.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஏ. சிவசுவாமியும், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சஞ்சிகை வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆன்மிக வெளியீடான ''ஒளிச்சுடர்'' சஞ்கையின் இந்த மாத இதழ் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவை உறுப்பினரான எஸ். அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வெளியீட்டுரையை பிரம்ம ஸ்ரீ [illegible] (நீர்வைமணி) [illegible] ரையை இளைப்பாறிய ஆசிரியர் க. நவரத்தினமும் நிகழ்த்துவார்கள்.

## நூல் வெளியீடு

யாழ் பல்கலைக்கழக கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி எழுதிய திருக்குறளும் முகாமைத்துவமும் என்னும் நூல் வெளியீடு எதிர் வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அதிபர் இ. இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். நகர் முஸ்லிம் பகுதியில் வைத்து

# லொறிகளில் பழைய இரும்பு ஏற்றப்பட்டதை ஒளிப்படம் எடுப்பதற்கு ராணுவத்தினர் தடை

### தளபதி ஹத்துருசிங்கவின் அனுமதி பெற்றபோதும் அது நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்வதற்காக யாழ். முஸ்லிம் வட்டாரப் பகுதியில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த லொறிகளில் கழிவு இரும்பு ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை உதயன் செய்தியாளர் படம் எடுக்கத் தயாரானார்.

அதை அவதானித்த இராணுவத்தினர் அவரை அழைத்து படம் எடுக்க முடியாது. அதற்கு அனுமதி இல்லை என்று கூறிவிட்டனர்.

இராணுவத்தினரின் முன்நிலையில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட லொறிகளில் நேற்று கழிவு இரும்புகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அதனையே ஒளிப்படம் எடுப்பதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை.

முஸ்லிம் கல்லூரி வீதி, மானிப்பாய் வீதி ஆகிய பகுதிகளில் வீதிகளின் மருங்கில் லொறிகள் தொடராக நிறுத்தப்பட்டு கடந்த நான்கு தினங்களாக பழைய இரும்பு ஏற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கழிவு இரும்புகளை தென்னிலங்கைக்குத் கொண்டு செல்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்ட நிலையிலேயே அவை லொறிகளில் இராணுவத்தினரின் முன்னிலையில் ஏற்றப்படுகின்றன.

இருந்தபோதிலும் யாழ். மாவட்டப் படைத்தளபதி மேஜர் மஹிந்த ஹத்துருசிங்கவின் அனுமதியுடனேயே ஒளிப்படம் எடுக்க முடியும் என்று அந்தப் பகுதியில் நின்ற இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் 'உதயன்' ஆசிரியர் பீடத்தினர் படைத்தளபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது குறித்து தெரிவித்து அனுமதி பெற்றனர்.

எனினும் படைத் தளபதியின் எழுத்து மூலமான அனுமதிக் கடிதம் இன்றி படம் எடுக்க முடியாது என்று அங்கிருந்த படையினர் மீண்டும் அடித்துக் கூறிவிட்டனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கழிவு இரும்பு ஒரு கிலோ 20 ரூபா முதல் 30 ரூபா வீதம் பெறப்பட்டு தென்னிலங்கையில் 60 முதல் 80 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 80பேர் கழிவு இரும்புகளை தென்னிங்கைக்கு அனுப்பி வருகின்றனர் என்றும் இந்த வியாபாரிகளுக்காக கழிவு இரும்பு சேகரிக்கும் செயலில் சுமார் 1500 பேர் வரையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பழைய இரும்பு வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-14)

# நிபுணர் குழுவின் 31 கேள்விகளுக்கும் அரசு இரகசியமாகப் பதிலளித்துள்ளது

### சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை அரசு மறுத்துள்ள போதிலும் அந்த அறிக்கையில் அரசிடம் கேட்கப்பட்டுள்ள 31 கேள்விகளுக்கு அரசு மிகவும் இரகசியமாகப் பதில் அளித்துவிட்டது என்று ஐ.தே.கட்சி நடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாகவும், சனல் - 4 வீடியோ காட்சி தொடர்பாகவும் சர்வதேசத்துக்கு விளக்கமளிக்க அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பாக சர்வதேச சமூகத்துடன் பேச்சு நடத்த அரசு முயற்சி எடுக்கவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பும் 'சனல்-4'இல் விடியோ காட்சி ஒன்று ஒளிபரப்பப்பட்டது. இதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு கூறியது. ஆனால், இது வரையும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துகளை - அவப்பெயர்களைத் தடுப்பது அரசின் கடமை. இது தொடர்பாக ஊடகங்களுடனேயோ, நாட்டு மக்களுடனேயோ அல்லது நாடாளுமன்றத்திலோ பேசுவதில் எதுவித பயனுமில்லை. சர்வதேசத்துடன்தான் பேசவேண்டும்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அரசு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனால், அந்த அறிக்கையில் அரசிடம் கேட்கப்பட்டிருக்கும் 31 கேள்விகளுக்கு அரசு மிகவும் இரகசியமாகப் பதில் வழங்கிவிட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஒருவர்கூட கொல்லப்படவில்லை என்று அரசு கூறுகிறது. இதை எவரும் நம்பமாட்டார்கள். இதை அரசு சர்வதேசத்திடம் விளக்கிக் கூறவேண்டும் - என்றார். (ஒ-சி)

# பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மனின் தெப்பத் திருவிழா 30 வருடங்களின் பின்

வடமராட்சி, ஜூன் 22

சுமார் 30 வருட கால இடைவெளிக்குப் பின்னர் பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயில் தெப்பத் திருவிழா பருத்தித்துறை கடற்கரையில் சிலதினங்களுக்கு முன்னர் சிறப்பாக நடைபெற்றது.

முன்னைய காலங்களில் தெப்பத்திருவிழா பருத்தித்துறை துறைமுக கடல் பகுதியில் நடைபெறுவதுண்டு. இந்த முறை நடராச கலை அரங்கு கடற் கரைப் பகுதியில் அது இடம்பெற்றது.

தெப்பத் திருவிழா தினத்தன்று மாலை 7 மணிக்கு அலங்காரச் சப்பறத்தில் அம்மன் கோயிலிலிருந்து புறப்பட்டு கடற்கரை வீதிவழியாக நடராசா கலை அரங்கு கடற்கரைப்பகுதியைச் சென்றடைந்து அங்கு கரையோரக்கடலில் ஏற்படுத்தப்பட்ட மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அம்மன் அமர்ந்திருக்க கடற்கரை மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மேளக்கச்சேரிகள் இடம்பெற்றன.

தொடர்ந்து அம்மனுக்கு அர்ச்சனைகள், விசேட பூசைகள் இடம்பெற்று நள்ளிரவு வேளை அம்மன் கோயிலை நோக்கிப் புறப்பட்டுச்சென்றது. எனினும் கடற்கரை மைதானத்தில் தெப்பத் திருவிழாவின் அம்சமாக இன்னிசைக்கச்சேரிகள் அதிகாலை வரை நடைபெற்றன.

மிகநீண்ட காலத்துக்குப் பின்னர் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற தெப்பத்திருவிழாவுக்கு பெருந்தொகையானோர் திரண்டிருந்தனர்.

இத்திருவிழாவுக்கு படையினர் முழுமையான அனுமதியை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-236)

# வன்னியில் கொல்லப்பட்ட மக்களுக்கு பிதிர்க்கடன் செலுத்துகிறது அரசு

### அமாவாசை தினத்தன்று விசேட பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வன்னி இறுதியுத்தத்தில் இறந்தவர்களின் ஆத்மசாந்திக்காக அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று வடமாகாணத்திலுள்ள சகல சிவாலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் மற்றும் மோட்சா அர்ச்சனைகள் என்பன இடம்பெறவுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இதன்படி இலங்கை முழுவதிலும் உள்ள சிவாலயங்களில் ஆடி அமாவாசைத் தினத்தன்று விசேட பூசைவழிபாடுகள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலுள்ள அனைத்து சிவாலயங்களிலும் இந்த வழிபாடுகளை நடத்தும்படி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பணித்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள சிவாலயங்களில் இந்த வழிபாடுகளை நடத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில்நேற்றுமுன்தினம் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச ரீதியில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பிரசித்தி பெற்ற சிவாலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இதனைத்தவிர ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள சிவாலயங்களிலும் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. அன்றையதினம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பகல் விசேடயாகம் நடைபெறவுள்ளது. அதேபோன்று திருக்கேதீச்சர ஆலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

# 3 தினங்கள் மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 22

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளையும் மறுநாளும் மற்றும் எதிர்வரும் திங்கட்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயங்களிலும்-

எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5. மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப்பகுதிகளிலும் -

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு மற்றும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பிரதேசம், கலட்டிப் பிரதேசம், பிறவுண் வீதியில் ஆடியபாதம் வீதியிலிருந்து கலட்டிச் சந்திவரை, கம்பஸ்லேன், தலங்காவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும்மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

# தபால் மூல வாக்களிப்புக்கு வடக்கில் 5,176 பேர் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 21

அடுத்த மாதம் 23ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கில் தபால் மூலம் வாக்களிக்க 5,176 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று யாழ். தேர்தல் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்த 384 பேரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

சாவகச்சேரி நகரசபையில் 276 பேரும் பருத்தித்துறை நகர சபையில் 173 பேரும் வல்வெட்டித்துறை நகர சபையில் 50 பேரும் நெடுந்தீவு பிரதேச சபையில் 68 பேரும் வேலணைப் பிரதேச சபையில் 92 பேரும் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் 38 பேரும் பருத்தித்துறை பிரதேச சபையில் 387 பேரும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் 542 பேரும் சாவகச்சேரி பிரதேச சபையில் 504 பேரும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் 433 பேரும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 554 பேரும் வலி.தென்மேற்கு பிரதேச சபையில் 351 பேரும் வலி. மேற்கு பிரதேச சபையில் 487 பேரும் நல்லூர் பிரதேச சபையில் 379 பேரும் காரைநகர் பிரதேச சபையில் 72 பேரும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் 44 பேரும் பூநகரி பிரதேச சபையில் 36 பேரும் கரைச்சி பிரதேச சபையில் 185 பேரும் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் ஜூலை மாதம் முதலாம் திகதி அனுப்பி வைக்கப்படும் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். ஜூலை 12ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு இடம்பெற உள்ளது. (உ-9)

# போக்குவரத்து விதிகளை மீறுவதாலேயே யாழ்ப்பாணத்தில் அதிகளவு விபத்துக்கள்

### 5 மாதங்களில் 25 பேர் சாவு என்கிறார் சட்ட வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 22

போக்குவரத்து விதிமுறைகளை மீறவதனாலேயே யாழ். மாவட்டத்தில் அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

கடந்த 5 மாதங்களில் 25 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குறிப்பாக போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய தகவல்கள் வாகனச் சாரதிகள் பலருக்குத் தெரியாது. அத்துடன் மது போதையில் வாகனம் செலுத்துதல், அதிக வேகத்துடன் வாகனம் செலுத்துதல் போன்றவற்றால் அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இவற்றில் இளம்வயதினரே அதிகளவில் விபத்துக்குள்ளாகி மரணமாகியுள்ளனர்.

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரங்கள் பெறும்போது வீதி ஒழுங்கு முறைகள் பற்றிய தகவல்களை முழுமையாக அறிந்து வைத்திருக்க வேண்டும். அதன் பிரகாரம் வீதியில் பயணித்தால் [illegible] களைத் தடுக்க [illegible] என்றார். (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் தீவக வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் பொருளாதார அமைச்சால் தீவகம் தெற்குப் பிரதேசத்தில் வேலணை இராசையா வீதி, புங்குடுதீவு சங்கத்தார் கேணி வீதி ஆகியவை புனரமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீதி புனரமைப்பிலும் மக்கள் பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதால் இது தொடர்பாக மக்களுடன் இன்று புதன்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

வேலணை இராசையா வீதிக்கான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு வேலணைப் பிரதேச சபை மண்டபத்திலும்,

புங்குடுதீவு சங்கத்தார்கேணி வீதிக்கான கலந்துரையாடல் இன்று மு.ப. 11 மணிக்குபுங்குடு தீவு பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் நடைபெறும்.

வேலணை, புங்குடுதீவுப் பகுதி மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் சமுகம் தந்து இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டு வீதிப் புனரமைப்புக்குத் தமது முழு ஒத்துழைப்பை வழங்குமாறு வேலணை பிரதேச சபையின் செயலாளர் கே.தவராஜா கேட்டுள்ளார். (த-7)

## கண்ணிகளை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும். எனினும், திட்டமிட்டப் படி 2020ஆம் ஆண்டுக்கு முன்னரே இப்பணிகள் பூர்த்தியடைந்துவிடும் என அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நேற்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான ரவி கருணா நாயக்க பிரதமரிடம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த ஆளும் கட்சிப் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் முற்றாக எப்போது அகற்றப்படும்? இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நாடுகள், அவற்றின் பங்களிப்புகள், அவற்றுக்கென செலவிடப்பட்டுள்ள தொகை என்ன? என்று ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுவிற்சர்லாந்து, டென்மார்க், பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன. சுவிஸ் 258.51 சதுர கிலோ மீற்றர், டென்மார்க் 1,336.29 சதுர கிலோ மீற்றர், பிரிட்டன் 690.59 சதுர கிலோ மீற்றர், இந்தியா 1,273.90 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நிலங்களில் இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

2002ஆம் ஆண்டு முதல் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 5,394.89 சதுர கிலோ மீற்றர் பரப்பளவான பகுதிகளில் மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பணிகளுக்கு இதுவரை 149 கோடியே 28 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, யூ.என்.எச்.சீ.ஆர். சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு மற்றும் பொருளாதார அமைச்சு என்பனவும் அனுசரணைகளை வழங்கி வருகின்றன என்றும் அவர் கூறினார்.

## பெற்றோலின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

உலக சந்தையின் விலை உயர்வுக்கு ஏற்ப உள்நாட்டில் விலை அதிகரிக்கப்படாததால் கூட்டுத்தாபனத்துக்கு 2009ஆம் ஆண்டில் 1, 232.4 கோடி ரூபாவும் 2010இல் 2692 கோடி ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கும் தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கும் மானிய விலையில் எரிபொருள் விநியோகிக்கப்படுவதன் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு லீற்றர் ஒன்றுக்கு 30 ரூபாவரை நட்டம் ஏற்படுகிறது. இதன் காரணமாக கடந்த வருடம் 2,007.4 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணையின் மானிய விலையால் 2010ஆம் ஆண்டு 1,023.6 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் எரிபொருள்களில் பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு 25 ரூபா தீர்வை அறவிடப்படுகிறது. டீச லுக்கும் மண்ணெண்ணைக்கும் தீர்வை அறவிடப்படுவதில்லை. இலங்கையில் பெற்றோலியப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதற்குக் காரணம் அரசு விதிக்கும் இறக்குமதித் தீர்வைகளே என்ற குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அமைச்சர் பிரேமஜயந்த குறிப்பிட்டார். (சி)

## அளவெட்டி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவப் பொலிஸ் மற்றும் இரு பொலிஸ் குழுக்கள் ஏற்கனவே விசாரணை நடத்திவருகின்றன. அவற்றுக்கு மேலதிகமாகவே கொழும்பில் இருந்து விசேட குழு வருகை தந்துள்ளது. இந்தக் குழு சுயாதீனமாக விசாரணைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அளவெட்டிச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, அளவெட்டிச் சம்பவம் குறித்து உரிய விசாரணைகளை நடத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார். தமது தேர்தல் கூட்டத்தினுள் புகுந்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியமை தேர்தல் வன்செயல் என கூட்டமைப்பினர் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இந்த அறிவுறுத்தலை அவர் வழங்கி உள்ளார். விசாரணை அறிக்கையை தேர்தல் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (உ-ஐ-9)

# ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று சிறப்புற நடைபெற்ற மீலாத் விழா




யாழ்ப்பாணம், ஜூன் 22

'பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்' என்ற தொனிப் பொருளில் மீலாத் விழா யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

வடமாகாண கல்வித் திணைக்களம், ஜி.ரி.இசற் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எஸ்.எ.எம். முபாறக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ். வலய பதில் கல்விப் பணிப்பாளர் வை.இரவீந்திரன், தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளரும், ஜி.ரி. இசற் நிறுவனத்தின் இணைப்பாளருமான இ.இராசையா, யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.மாணிக்கம், யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் ஒஸ்மானியாக் கல்லூரி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானத்தை, அமைதியை கட்டியெழுப்பக் கூடிய நிகழ்வுகள் எமது நாட்டுக்கு மிகவும் அவசியமானவை என இந்த விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள் தமது உரைகளில் குறிப்பிட்டனர். (த-14)

# உணவு கையாளும் நிலையங்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வேலணை, நயினாதீவு, நெடுந் தீவு, புங்குடுதீவு பகுதிகளைச் சேர்ந்த உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள், பணியாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அருணாபுண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறும். (த-7)

## தகவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் கூறியே இவ்வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இப்பிரேரணையைச் சமர்ப்பிக்க கருஜயசூரிய எழுந்தபோது பிரேரணைக்கு அரச தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இப்பிரேரணை கொண்டு வருவது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை என்று அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன கூறினார்.

கருஜயசூரிய இப்பிரேரணையைச் சமர்ப்பித்ததும் இதுதொடர்பில் அரச தரப்புக்கு ஆட்சேபனை இருந்தால் அந்த ஆட்சேபணையைத் தெரிவிக்கலாம் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தனவிடம் கூறினார். இதனை ஏற்றுக்கொண்டு தினேஷ் குணவர்தன அமர்ந்துவிட்டார்.

கருஜயசூரிய தனது பிரேரணையை சமர்ப்பித்ததும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அதை ஆமோதித்தார். அதன் பின்னர் இந்தப் பிரேரணைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதாக சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர் இப்பிரேரணை மீது வாக்கெடுப்பை நடத்தினார். பிரேரணைக்கு ஆதரவாக 34 வாக்குகளும், எதிராக 97 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதனால் பிரேரணை தோல்வியடைந்தது. 93 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வருகை தந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-சி)

தேவை

3 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு திருநெல்வேலி, நல்லூர், கந்தர்மடம் ஆகிய பகுதிக்குள் வீடு வாடகைக்கு/ விலைக்குத் தேவை.

தொ.பே.: 0776354224, 0750473269

ACADEMIC VACANCIES

யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி, கிளைகளில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில்சார் ஆங்கில வகுப்புக்களுக்கான பயிற்றுவிப்பாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தபால் , இ-மெயில் மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் கீழ்க்கண்ட முகவரியில் சமர்ப்பிக்கலாம். (Part time jobs)

Lecturer - English Language - Male / Female

The applicant Should Possess University Degree in English , Ability to conduct batch classes for Spoken English , Business English , IELTS and City & Guilds Language Programs , Age limit between 25 - 45.

Lecturer - Auto CAD - Male / Female

The applicant Should Possess a Recognised Diploma in Civil Drawing, Fluency in English, Ability to conduct batch classes for Engineering, Draftsmen, Architects Students , Age limit between 23 - 40.

ASIAN COMPUTER EDUCATION

# 2G, Stanley Road, Jaffna.

E-mail : asianedu@dialogsl.net

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் இலங்கையன் வீரசிங்கம்

தோற்றம் 05.03.1954 மறைவு 23.05.2011

கடந்த 23.05.2011 அன்று சிவபதமடைந்த எமது அன்பும் பாசமும் கனிவும் நிறைந்த தந்தையின் மறைவையறிந்து எங்களுக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், எம்முடன் கூட இருந்து இறுதிச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் பங்கு கொண்டவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (22.06.2011) புதன்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5, வீட்டுத்திட்ட ஒழுங்கை,
நாவற்குழி சந்தி. (5075)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழர் அரசியலின் உடனடித் தேவை

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டுத் தெரிவுக்குழு ஒன்றை அரசு நியமித்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும் என்று அரச தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், கூட்டமைப்புக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான ஆறாவது கட்டப் பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது.

நாளைய சந்திப்பில், அரசமைப்புக்கான 13 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த காணி, பொலிஸ், நிர்வாக அதிகாரங்களை 18 ஆவது சட்டத் திருத்தத்தின் கீழ் இல்லாமல் செய்தது குறித்துப் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேசுவதற்கு சமர்ப்பித்த ஒன்பது அம்சத் திட்டத்தில் இதுவும் ஒன்றாகும். இந்த மாத முற்பகுதியில் கொழும்பு வந்திருந்த இந்திய உயர்மட்டக் குழுவிடம், மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜனாதிபதி மஹிந்த வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிய பின்னர், இந்த விடயத்தில் ஆராய்வதற்கு அல்லது பேசுவதற்கு என்னதான் இருக்கப் போகிறது என்பது பெரிய புதிராகவே உள்ளது.

இதேவேளை-

சர்வதேச சமூகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்திருப்பதால், அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுகளைத் தொடரவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டிருப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் நடத்திவரும் பேச்சுக்களை நிறுத்திக்கொண்டால், அரசாங்கம் தனக்கு ஆதரவாக உள்ள தமிழ் அமைப்புக்களைப் பேச்சுவார்த்தைக்குப் பயன்படுத்தும் நிலைமை உருவாகும்; சகலதும் அரசு விரும்புவது போலவே நடந்தேறும் என்றும் அபாயச் சங்கு ஊதுகிறார் தலைவர் சம்பந்தன்.

அது மட்டுமன்றி-

இலங்கை அரசு மீது சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்துடனேயே, கூட்டமைப்புடனான பேச்சுக்களை அரசு ஆரம்பித்தது என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இவற்றைக் கருத்தில்கொள்ளும்போது அரசு கூட்டமைப்புப் பேச்சுக்கள் தொடரவேண்டும் என்பது சரியான நிலைப்பாடு எனக்கொள்ள இடமுண்டு.

இதற்கிடையில்-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலரை, அரசு தனது பக்கத்துக்கு "விலை" கொடுத்து வாங்குவதற்கு முயற்சிப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

வன்னி மாவட்டத்தின் அபிவிருத்திக்குப் பெருந்தொகையை தந்து உதவலாம் என்று ஆசைகாட்டி, அந்தப் பிரதேசத்தின் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரை அரசு தனது பக்கம் கவர்ந்திழுக்க வலை வீசுவதாகச் சொல்லப்படுகிறது.

அதேபோன்று, கிழக்கு மாகாணத்தின் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கி, தனது பக்கத்தில் சேர்த்துக்கொள்ள அரசு தூண்டில் போட்டுள்ளதாகப் பேசப்பட்டது.

இவற்றை வெறும் வதந்திகள் என்று தட்டிக்கழித்து விடக்கூடாது. தமது சலுகைகள், பதவிகளுக்காக கொள்கைகளைக் காலால் மிதித்துவிட்டு, மக்கள்-தமது வாக்காளர்கள்-தம்மீது வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கும் தமிழ் அரசியல்வாதிகள் -அரசியல் தலைவர்களின் பட்டியல் மிக மிக நீண்டது.

சி.மகாதேவா, சி.சுந்தரலிங்கம், ஜி.ஜி.பொன்னம்பலம் தொடக்கம் குமாரசூரியர், இராசதுரை, லக்ஷ்மன் கதிர்காமர் முதலானோர் வரிசை இந்த இக்கட்டான வேளையில் நீண்டு வளர்வதற்கு இடமளிக்கக் கூடாது.

அரசியலுக்குள் புகுந்தவர்களை இலகுவில் பற்றிப் படர்வது பதவி ஆசை. தமிழ் மக்களுக்குரிய, அவர்களுக்குச் சேரவேண்டிய அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு மிக வாய்ப்பான காலம் இது. சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டை ஆட்சி செய்த எந்த அரச தலைவர் மீதும் விழாத பரிமாணத்தில், சர்வதேச அழுத்தம் என்ற பென்னம் பெரிய பாறாங்கல் மஹிந்த அரசின் மீது விழுந்துள்ளது. அந்தக் கல்லை ஒரு சில அடிகள் நகர்த்தி மூச்சு விடுவதற்கு, தமிழர் விவகாரத்தில் நியாயமாக நடந்துகொள்ளவேண்டிய தேவை அரசுக்கு உண்டு.

இதனைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற கூட்டுக்குள்ளே, அரசு சுவை நிறைந்த கனிகளை இட்டு உடைத்துவிட இடமளிக்கக் கூடாது.

இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமும், உயர் பீடமும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். ஆதரவு தமிழர் திசையை நோக்கி நகரும்போது, இப்போதைய மக்கள் பிரதிநிதிகள் விலைபோகாமல், துரோகிகளாக மாறாமல் பார்த்துக்கொள்வது தலைமைத்துவத்தின் பொறுப்பு மிகுந்த கடனாகும். அதுவே இப்போதைய முதற் தேவையும் ஆகும்.

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெருந்திருவிழா ஜூலை 1 இல் ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஜூன் 22

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் பெருந்திருவிழா நிறைவடையும். ஆலய விஷேட உற்சவ தினங்கள் வருமாறு:

* 1.7.2011- வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம்.
* 5.7.2011 - செவ்வாய்க்கிழமை இரவு முத்துச் சப்பறம்.
* 7.7.2011 - வியாழக்கிழமை இரவு கைலைக்காட்சி.
* 9.7.2011 - சனிக்கிழமை பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம்.
* 10.7.2011 - ஞாயிற்றுக்கிழமை பகல் சிவபூசை கைலைக்காட்சி, இரவு திருமஞ்சம்.
* 11.7.2011 - திங்கட்கிழமை பகல் விஷேட கருட சர்ப்ப பூசை. வாயுபட்சணி நாகம் வீதியுலா (இரவு பூந்தண்டிகை)
* 13.7.2011 - புதன்கிழமை பகல் கைலைக்காட்சி, இரவு சப்பறம்.
* 14.7.2011 - வியாழக்கிழமை தேர் காலை 9.30 மணி.
* 15.7.2011 - வெள்ளிக்கிழமை காலை தீர்த்தம். இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம்.
* 16.7.2011 - சனிக்கிழமை இரவு தெப்போற்சவம் (பூங்காவனம்)

யாத்திரிகர்களின் நலன் கருதி வழமைபோன்று அனைத்துச் சேவைகளும் சிறந்த முறையில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என ஆலய அறங்காலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-7)

# வடக்கில் உள்ள சமுர்த்தி அலுவலர்களுக்கும் தெற்குப் பணியாளரைப் போன்று உரிமைகள்

## தொழில்சங்கத் தலைவர் ஸ்ரீ கமகே தெரிவிப்பு

வலி. வடக்கு, ஜூன் 22

தென்னிலங்கையில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் வடக்கில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் தென்னிலங்கைத் தொழிற் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ கமகே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் தொழிற்சங்கத் தலைவர் எஸ். ஐங்கரன் தலைமையில் சமுர்த்தி அலுவலர்களுக்கான கூட்டம் ஒன்று யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஸ்ரீ கமகே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

கடந்த காலங்களில் நாட்டுச் சூழ்நிலை காரணமாக நாம் இணைந்து செயற்பட முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அத்தகைய நிலைமை இல்லை. எதிர்காலத்தில் நாம் அனைவரும் இணைந்து செயற்படுவதன் மூலமே எம்மைப் பலப்படுத்திக் கொள்ளலாம். எமக்கு வேண்டியவற்றை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

1995 ஆம் ஆண்டு சமுர்த்தி அலுவலர்கள் தென்னிலங்கையில் நியமனம் செய்யப்பட்ட போதும் யாழ். மாவட்டத்தில் 1998 ஆம் ஆண்டிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கத்துக்கு மேலதிகமாக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கென நலன்புரி சங்கம் அமைத்து அதன் மூலம் ஊழியர்களுக்குப் பல்வேறு உதவிகளையும் செய்துவருகின்றோம்.

இதேபோன்று ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து அதன் மூலம் ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்தும் வருகின்றோம். இத்தகைய செயற்பாடுகளினால் தென்னிங்கையில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்கள் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக் கொள்கின்றனர் என்றார். (த-86)

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

## வீடு வீடாகச் சுகாதாரப் பரிசோதகர் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 22

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வீடுகள், சுற்றுப்புறங்களை வேலணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

அப்பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படும் இடங்களின் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து பொதுமக்கள் வழங்கும் புகார்கள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகச் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கடம்பேஸ்வரன், ம. அனுசூதனன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (த.7)

# நயினாதீவு மின் விநியோகத்துக்கு 180 கே.வி. புதிய மின் பிறப்பாக்கி

யாழ்ப்பாபணம்,ஜூன் 22

நயினாதீவுக்கான மின்சார விநியோக சேவைக்கென 180 கிலோ வாற்ஸ் வலுக் கொண்ட புதிய மின் பிறப்பாக்கி ஒன்றை இலங்கை மின்சார சபை வழங்கியுள்ளது. இந்த மின் பிறப்பாக்கியை நயினாதீவுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை வடக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திர சி.விஜயகுணரட்ண மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே நயினாதீவில் 250 கிலோ வாற்ஸ் வலுக் கொண்ட இரண்டு மின் பிறப்பாக்கிகள் சேவையில் உள்ளன. மக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள நயினாதீவின் தென்பகுதி மக்களுக்கு சீரான மின்விநியோகம் இடம் பெறவில்லை எனவும், ஐஸ்கிறீம் கடைகள் போன்ற தனியார் விற்பனை நிலையங்களுக்கு மின் விநியோகம் ஒழுங்காக உள்ள போது தமக்கு மட்டும் மின் விநியோகம் சீரற்ற முறையில் உள்ளது ஏன்? என்றும் இந்தப் பகுதியிலுள்ள பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்த நிலையில் இந்தப் புதிய மின் பிறப்பாக்கி நயினாதீவுக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது. இதன் மூலம் நயினாதீவில் மின் விநியோகத்தைச் சீராக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(து-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் படகுச் சேவையை நிறுத்துவோம்

## நயினாதீவு படகு உரிமையாளர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

குறிகாட்டுவான்- நயினாதீவு இடையிலான பயணிகள் படகுக் கட்டணத்தை 10 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் எனவும், எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் இது குறித்த பதிலைத் தராவிட்டால் இரு துறைமுகங்களுக்கும் இடையிலான படகுச் சேவையை நிறுத்திவிடப் போவதாகவும் நியினாதீவுப் படகு உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயப் பெருந் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நயினாதீவில் நடைபெற்றது.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் படகு உரிமையாளர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

கட்டண அதிகரிப்பு தேவையற்றதெனவும், தற்போது அறவிடப்படும் தொகையான 20 ரூபாவைத் தொடர்ந்தும் அறவிடலாம் எனவும், படகு உரிமையாளர்களுக்கு இதனால் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படமாட்டாதெனவும் அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும், படகு உரிமையாளர்கள் தமது கோரிக்கையில் இருந்து விட்டுக் கொடுக்க முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கட்டண அதிகரிப்புத் தொடர்பாக யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு முடிவை அறிவிப்பதாக வேலணை பிரதேச செயலர் நந்தகோபாலன் படகு உரிமையாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் ரவீந்திர சி. விஜயகுணரட்ண, ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள், நாகதீப ரஜமகா விகாராதிபதி பதுமகீர்த்தி தேரர், படகு உரிமையாளர்கள், கிராம அலுவலர் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-7)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் யாழ். வணிகர் கழகம் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச செயலர், கிராம சேவகர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 15 பிரதேச செயலகங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது வாழ்வாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் என்ற ரீதியில், ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலிருந்தும் 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பயனாளிகளுக்கு கோழிக்கூடு, 30 கோழிகள், தீவனங்கள், உணவு வைக்கும் பாத்திரங்கள் என்பனவற்றை வணிகர் கழகம் வழங்கி வருகிறது.

அதிகளவான மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள மருதங்கேணி, சாவகச்சேரி காரைநகர், நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள தலா 10 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

ஏனைய 8 பிரதேச செயலகங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு இந்த மாத இறுதிக்குள் குறித்த வாழ்வாதார உதவிகளும், போசாக்குக் குறைவான சிறுவர்கள், பெண்கள் மற்றும் பொருளாதார வசதி இல்லாதோர் ஆகியோருக்கான உதவி களும் வழங்கப்படவுள்ளதாகவும் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. யாழ். பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 10 குடும்பங்களுக்கு இந்த வாழ்வாதார உதவிகளை வணிகர் கழகம் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-311)

# தென்மராட்சிப் பாடசாலைகளில் போசாக்கு விழிப்புணர்வு நிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 22

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 20 பாடசாலைகளில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் 'வளர் இளம் போசாக்கு' என்னும் நிகழ்வுகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை பிரதேசத்தைச் சேர்ந்த 1ஏபி, 1 சி, வகை II ஆகிய பாடசாலைகளில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தரம் 7,10,11,12,13 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய 100 பேர் உள்வாங்கப்பட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றனர்.

மாணவர்களிடையே நடத்தை மாற்றத்தைக் கொண்டு வந்து போசாக்கு மட்டத்தை உயர்த்துதல் எனும் தொனிப்பொருளில் போசாக்கு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நிகழ்விலும் போசாக்கு தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படுவதுடன் போசாக்குக் குறைவினால் ஏற்படக்கூடிய நோய்கள் அவை ஏற்படாதிருக்கக்கூடிய ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு போசாக்குக் குறைந்த தரம் 7,10 வகுப்பு மாணவர்களுக்கு மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

போசாக்குத் தொடர்பான கண்காட்சியும் நூல்வெளியீடும் விரைவில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

## கல்வியில் மட்டுமல்ல...



*மக்களுக்கு உதவுவோம்: டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் வேலணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிரமதான நிகழ்வில் மாணவர்கள் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.* (த-7)

# வெதுப்பகங்களின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

நிறை குறைவான பாண் விற்பனை செய்த வெதுப்பக உரிமையாளர் இருவருக்கு யாழ்.நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ்.மாவட்ட அளவீட்டுச் சேவைகள் உபாயங்கள் பரிசோதகர்கள் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது 450 கிராம் நிறை குறைவான பாண் விற்பனை செய்த இருவர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

கோப்பாய்,யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள மேற்படி வெதுப்பக உரிமையாளர்கள் இருவரும் யாழ்.நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதிவான் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்தார். (த-9)

# ஆனைக்கோட்டைப் பகுதியில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு

நவாலி, ஜூன்22

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஆதவன் பாலர் பாடசாலையில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பாளரால் சட்ட ஆவணங்கள் வழங்கும் நடமாடும் சேவையொன்று கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்தச் சேவையில் வடக்கு மாகாணப் பதிவாளர் நாயகம் திருமதி இராசரட்ணம், அந்தப் பிரிவு கிராம சேவையாளர் ஓ.நிசாந்தன், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதில் நீண்டகாலமாகப் பதிவு செய்யப்படாமலிருந்த காலம் கடந்த பிறப்புப் பதிவு, இறப்பு பதிவு, திருமணப் பதிவு போன்ற பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

காலை முதல் மாலை வரை இடம்பெற்ற இந்த நிகழ்வில்



சான்றிதழ்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு தமது தேவைகளை முன்வைத்ததாகவும் அவற்றில் உடனடியாக தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காலம் கடந்த சில பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் தொடர்பாகவே இந்த நடமாடும் சேவையில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், அவற்றை முன்வைத்த மக்களுக்கு பதிவுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு [illegible] பட்டதாவும் மேலும் கூறப்பட்டது. (த-100)

## ஊர்காவற்றுறைப் பகுதியில்

# சட்ட விரோதமாக மதுபானம் விற்ற 10 பேருக்கு ரூ.90 ஆயிரம் அபராதம்

ஊர்காவற்றுறை, ஜூன் 22

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 10 பேருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் யாழ்.மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ். கிருபாகரன் தலைமையில் சென்ற குழுவினர் திடீர் சோதனையில் ஈடுபட்ட சமயம் மேற்படி 10 பேரும் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா, கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்மணியொருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும், சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும், சட்டவிரோத கள் விற்பனையில் ஈடுபட்ட 6 பேருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமும், செலுத்தத்தவறின் 6 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, புங்குடுதீவுப் பகுதியில் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமும், செலுத்தத் தவறின் 6 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தப் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து யாழ். மதுவரித் திணைக்களம் இத்தகைய திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகப் பொறுப்பதிகாரி எஸ்.கிருபாகரன் தெரிவித்தார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக மோசமான சேதங்களுடன் வலி.தென்மேற்கு பிரதான வீதிகள்

## வாகனங்களைச் செலுத்துவதில் பெரும் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகள் சில மிக மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் அந்த வீதிகளூடான போக்குவரத்தில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதுடன் விபத்துக்களையும் சந்திக்க வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. சில வீதிகள் 'காப்பெற்' வீதிகளாக மாற்றம் பெறுகின்றன.

எனினும், அந்தப் பலன் வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளுக்குக் கிட்டவில்லையா என அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளான யாழ். - மானிப்பாய் வீதியில் ஆனைக்கோட்டையில் இருந்து மானிப்பாய் சந்தி வரையான பகுதி மோசமான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. அதே வீதியில் மானிப்பாய் சந்தியில் இருந்து சண்டிலிப்பாய் செல்லும் வீதியும், சண்டிலிப்பாயில் இருந்து தொட்டிலடி ஊடாகப் பண்டத்தரிப்பு செல்லும் வீதியும் விளாவெளிச் சந்தி வரை கடுமையான சேதங்களுடன் காணப்படுகிறது. அத்துடன், பண்டத்தரிப்பு- கீரிமலை வீதியில் விளான் சந்தி முதல் இளவாலை வரையான பகுதிகளிலும் சேதங்களுக்குக் குறைவில்லை.

வலி.தென்மேற்குப் பகுதியின் பிரதான போக்குவரத்து மார்க்கங்களாக மேலே குறிப்பிட்ட வீதிகள் உள்ளன.

காலை வேளையில் தொழில் நிமித்தம் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் பயணிப்பவர்களும், இந்த வீதிகள் ஊடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களின் சாரதிகளும் வாகனங்களைச் செலுத்திச் செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதை நேரடியாகக் காணமுடிகின்றது.

அத்துடன், வீதிகள் இவ்வாறு மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் இந்தப் பகுதிகளில் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இவை வீதிகளா அல்லது கற்கள் கிளறப்படும் இடங்களா என்று கேள்வி எழுப்பும் அளவுக்கு இவற்றின் நிலை மிக மோசமாக உள்ளது.

இந்த வீதிகள் இவ்வாறு சேதத்துக்குள்ளாகி நீண்ட காலம் கடந்துள்ள போதும் அவற்றைத் திருத்தியமைப்பதற்கான எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்துப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பொழுதே மோசமாகச் சேதமுற்றுள்ள இந்த வீதிகளின் நிலை மழைகாலம் ஆரம்பித்தால் எப்படியிருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் உரிய தரப்புக்கள் அதிக கவனம் எடுத்து இந்த வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

# வீதி விபத்தில் தம்பதிகள் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

இரு மோட்டார் சைக்கிள்கள் எதிரெதிரே மோதுண்டதனால் மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்த கணவனும் மனைவியும் காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த தி.ஆனந்த நடேசன் (வயது-51), ஆ.விஜயகலா (வயது-40)ஆகியோரே காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-4)

# மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

கொழும்புத்துறை ஜூன் 22

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அரியாலையில் நடைபெறவுள்ளது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் இந்தக் கல்வித்திட்ட உதவியானது கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

சங்கத்தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கே.பொன்னம்பலமும், சிறப்பு விருந்தினராக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.உதயகுமாரும் கலந்துகொள்வர்.

வாழ்த்துரையை சயன்ஸ் அக்கடமி இயக்குநர் சரா. புவனேஸ்வரனும், பாராட்டுரைகளை யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம், ஸ்ரீமுருகன் ஜூவலறி உரிமையாளர் த.மணிவண்ணன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

இந்தப் புலமைப்பரிசில் உதவித் திட்டமானது அரியாலைப் பிரதேசத்தில் வாழும் மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடைந்தமைக்காக வசதி குறைந்த மாணவர்களைத் தெரிவு செய்து வருடாந்தம் வழங்கப்படுகிறது. (த-135)

# மரத்தில் ஏறிய சிறுமி கிளை ஒடிந்ததால் கீழே விழுந்தாள்

யாழ்ப்பாணம், ஜூன் 22

தேக்கமரத்தில் பழம் பிடுங்குவதற்காக மரத்திலேறிய சிறுமி மரக் கிளை ஒடிந்ததனால் கீழே விழுந்து காயங்களுக்குள்ளாகி தற்போது சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கச்சாய் தெற்கு, கொடிகாமத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த அ.மேரி றொக்சினி (வயது-10) என்பவரே காயங்களுக்குள்ளானவர் ஆவார்.

அவர் உடனடியாகச் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த-4)

## மக்களுக்காக...



சேவை மனப்பான்மை: தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையம் வலி.வடக்கு பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவையும் இணைந்து மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடமாடும் சேவை ஒன்றை நடத்தின. இதில் காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா, பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், வைத்தியர்கள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், பிரதேச செயலக ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-86)

# பஸ் மிதி பலகையில் பயணம் செய்த மாணவர் மீது பொலிஸார் தாக்குதல்

## நல்லூரில் இருந்து பாடசாலைக்கு நடந்து சென்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 22

அளவுக்கு அதிகமாகப் பாடசாலை மாணவர்களை ஏற்றியபடி பயணித்த பாடசாலைச் சேவை பஸ்ஸில் மிதி பலகையில் நின்று பயணம் செய்த உயர்தர வகுப்பு மாணவர்களைப் பொலிஸார் தாக்கியதாக அந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் அச்சுவேலியிலிருந்து புறப்பட்ட 750 இலக்க ஆண்களுக்கான பாடசாலை பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

750 இலக்கப் பாதையில் அச்சுவேலியிலிருந்து புறப்படும் பஸ்ஸில் அளவுக்கு அதிகமான மாணவர்கள் ஏற்றப்பட்டதாவும் இதனால் உயர்தர வகுப்பு மாணவர்கள் மிதிபலகையில் நின்று பயணம் செய்ததாகவும் தெரிவித்தனர்.

நல்லூரில் வீதிப் போக்குவரத்துக் கடமையில் பொலிஸார் இருப்பதை அவதானித்த நடத்துநர் மிதிபலகையில் நின்ற மாணவர்களைத் தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும், அத்துடன் பொலிஸார் மிதிபலகையில் பயணம் செய்த தம்மைத் தாக்கினார்கள் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பஸ்ஸில் பயணம் செய்த தாம் இறக்கப்பட்ட பின்னர் சிறிய வகுப்பு மாணவர்கள் மட்டும் பஸ்ஸில் பயணம் செய்தனர் எனவும் உயர்தர வகுப்பு மாணவர்கள் கால்நடையாகவே பாடசாலைக்குச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குறித்த சேவையில் ஈடுபடும் பஸ் கடந்த வாரத்தில், 3 நாள்கள் சேவையில் ஈடுபடவில்லை என்றும் பாடசாலை முடிவடைந்த பின்னர் நேரம் தாழ்த்தியே பஸ் வருவதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

மேலும் அச்சுவேலியிலிருந்து மாணவர்களை ஏற்றிச் செல்லும் போது கோப்பாய் சந்திக்குப் பின்னர் மாணவர்கள் குறித்த பஸ்ஸில் இட நெருக்கடி காரணமாக ஏற்றப்படுவ [illegible] [illegible]ருந்து நீர்வேலி வரையான பிரதேசங்களில் உள்ள மாணவர்களை ஒரு பஸ்ஸிலும், நீர்வேலியிலிருந்து யாழ்ப்பாணம் வரையான பிரதேசங்களில் உள்ள மாணவர்களை இன்னொரு பஸ்ஸிலுமாக ஏற்றி இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபட்டன எனவும் தற்போது ஒரு பஸ்ஸே சேவையில் ஈடுபடுவதால் இந்த நெருக்கடி ஏற்படுவதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்வங்கள் தொடர்பாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அலுவலக நிமித்தம் முல்லைத்தீவு சென்று கொண்டிருந்ததாகவும், குறித்த விடயம் தொடர்பாகத் தான் கவனமெடுப்பதாவும் தெரிவித்தார். (த-15)

# ஆயர் தின விழா

பருத்தித்துறை, ஜூன் 22

யாழ். ஆயுர் தினவிழா எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட திருநாளை முன்னிட்டு நடைபெறும் இந்த விழாவில் ஆயரின் பணிக்காகவும், நல்வாழ்வுக்காகவும் இறையாசி வேண்டி திருப்பலிப்பூசையும் இடம் பெறவுள்ளது. (த-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் செய்யவில்லை இலங்கை

## நோர்வே நாட்டு அதிகாரி தெரிவிப்பு

ஒஸ்லோ, ஜூன் 22

இலங்கையில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது இலங்கை அரசோ, அரச படைகளோ யுத்தக் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று நோர்வே பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் தலைவர் சொல்க் ஆர்.ரோவின் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு மற்றும் பாதுகாப்புப் படையினர் யுத்தக் குற்றங்களை மேற்கொள்ளவில்லை என்பதை சர்வதேச நீதிமன்றத்தில் போதுமான சாட்சியங்கள் மற்றும் தடயங்களுடன் நிரூபிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மறுபுறத்தில் விடுதலைப்புலிகள் போர்க்குற்றங்களை இழைத்த காலகட்டத்தில் அவற்றைக் கண்டும் காணாத நிலையில் நோர்வே அரசு நடந்து கொண்டதாகவும் குற்றம் சாட்டியுள்ள அவர், அதற்கான ஆதாரங்களும் தன்னிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது மனைவி அடேல் ஆகியோர் கூட போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் தான் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மேலும், சிறுவர் போராளிகளின் கழுத்துகளில் அடேல் சயனைட் குப்பிகளை அணிவிக்கும் காட்சிகள் அடங்கிய காணொளிகள் தம்வசம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் யுத்தக் குற்றவாளியொருவரான அவரை பிரித்தானிய அரசு சுதந்திரமாக நடமாட விட்டுள்ளதாகவும் மேற்படி பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். (வ)

## டெங்கு ஒழிப்பு சிரமதான பணி

தென்மராட்சி, ஜூன் 22

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் சிரமதானப் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக் களத்தினரும் படையினரும் சாவகச்சேரி நகர சபையினரும் இணைந்து பொதுமக்கள் கூடும் இடங்களில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றனர். எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மேற்படி சிரமதானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

## புலோலி தபால் நிலையம் இடமாற்றம்

புலோலி உபதபாலக நிலையம் மந்திகையில் உள்ள ஆஸ்பத்திரி வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மந்திகை பொதுச் சந்தைக்கு அருகில் சாவகச்சேரி வீதியில் இயங்கி வந்த புலோலி உப தபால் நிலையம் இயங்கிவந்தது.

தற்போது மந்திகை ஆஸ்பத்திரி வீதியில், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எதிர்ப்புறத்தில் உள்ள கட்டடத்துக்கு புலோலி உப தபால் நிலையம் இடமாற்றப்பட்டு இயங்கி வருவதாக உபதபாலதிபர் தெரிவித்தார்.

(த-236)

# போர்க்குற்றத்துக்காக இலங்கை மீது பிரிட்டன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழ் இளையோர் அமைப்புக் கோரிக்கை

லண்டன், ஜூன் 22

இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற உண்மைச் சம்பவத்தை சனல் - 4 தொலைக்காட்சி 'சிறீலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப்படம் மூலம் ஒளிபரப்பியமைக்கு பிரிட்டன் தமிழ் இளையோர் அமைப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது. இனியாவது இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக அந்த நாட்டு அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அமைப்பு பிரிட்டன் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இடம்பெற்ற பயங்கரத்தை எதுவித இணக்கமும் இன்றி ஒளிபரப்பியது ஒரு திறமையான புலனாய்வு ஊடகத்திற்கு உதாரணமாகும். இந்த விவரணக்காட்சி போர் குற்றம் மற்றும் மனிதநேய குற்றம் ஆகியவற்றிற்கு அழிக்க முடியாத ஆதாரம். அது மட்டுமின்றி கொடுமைகள் உலகில் எந்த மூலையில் நடந்தாலும் அதை வெளிச் சத்திற்குக் கொண்டு வரவேண்டியது அனைத்து ஊடகவியலாளர்களின் கடமை என்பதை உணர்த்துகின்றது.

2009 இல் புலம்பெயர் தமிழ் மக்களால் பிரிட்டன் உட்பட பல நாடுகளின் வீதி களில் இலங்கையின் வடக்கு, கிழக் கில் இடம்பெறும் தமிழர் மீதான சித்திரவதை களை நிறுத்த சர்வதேச தலையீட்டைக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆனால் அவை அனைத்தும் புறக் கணிக்கப்பட்டன. பிரிட்டன் மற்றும் அமெ ரிக்கா ஆகிய நாடுகள் எமது வேண்டு கோள்களை சாந்தப் படுத்துவதற்காக பொது அறிக்கைகள் வெளியிட்டன. இந்த குற்றங்களை விசாரிக்க வேண்டிய ஐ.நா. சபை இலங்கையில் ஆயிரக் கணக்கான மக்கள் பொது இடங்களையும் வைத்திய சாலைகளையும் குறி வைத்துத் தாக் கும் குண்டு வீச்சில் மரண மடைகின்ற னரா என்று அவர்களின் அதிகாரிகள் கொடுத்த அறிக்கையை நிராகரித்து விட்டது.

இதன் மீது நடவடிக்கை எடுக்காதது உலக நாடுகளின் மிகப் பெரிய குற்றம்.

பிரிட்டன் தமிழ் இளையோர் அமைப்பு முக்கியமாக இறுதி மூன்று வருட போரில் பிரிட்டன் நடவடிக்கைகளை கூர்ந்து அவதானிக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக போர்குற்ற விசாரணையில் குற்றவாளியாக நிற்பவர்களுக்கு 13.6 கோடி பவுண்கள் [illegible] பனை செய்துள்ளது. இப்போதும் பிரிட்டன் தொடர்ந்து இலங்கை அரசின் இராணுவத்திற்கும் பண உதவி அளித்து வருகின்றது.

போரின் போது அரசாலும் இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களால் பாதிப்படைந்திருக்கும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு எதிர்ப்புத் தெரிவிக்கும் என எதிர்பார்த்ததை இரண்டு வருடங்களிற்கு பின் இலங்கை நிரூபித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை கொண்டு வருவது சர்வ தேச சமூகத்தின் கையில் தங்கியுள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(வ)

**அன்னபூரணி அம்பாள் சைவ உணவுச்சேவை**

சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்றவிதத்தில் தரமானதாக வாடிக்கை யாளரின் விருப்பத்திற்கேற்பத் தயாரித்து வழங்கப்படும்.

திருமதி திருச்செந்தில்நாத சர்மா (செந்தில் ஐயா)

உடுவில் வீதி, மானிப்பாய்.
தொ.பே: 0774087168

**வேலைக்கு ஆள்கள் தேவை**

சுஜானாஸ் ரெக்ஸ்ரைல்ஸிற்கு வேலைக்கு ஆள்கள் தேவை. அனுபவமுள்ளோர்கள் மற்றும் பழக விரும்புவோர்களும் தேவை. வயதெல்லை 18 - 24 வயதுக்குட்பட்ட ஆண்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுஜானாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.24 A, மின்சார நிலைய வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5843

**மலிவு விற்பனை**

100 இற்கும் மேற்பட்ட புதிய மொடல் SONY Wega Flat 21"-29" TV கள், 12000/= முதல். 50 இற்கும் மேற்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் (இரட்டைக் கதவு) DTS அம்பிளி பயர்கள், DVD, Computer என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0771395670,0778449829
R.S.மகேஸ்வரன் (அப்பனக் கொம்பனி)
ஆரம்ப பாடசாலை அருகில் (சீனிப்புளியடி) K.K.S.வீதி, இணுவில்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் (விலை ரூபா 150) 30.06.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

**கொவிசெத**
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 812
சீட்டிழுப்பு திகதி 20.06.2011

எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 13 17 24 25

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,000,000.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 16 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 331 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 672 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16338 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9275 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 233094 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 36829 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,057,260.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,540,720.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு [illegible]
இணையதளம்: www.nlb.lk

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

கந்தையா குகதாசன்

தோற்றம்: 27.02.1957

மறைவு: 08.05.2011



கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.06.2011) வியாழக்கிழமையும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 25.06.2011 சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் எங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

துப்பிளான் தெற்கு,
ஏழாலை.

கு.ஜெயராஜேஸ்வரி
(மனைவி)

(சி/998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணை அவசியம்; மேற்குலக அமைச்சர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 22

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு அறிக்கையின் அடிப்படையில் சிறிலங்கா மீது போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் மற்றும் பிரான்ஸ் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேனாட் குச்னர் ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நிபுணர்குழு அறிக்கையின் மீது ஐ.நா பொதுச்செயலர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். இலங்கை அரசு இதற்குப் பதிலளிப்பதற்கு உடனடியாக காலக்கெடு ஒன்றை வழங்க வேண்டும் என தமது நாட்டு அரசுகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

''ஐ.நா. அறிக்கையின் பரிந்துரைகளின்படி இலங்கை அதிகாரிகள் போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்கத் தவறினால், அனைத்துலக விசாரணைக்கான ஏற்பாடுகளை தொடங்க வேண்டும்.

''உள்நாட்டுமற்றும் அனைத்துலக சட்டங்களின் படி, பொறுப்புக்கூறுதல் என்பது ஒரு கடமையாகும் என்று வலியுறுத்தியுள்ள இவர்கள், இவற்றுக்குப் பொறுப்பான இலங்கை இராணுவ மற்றும் குடியியல் அதிகாரிகள் அனைத்துலக குற்றச் செயல்களுக்காக பொறுப்பேற்க வேண்டும்'' என்றும் கூறியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு இலங்கைக்குச் சென்ற போது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் வடக்கில் படை நடவடிக்கைளின் போது பொது மக்களின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று அழுத்திக் கூறியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ச)

## புதிய ஒப்பந்தம்...



இலங்கையில் சார்க் கலாசார நிலையம் அமைப்பது தொடர்பிலான ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் சார்க் அமைப்பின் பொதுச் செயலாளர் பாத்திமாத் தியனான் ஷஹீட் ஆகியோர் நேற்று கைச்சாத்திட்டனர்.(ச)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு விரைவில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 22

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 24ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் மூன்று வார காலத்திற்குள் மாணவர்கள் தங்களின் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியுமென தேசிய கல்வியியற் கல்லூரி ஆணையாளர் திஸ்ஸஹேவாவிதாரண தெரிவித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் வருடம் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

இந்தமுறை மூவாயிரத்து 200 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள அதேவேளை, இதில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர் பயிற்சி நெறிக்கே கூடுதலான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

# தொழிலாளர் மீதான தாக்குதல்; நாடாளுமன்றத்துக்கு அறிக்கை

## வேண்டும் என்கிறது ஐ.தே.க.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஆணைக் குழுவின் அறிக்கையை அரசு நாடாளு மன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். காலத்துக்கு காலம் பல்வேறு நோக்கங்களுடன் அரசு ஆணைக்குழுக்களை நியமித் தது. ஆனால் அந்த ஆணைக் குழுக்கள் கண்டறிந்த விடயங் களும் சிபாரிசுகளும் கிடப்பில் போடப்பட்டு விடுகின்றன.

இந்த அறிக்கைகள் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

# பழைய இரும்பு வைத்திருந்தவர் வவுனியாவில் கைது

கொழும்பு, ஜூன்22

வவுனியா பகுதியில் சட்ட விரோதமான முறையில் பழைய இரும்புப் பொருள்களை வைத்திருந்த 5 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர்கள் வட பகுதியிலிருந்து சட்ட விரோதமான முறையில் பழைய இரும்புப் பொருள்களை தென் பகுதிக்கு கொண்டு செல்ல முயன்ற போதே வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கஞ்சா விற்பனை; ஒருவர் கைது

கொழும்பு, ஜூன்22

அக்கரைப்பற்று, சின்னமுகத்துவாரப் பிரதேசத்தில் சட்ட விரோத கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை 620 கிராம் கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கமகே ஜேதிரத்தின தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினை அடுத்தே இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(ச)

# பொன்சேகாவின் சிறை அறையில் 5நட்சத்திர ஹோட்டல் வசதிகள்

## சிறைச்சாலை ஆணையர்

கொழும்பு, ஜூன் 22

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் அறை தற்போது ஹில்டன் ஹோட்டல் அறை போன்று போதிய வசதிகளுடன் சுத்தமாகவே இருக்கிறது. எனினும், அவரது வைத்தியர்களின் ஆலோசனைப்படி அவரின் அறை சுத்தப்படுத்தப் படுகின்றது.

இவ்வாறு மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் அசோக்க அப்பு ஆராச்சி நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

சரத்பொன்சேகா தடுத்து வைக்கப் பட்டுள்ள அறை தூசி, புழுதிகளுடன் அசுத்தமாகக் காணப்படுகின்றது. இதனால் அவரது நுரையீரல் பாதிப்படையலாம். எனவே, அவருக்குத் தூசி இல்லாத சுகாதார வசதிகளுடனான அறை ஒன்றை ஏற்பாடு செய்து வழங்கவேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள் என ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கொட்டகொட தெரிவித்திருந்தார்.

அத்துடன், அண்மையில் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு மருத்துவப் பரிசோதனைக்காக சரத் பொன்சேகா அழைத்துச் செல்லப் பட்டபோதும் மருத்துவர்கள் இந்த விடயத்தையே கூறியிருந்தனர்.

இதற்கமைய சரத் பொன்சேகாவின் சிறை அறையைச் சுத்தப் படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் அசோக்க அப்பு ஆராச்சி தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

சரத்பொன்சேகாவின் வழக்கு விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு இலங்கை வந்துள்ள சர்வதேச நாடாளுமன்ற பிரதிநிதி மார்க் ரவல் அண்மையில் சரத் பொன்சேகாவைச் சந்திக்க வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்றுள்ளனர்.

சரத்பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ள அறை ஹில்டன் ஹோட்டலைப் போன்று உள்ளது என்றும், அனைத்து வசதிகளும் அறையில் காணப்படுகின்றன என்றும் மார்க் ரவல் கூறியிருந்தார்.

சரத்பொன்சேகாவின் அறை சுத்தமாக உள்ளது என்று விடயம் அறியாத சிலர் தெரிவிக்கின்றனர். உண்மையிலேயே வீடுகளைப் போன்றே சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் அறைகளும் சுத்தமாகப் பேணப்படுகின்றன.

இருந்த போதிலும், மருத்துவர்கள் கூறியதற்கு இணங்க சரத் பொன்சேகாவின் அறை தற்போது சுத்தப்படுத்தப்படுகின்றது- இவ்வாறு அவர் கூறினார்.

# பெரிய நாடுகளின் அரசுகள் சிறிய அரசுகளை நசுக்குகின்றன

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன்22

உலகின் பலம்வாய்ந்த ராஜ்ஜியங்கள் சிறிய அரசுகளை வீழ்த்துவதற்கு பல்வேறு வழிகளில் செயற்படுவதாக நீர்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

லுணுகல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இராணுவத்தினர் ஈட்டிதந்த வெற்றியையும், அவர்களால் முன்னனெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையினையும் மலிவுபடுத்தி அவற்றை இல்லாதொழிப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களும், புலம்பெயர்ந்தோரும் மேற்கொள்ளும் நிழ்சிகளை அனைவரும்அறிந்துகொள்ள வேண்டும். இவற்றிற்கு ஐ.நா அறிக்கையும், 'சனல்-4' தொலைக் காட்சியால் தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவு காட்சிகளையும் பயன்டுத்துகின்றனர்.

அத்துடன் அவற்றுக்கு எதிராக உள்நாட்டு ரீதியிலும், சர்வ தேச ரீதயில் மேற்கொள்ளக் கூடிய பணிகளை நிறைவேற்ற அனைவரும் முன்வர வேண்டும்.- என்றார்.

(ச)

# தோல்வியடைந்த திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுப்பு - ஜே.வி.பி.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் தோல்வியடைந்த திட்டங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுத்து வருகிறார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சி அதிகார மற்றும் பொருளாதாரக் கொள்கைகளையே ஜனாதிபதி பின்பற்றி வருவதாகக் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளை ஜே.ஆர். பின்பற்றிய தாகவும், அதனையே தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பின்பற்றி வருகின்றார் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கு மக்களுக்கு விவசாய, சிறுதொழில் உதவி

முல்லைத்தீவு, ஜூன் 22
சோஆ நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சில கிராமங்களில் விவசாய உபகரணங்கள், சிறுதொழில் வியாபாரத்துக்கான பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

செல்வபுரம், கரும்புள்ளியான், பல்லப்பாணி, பூவரசங்குளம், பாலிநகர் ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இதில் 89 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களான நீர் இறைக்கும் இயந்திரம், மருந்து தெளிகருவி, நீர் வழங்கல் குழாய் என்பனவும் இரண்டு பேருக்குச் சிறு தொழில் வியாபாரத்துக்கான பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்ட இந்தப் பொருள்களின் மொத்தப்பெறுமதி 45 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்கள் வழங்கும் நிகழ்வுக்கு மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் ஜெயகாந்த் தலைமை தாங்கினார். அத்துடன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஜோன்பிள்ளை, அபிவிருத்தி உதவியாளர் சுதன் மற்றும் சோஆ நிறுவனத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஜே.யூட் வோல்டன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க)

# நீர் வாய்க்கால்களில் முதலைகள்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி இரணைமடுக் குளத்து நீர் வாய்க்கால்களில் பாய்ந்து செல்லும் நிலையில் அதில் முதலைகளும் காணப்படுவதால் எச்சரிக்கையாக இருக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளத்தின் வாய்க்காலிலுள்ள கதவுகள் திறக்கப்பட்டு வயல்களுக்கு நீர் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் பெருமளவு நீர் வாய்க்கால்களில் பாய்ந்து செல்கின்றது. இந்த நிலையில் முதலைகளும் இவற்றில் காணப்படுவதாகத் தெரிகின்றது.

மேலும் இந்த வாய்க்கால்களில் மக்கள் நீராடி வருகின்றனர். குறிப்பாகச் சிறுவர்கள் தனியாக வந்து நீராடிச் செல் வதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய செயற்பாடு திருவையாறு, இரத்தினபுரம், பன்னங்கண்டி, வட்டக்கச்சி போன்ற பகுதியூடாக நீர் பாய்ந்து செல்லும் வாய்க்கால்களிலேயே அதிகம் காணப்படுகின்றது. அத்துடன் முதலைகளும் இங்கேதான் காணப்படுகின்றன. இவை நீருக்குள்ளேயும், நீருக்கு வெளியே வந்து வரம்புகளில் படுத்திருப்பதனையும் காணலாம்.

இந்த முதலைகள் சில வேளைகளில் ஆடு, மாடு போன்ற மிருகங்களையும் இழுத்துச் செல்கின்றன. இந்த நிலையில் இவற்றால் மனிதர்களுக்கும் ஆபத்து நிகழக் கூடிய ஏதுநிலைகள் காணப்படுகின்றன. (க-426)

# கசிப்பு விற்ற மூவருக்கு ரூ. ஒரு லட்சம் தண்டம்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளில் கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட மேலும் பலர் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு நீதிமன்றத்தால் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, ஊரியான் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறி ஒருவரிடம் 15 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பினைக் கிளிநொச்சிப் பொலிஸார் மீட்டதோடு குறித்த நபர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதனை விசாரித்த பதில் மாவட்ட நீதிவான் குறித்த நபருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் தண்டப்பணம் கட்டத்தவறின் ஆறுமாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

இதேவேளை, கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் 3 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பைத் தன்வசம் வைத்திருந்ததாக கூறி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இதனைக் கட்டத்தவறின் மூன்றுமாத கால சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேபோன்று கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் 6 ஆயிரத்தி 750 மில்லிலீற்றர் கசிப்பைத் தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றத்தில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் இதனைக் கட்டத்தவறின் ஆறுமாதகால சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (க-6)

ஆண்டவனே துணை...



எதற்கும் தயார் நிலையில்: முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் பாதுகாப்பு வேலிகள் எதுவுமற்ற ஓரிடத்தில் இடம்பெயர்ந்த குடும்பமொன்று மீள்குடியமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. (555)

# குடமுருட்டி ஆற்றுப் பாலம் மக்கள் பாவனைக்கு

பூநகரி, ஜூன் 22
கிளிநொச்சி மாவட்டம் பூநகரி குடமுருட்டி ஆற்றுப் பாலம் மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

பரந்தன்-பூநகரி வீதியில் சாமிப்புலம் கிராமத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்ட மேற்படி பாலமானது கோட்டைகட்டியகுளம், அக்கராயன்குளம், மணியங்குளம், முட்கொம்பன் குளம் போன்ற குளங்களின் மேலதிக நீரை ஆனையிறவு நீரேரிக்குக் கடத்தும் பிரதான ஆற்றுப்பாலமாகும்.

இந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதற்கு முன்னர் பருவமழையின் போது குளங்கள் வான் பாயும்போது இந்த வீதியால் பயணம் செய்யும் மக்கள் பாலம் அமைக்கப்பட்ட பகுதியைத் தாண்டுவதற்குச் சிறு படகுகளைப் பயன்படுத்திச் செல்லும் நிலை நீண்டகாலமாகக் காணப்பட்டது. இந்த நிலை இந்தப் பாலம் அமைக்கப்பட்டதன் காரணமாக நீங்கியுள்ளது. இந்தப் பாலம் சுமார் 100 மீற்றர் நீளம் கொண்டதாகும்.

இதனை அமைப்பதற்கு அரும் பணியாற்றிய அனைவருக்கும் பூநகரி வாழ் மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர். (க-406)

# மடுமாதா ஆலய வருடாந்த திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

மன்னார், ஜூன் 22
மன்னார் மடுமாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் மாலை 6.30 மணிக்கு ஆராதனையும், எதிர்வரும் முதலாந்திகதி மாலை நற்கருணை ஆராதனையும் நடைபெற்று அடுத்த நாள் காலை திருநாள் திருப்பலி நிறைவேற்றப்படுமென மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை தெரிவித்தார்.

மடுத்திருவிழாவுக்கு நாடு முழுவதிலும் இருந்து சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களுக்கான சகல விதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மற்றும் யாழ்.மறைமாவட்ட ஆயர்கள் உட்பட தென் பகுதியைச் சேர்ந்த ஆயர்களும் இணைந்து திருவிழா திருப்பலியினை ஒப்புக்கொடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-601)

# ஆசிய வங்கியின் உதவியில் மன்னார் வீதிகள் திருத்தம்




மன்னார், ஜூன் 22
வடமாகாண உள்ளூராட்சி உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ஆசிய வங்கியின் நிதியுதவியுடன் மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைத்து நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரிலுள்ள இரண்டு பிரதான வீதிகள் ஒரு கோடி 94 லட்சத்து 66 ஆயிரம் ரூபா செலவில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

நீண்ட காலமாக இந்த வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் இருந்ததால் மக்களின் போக்குவரத்தில் சிரமங்கள் காணப்பட்டன.

தற்போது இவை புனரமைக்கப்பட்டு வருகின்றமை மக்களிடையே ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது. (க-601)

# வன்னியில் மரங்கள் கடத்தியோருடன் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு தொடர்பு

## விசாரணைகள் தலைமையகத்தால் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி மாவட்டத்தில் அரச பாதுகாப்பிலுள்ள காட்டுப் பிரதேசமொன்றிலிருந்து முதிரை மற்றும் பாலை மரங்களைத் தறித்து அவற்றை மொறட்டுவைக்கு எடுத்துச் செல்லும் மர வர்த்தகத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் அந்த மாவட்டப் பொலிஸ் நிலையமொன்றின் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் இந்த மர வியாபாரத்தில் கூட்டுச் சேர்ந்திருப்பதாகத் தகவல்கள் வெளிப்பட்டுள்ளதையடுத்து கடந்த 14 ஆம் திகதியிலிருந்து உடன்நடைமுறைக்கு வரும் விதமாக அவர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனவும் அவரது பதவி தரமிறக்கப்பட்டு அங்கு அவருக்குச் சாதாரணக் கடமையே வழங்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கொழும்பின் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக் காட்டுப்பிரதேசமொன்றில் முதிரை மற்றும் பாலை மரங்களைத் தறித்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட நால்வரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே மேற்படி பொலிஸ் இன்ஸ்பெக்டரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளமை பற்றிய தகவல்கள் வெளிப்பட்டதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

முதிரை மற்றும் பாலை போன்ற 11 பெரிய மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டிருந்த நிலையில் மேற்படி காட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் அரச அலுவலகமொன்றின் உயரதிகாரியொருவரும் இந்த மர வியாபாரத்தின் பின்புலத்தில் செயற்படுவதாகத் தகவல்கள் கிட்டியுள்ளதோடு, அவர் தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசன வாய்க்கால்களை சேதப்படுத்தும் விசமிகள்

## நீர்ப்பாசனத் திணைக்களம் திண்டாட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 22
முத்துஐயன்கட்டு குளத்தின் பாசன வாய்க்கால்களில் சிலர் சேதங்களை ஏற்படுத்தி வருவதால் நீர் முகாமைத்துவத்தை பேணமுடியாத நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கிளை வாய்க்கால்களுக்கும் பிரதான வாய்க்காலிலிருந்து துருசுகள் போடப்பட்டு அவை பூட்டித்திறக்கக் கூடியதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். ஆனால் சிலர் அவற்றைச் சேதப்படுத்தியும், அதிலுள்ள பொறிகளைக் கழற்றியும் சென்றுள்ளனர். இதனால் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் நீர் முகாமைத்துவத்தைப் பேண முடியாத நிலையே காணப்படுகின்றது.

ஒவ்வொரு விவசாயியும் இந்த வாய்க்கால்களின் பராமரிப்பில் அக்கறை காட்டுவதை விடுத்து வாய்க்கால்களை வெட்டியும், உடைத்தும் துருசுகளைச் சேதப்படுத்தியும் அதில் உள்ள கம்பிகளைக் கழற்றிச் சென்றும் அக்கறையின்றி செயற்பட்டால் இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் அவர்களே என்பதை உணர்ந்து கொள்ளவேண்டுமென நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் கூறுகின்றனர்.

மேலும் இந்தக் குளத்தைப் புனரமைப்பதற்குப் போதிய நிதியும் கிடைக்காத இந்த வேளையில் விவசாயிகள் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டால் இறுதியில் இந்தப் பகுதிக்கான விவசாயம் பாதிக்கப்பட்டு விடுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே இனியாவது விவசாயிகள் தமது தவறுகளை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனப் பலரும் தெரிவித்துள்ளனர். (க-500)

# சன்னாரில் அபிவிருத்திப் பணி திடீரென இடைநிறுத்தம்

மன்னார், ஜூன் 22
மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் மறு அறிவித்தல் வரை எந்த அமைப்புக்களும் மேற்கொள்ளக் கூடாதெனத் தெரிவிக்கும் இந்த அறிவித்தலில் சன்னார் கிராமத்துக்குப் பொறுப்பான பள்ளமடு கிராம அலுவலர் கையொப்பமிட்டு அதனை ஒட்டியதாகவும் இந்த மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வரும் இந்தக் கிராமம் தற்போது சிறிது சிறிதாக அபிவிருத்தியடைந்து வருகின்றது.

இந்த நிலையில் புதிதாகப் பதவியேற்றுள்ள மாந்தைமேற்கு பிரதேச செயலரும், பள்ளமடு கிராம அலுவலரும் இணைந்து தமது கிராமத்துக்குரிய அபிவிருத்திப் பணிகளை நிறுத்தியுள்ளதாக இந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு தமக்கு நீதிகிடைக்க ஆவன செய்ய வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-601)

# கறுக்காய்த்தீவு செல்வோர் வீதியைப் பார்த்துக் கதறல்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி மாவட்டம் பூநகரி தம்பிராய் சந்தியிலிருந்து செட்டியகுறிச்சி ஊடாகக் கறுக்காய்த்தீவு செல்லும் ஐந்து கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி குன்றும் குழியுமாகவும் மணல் பாங்காகவும் உள்ளதால் போக்குவரத்தில் சிரமங்கள் காணப்படுகின்றன.

இந்த வீதியால் பயணம் செய்யும் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மிகுந்த சிரமத்துடன் பயணிக்கும் நிலை நீண்டகாலமாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. மழைக் காலத்தில் இந்த வீதியால் பயணம் செய்ய முடியாத நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு கொல்லங்குறிச்சி, செட்டியகுறிச்சி, கறுக்காய்த்தீவு போன்ற கமக்கார அமைப்புக்களும் இந்த வீதியைப் பெரிதும் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

பூநகரி பிரதேச சபையின் நெல்சிப் திட்டமாவது இந்த வீதியைப் புனரமைக்க உதவுமா என மேற்படி கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு ஆவனசெய்யுமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-406)

## மாதிரிப் புத்தாண்டு...



நல்ல ஆர்வம்: கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களுக்கென இடம்பெற்ற மாதிரிப் புத்தாண்டு நிகழ்வின்போது பாடசாலை ஆசிரியர் எஸ். விமலதாஸ் உரையாற்றுகின்றார். (405)

# பூநகரி கரையோரம் உள்ள கிராமங்கள் அழியும் ஆபத்து

பூநகரி, ஜூன் 22
பூநகரிப் பிரதேசம் வேரவில், கிராஞ்சி ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மண் அகழ்வு நடவடிக்கைகளால் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இந்தப் பகுதியில் வாழும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச அலுவலரின் அனுமதி பெற்று இந்தப் பகுதிகளில் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாகவே நடைபெற்று வருகின்றது.

நாளாந்தம் கனரக வாகனங்களில் இவ்வாறு பெருமளவில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டு செல்வதால் அந்தப் பகுதியில் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மேலும் புனரமைப்புச் செய்யப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படும் வீதிகளூடாகக் கனரக வாகனங்கள் செல்வதால் அவை மிகவும் மோசமாகச் சேதமடைந்து வருகின்றன.

இதனை உரியவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களான இந்தப் பகுதியின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் இந்த நடவடிக்கைக்குத் துணைபோவது தமக்கு வேதனையளிப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர். (க-8)

# மன்னாரில் நோயாளர்களை கலங்க வைக்கும் நாய்கள்

மன்னார், ஜூன் 22
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தினுள் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் நோயாளர்கள் உட்பட அனைவரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் முகமட் ஆசாத் தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலை வளாகத்தினுள் நூற்றுக்கணக்கான கட்டாக்காலி நாய்கள் காணப்படுகின்றன. இவை நோயாளர் விடுதிகள் முதல் சகல இடங்களிலும் உலாவித் திரிகின்றன. இதனால் நோயாளர்கள், வைத்தியர்கள் மற்றும் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் எனச் சகல தரப்பினரும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாக இரவு நேரத்தில் வைத்தியசாலை வளாகத்தினுள் கட்டாக்காலி நாய்கள் அதிகமாகக் காணப்படுவதோடு பெரும் சத்தமாக ஊளையிடுவதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் வைத்திய அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

எனவே குறித்த நாய்களை வைத்தியசாலையில் இருந்து வெளியேற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் நகரசபையின் கவனத்துக்குத் தாம் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-601)

# விவசாயிகளுக்கு செய்முறைப் பயிற்சி

முல்லைத்தீவு, ஜூன் 22
இன்று ஒட்டுசுட்டானிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் விவசாயிகளுக்கு செயன்முறைப் பயிற்சித் திட்டமொன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது செய்கை பண்ணப்பட்ட விவசாயப் பயிர்களில் ஏற்படும் நோய்கள், இவற்றை ஒழிப்பதற்கான வழிமுறைகள், கிருமிநாசினிகளின் பாவனை என்பன தொடர்பாக இங்கு விளக்கமளிக்கப்படும்.

ஏற்பனவே பெரிய இத்திமடு, ஒலுமடு ஆகிய கிராமங்களில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன. (க-500)

# திடீர் மின்தடையால் பாவனையாளர் பாதிப்பு

மன்னார், ஜூன் 22
மன்னாரில் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் அடிக்கடி திடீரென மின்சாரம் தடைப்படுவதனால் மின்சாதன உபகரணங்கள் பழுதடைவதோடு, பாடசாலை மாணவர்களின் இரவு நேர கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களாக இரவு 8 மணியளவில் திடீரென மின்சாரம் தடைப்பட்டுவிடும். பின் பல தடவைகள் வந்து வந்து போகும். இதன் பின்னர் முழுமையாக மின் தடை ஏற்படும். இதனால் மின்சார உபகரணங்கள் பழுதடைந்து விடுவதோடு, பாடசாலை மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை மின்சாரம் இல்லாததன் காரணமாக இரவு வேளைகளில் நடமாடுவதற்கு மக்கள் அஞ்சுகின்றனர்.

அத்துடன் மின்சாரம் துண்டிக்கப்படுவதன் காரணமாகத் திருட்டுச் சம்பவங்களும் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவில் தடைப்படும் மின்சாரம் மறு நாள் காலையே மீண்டும் வழங்கப்படுகின்றது. எனவே மின்சார சபை அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துச் சீரான மின் சாரத்தினைப் பெறுவதற்குமாறு மின் பாவனையாளர்கள் மன்னார் மின்சார சபை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-601)

# எரிபொருள் நிலையம் இன்றிச் சிரமம்

முல்லைத்தீவில் எரிபொருள் நிலையம் அமைக்கப்படாததால் எண்ணெய் பரலிலிருந்து எரிபொருள் நேரடியாகவே வாகனங்களுக்கு வழங்கப்படுவதாகத் தெரிய வருகின்றது.

இதனால் வாகன உரிமையாளர்கள் மட்டுமல்ல எரிபொருளை வாகனங்களுக்கு நிரப்புபவர்களும் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதமான கடதாசி ஓவியங்கள்








திகைப்பினை உண்டாக்கும் அளவுக்கு கடதாசி களின் மூலம் உருவாக்கப்பட்ட இந்த ஓவி யங்களை வடிவமைத்தவர் அமெரிக்காவை சேர்ந்த ஜெவ் நிஸிநகா என்பவர் ஆவார்.

# அதிக கொழுப்பு மூளைக்கு ஆபத்து




உடல் ஆரோக் கியத்தில் அதிக அக்கறை செலுத் துபவர்கள் மிக வும் குறைவு. சரி விகித உணவு, உடற்பயிற்சி, உரிய மருத்துவ ஆலோ சனை ஆகியவை உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்.

இது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பல நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மறுபுறம் இந்தப் பாதிப்புகள் குறித்த ஆய்வு களும் நடந்த வண்ணம் உள்ளன.

உடலில் அதிகரிக்கும் கொழுப்பால் மூளை பாதிக்கப்படும் ஆபத்து உள்ளதாக அண்மைய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. கொழுப்பு சேர்வதால் நரம்புகளில் உள்ள நியூரான்ஸ் என்ற நரம்பு செல்கள் பாதிக்கப் படுகின்றன. இது மூளை செயற்பாடுகளைப் பாதிக்குமாம். முதல் பாதிப்பாக உடல் எடை அதிகரிக்கும், படிப்படி யாக வேறு பாதிப்புக்களும் ஏற்படும் என எச்சரிக் கின்றனர்.

வாஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இந்தத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# புற்றுநோய் செல்களை அழிக்கும் கரட்



பொன்நகை அணிபவர்களின் உடல் அந்த நகையோடு சேர்ந்து பளபளப்பாக மின்னுவதைப் போல தினம் ஒரு கரட் உண்பவர்களின் உடலும் மின்னும்.

கண்ணுக்கு மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படும் கரட்டில் ஏ, சி, கே போன்ற உயிர்ச்சத்துக்களும், பொட்டாசியம் போன்ற தாதுப்பொருளும் உள்ளன.

நாம் உண்ணும் உணவில் வேறு எந்த காய் கனிக்கும் இல்லாத சிறப்பு கரட்டிற்கு மட்டுமே உள்ளது. இதில் உள்ள கரோட்டின் என்கின்ற உயரிய சத்து புற்றுநோய் செல்களை கட்டுப்படுத்துகிறது. கரட்டில் பீட்டா கரோட்டின் என்கின்ற சத்து நமது உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப் படுத்துவதாக விஞ்ஞானிகள் தெரிவிக் கின்றனர்.

இந்த பீட்டா கரோட்டினில் உள்ள சிறப்பு அணுக்கள் தான் புற்று நோய்க்கு எதிரியாக இருந்து செயற்படுகின்றன.

# மயக்க மருந்து கொடுக்காமல் அறுவைச் சிகிச்சை



மருத்துவ உலகில் சாதனைகள் தொடர் கதையாக இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு சாதனை படைக்கப்படுகிறது.அந்த வரிசையில் இப்போது மயக்க மருந்து கொடுக்காமல் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள முயற்சிக்கப்படுகிறது.

நோயாளிகளை இயல்பு நிலையில் வைத்து அவர்களின் சிந்தனைகளைச் சிதறடித்து கவனத்தை மாற்றி அறுவைச் சிகிச்சை செய்யும் புதிய முறை அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

பரிசோதனை அடிப்படையில் வெற்றி கிடைத்துள்ளது என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர் களுக்கு இந்த முறை பெரிதும் உதவும் என்பது மருத்துவர்களின் கணிப்பு. இது அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் களின் புதிய கண்டுபிடிப்பு.

இந்தப் புதிய முறை குறித்து ஆராய்ச்சியாளர் கள் கூறியதாவது,

இந்த முறையில் நோயாளிகளின் முகத்தில் கண்கள் விளையாட்டை மட்டுமே பார்க்கக் கூடிய வகையில் மாஸ்க் போன்ற சாதனம் பொருத்தப்படும்.

வீடியோ கேம் விளையாடத் தெரியாதவர் களும் இதை எளிதாகக் கையாள முடியும். இதன் மவுஸ் அவர்கள் கைகளில் இருக்கும். முதலில் அவர்கள் கவனம் முழுவதும் விளையாட்டில் செலுத்தப்படும்.

இந்த முறையில் சத்திர சிகிச்சைத் தன் மைக்கு ஏற்ப நோயாளிகளுக்கு வீடியோ விளை யாட்டுகள் நிர்ணயிக்கப்படும். 60 வயதைக் கடந்த 25 பேர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட் டனர். இந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சையால் தங்களுக்கு வலி எது வும் இல்லை என்றே அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மனதை மயக்கும் வண்ண மலர்கள்





தாய்லாந்து நாட்டில் செய்து விற்கப்படும் இந்த வண்ண மயமான அழகான மலர்கள் சவர்க்காரத்தினால் செய்யப்படுகிறன. பல வர்ண்ணங்களில் உள்ள இந்த மலர்கள் அலங்காரப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உரிமை மறுப்புக்கு அளவெட்டிச் சம்பவம் உதாரணம்

**யோகேஸ்வரன் எம்.பி.சீற்றம்**



மட்டக்களப்பு, ஜூன் 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தின் மீதான தாக்குதலானது இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

இவ்வாறு தெரிவித் தார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன்.

யாழ். அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டத்தில் இராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குலுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் பிரசாரத்தின்போது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இந்த நாட்டில் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டதை தெளிவாகக் காட்டுகின்றது.

இதுதானா வடக்கின் வசந்தம்? இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. தமிழ் மக்களின் அரசியல் உரிமையின் மேல் மேற்கொள்ளப்படும் அடா வடித்தனத்தினை கண்டு அஞ்சி யோடுபவர்கள் தமிழ் மக்கள் அல்லர்.

தமிழ் மக்களின் மேல் மேற்கொள்ளப்படும் அடாவடித்தனத்தின் உச்சக்கட்டம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பிரசாரத்திலும் காட்டப்பட் டுள்ளது. இவ்வாறான அடாவடித் தனத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்கத் தவறுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவை தமிழ்மக்கள் சார்பாக எடுக்க வேண்டிவரும்-என்றார். (ச)

# கடற்றொழில் பாதுகாப்பு மாநாடு

மட்டக்களப்பு,ஜூன்22

வங்காள விரிகுடா எல்லைக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களில் கரையோரப் பாதுகாப்பு மற்றும் சூழல் பாதுகாப்புத் தொடர்பானகடற்றொழில் மாநாடு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் ஆரம்பமானது.

கடற்கொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவின் வழிகாட்டலில் நடைபெற்ற மாநாட்டில், அம்பாறை; மட்டக்களப்பு கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த 60 உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் கரையோர மீன்பிடி மற்றும் மீன் மாசடைதலைத் தடுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-21)

# வைத்தியசாலையில் சுகாதார ஊழியர்களை நியமிக்குக

களுத்துறை, ஜூன் 22

ஹொரணை வைத்தியசாலையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சுகாதார சிற்றூழியர்களுக்குப் பற்றாக்குறை இருந்து வருவதால், வைத்தியசாலை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

மேல் மாகாண சுகாதார அமைச்சு இந்த வைத்தியசாலைக்குத் தேவையான சுகாதார சிற்றூழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# பஸ்சேவை சீரில்லை; பயணிகள் விசனம்

தெனியாய, ஜூன் 22

தெனியாய - இரத்தினபுரி வீதியில் பஸ் சேவை சீராக இடம்பெறாமையால் பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தெனியாய நகரிலிருந்து இரத்தினபுரி நோக்கிச் செல்லும் பஸ் தினமும் காலை 5.30, 7.10, 8.30, 9.30 என்ற நேர அட்டவணையின்படி சேவையில் ஈடுபடுவது வழமை.

எனினும், கடந்த சில தினங்களாக இந்தச் சேவைகள் சீராக இடம்பெறவில்லை. காலை 5.30 மணிக்கு தெனியாய நகருக்கு வரும் பயணிகள் காலை 9.30 மணிக்குச் செல்லும் பஸ்ஸிலேயே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பயணிகளும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

## மீண்டும் வழமைக்கு....



கிழக்கு மாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய இடைநிறுத்தப்பட்டதையடுத்து, அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன.நேற்று செவ்வாய்க்கிழமை பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகரித்துக் காணப்படுவதுடன், கற்றல் செயற்பாடுகளும் சுமுகமாக நடைபெற்றது. (ச)

# சிறுமியை மோதிக்கொன்ற பஸ் தீக்கிரை

கொழும்பு, ஜூன் 22

ஒன்பது வயதுச் சிறுமி ஒருவரை மோதிக் கொன்ற பஸ்ஸை பிரதேச வாசிகள் தீக்கிரையாக்கிய சம்பவம் மிரிஸ்வத்தை வத்து முல்லை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் ஊழியர் களை ஏற்றிச்சென்ற பஸ்ஸே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பஸ் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் குறித்த ஆடைத் தொழிற்சாலைக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த சிறுமி தவறி வீதியில் விழுந்தபோதே பஸ் அவரை மோதிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# இடம்மாறிய ஆசிரியர்களை திரும்பி வருமாறு அறிவுறுத்து

**கிழக்கு கல்விப் பணிப்பாளர் விடுத்தார்**

மட்டக்களப்பு,ஜூன் 22

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களை அவர்களது பழைய பாடசாலைகளுக்கே திரும்பும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

''பாடசாலைகளிலுள்ள மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் பொருட்டு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதங்களுக்கு அமைவாகப் புதிய பாடசாலைகளில் கடமையைப் பொறுபேற்ற அனைவரும் தமது முன்னைய பாடசாலைகளுக்கே திரும்ப வேண்டும்'' என்று அவர் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தினை எதிர்வரும் டிசெம்பர்மாதம் வரை இடை நிறுத்திவைக்குமாறு ஜனாதிபதி விடுத்துள்ள உத்தரவின்படி வலயங்களுக் குள்ளும், வலயங்களுக்கு வெளியிலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து இடமாற்றங்களும் உடனடியாக இரத்துச் செய்யப்படுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நிஸாம் தெரிவித்தார்.

தற்போது வழங்கப்பட்ட இந்த இடமாற்றங்களிலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டதொரு முறையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் புதியதொரு இடமாற்றம் மேற்கொள்ளப்படும் எனவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-30)

# கதிர்காம ஆலயத்துக்கு பாதயாத்திரை

திருகோணமலை,மூதூர் பிரதேசத்திலிருந்து வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தை நோக்கி 75 இந்து பக்தர்கள் இரு மாத கால சமாதான கால் நடை பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர்.

கடந்த 25ஆம் திகதி மூதூரிலிருந்து வெருகல்-ஈச்சிலம்பற்று வழியாகப் பயணத்தை ஆரம்பித்த இவர்கள் அடுத்த மாதம் கதிர்காமத்தை அடையவுள்ளனர். (ச)

# மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய உரிய திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

**நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் சதாசிவன் கூறுகிறார்**

நுவரெலியா,ஜூன்22

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே எமது ஒரே நோக்கம்.

அதற்கமைவாகவே நாம் சமூக சேவைகள் அமைச்சுடன் இணைந்து கடந்தவாரம் லிந்துலையில் நடமாடும் சேவையை ஏற்பாடு செய்தோம். அதன் மூலம் பலர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யமுடிந்தது.

எதிர்காலத்தில் இதுபோன்ற வேலைத் திட்டங்கள் மலையகத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படும் என நுவரெலியா பிரதேசசபைத் தலைவர் எஸ்.சதாசிவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

[illegible] அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் பலவற்றையும் நிவர்த்தி செய்யவேண்டியுள்ளது.

குறிப்பாகப் பிறப்புச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ், வலது குறைந்தோர், முதியோர் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் வேலையில்லாப் பிரச்சினை போன்றவற்றை உடனடியாகத் தீர்க்க வேண்டியுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு அங்கமாகவே கடந்தவாரம் லுணுகலையில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இதற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி சந்திரசேகரன், அரசியல்துறைப் பொறுப்பாளர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கினர்.

இந்த நடமாடும் சேவையில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தனர். இதையடுத்து நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட ஏனைய பகுதிகளிலும் இத்தகைய சேவையை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். உத்தியோகத்தர்கள் புதிய பொறுப்புகளை ஏற்றுச் செய்யலாம். பெண்கள் விருந்து விசேடங்களால் மகிழ்ச்சியாகக் காணப்படுவர். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும் நாள். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**இடபம்:**
குழப்பங்கள் தீர்ந்து எதிலும் தெளிவான முடிவு எடுக்கும் நாள். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். விருந்தினர்கள் வருகையை எதிர்பார்த்து சில முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். குறுக்கு வழியில் ஆதாயம் பெற முற்படலாம். எதிலும் தனித்தன்மையைக் காட்ட நினைப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:**
சில வேலைகளுக்காக அதிகாலையில் எழுந்து செயற்படலாம். மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளலாம். நண்பர்கள் சிலரைப் பாராட்டிப் பேசி அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். மக்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக சந்திக்காத ஒருவரை திடீரென சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். கனவுத் தொல்லையுண்டு.

**கடகம்:**
தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். நீங்களே பணப்பிரச்சினைகளைச் சந்திக்கும் போது, உங்களிடம் சிலர் உதவி கேட்கலாம். உத்தியோகத்தர்கள் மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைப்பது நல்லதல்ல. வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். சக ஊழியர்களால் தொல்லையுண்டு.

**சிங்கம்:**
பாவம், புண்ணியம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் தடுத்தும், கேட்காமல் சில வேலைகளைச் செய்வீர்கள். சேமித்த பணம் ஒன்றுக்கு திடீரென செலவு ஏற்படும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பல நாள்களாகத் தடைப்பட்ட பணவரவு ஒன்று இன்று கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:**
ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். கடன் பிரச்சினைகளை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகலாம். கலைஞர்கள், எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறலாம். அரசியல்வாதிகள் சந்திப்பால் சில காரியங்கள் நடக்கலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தேக சுகம் தெம்பு தரும்.

**துலாம்:**
எதிலும் திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய நாள். பழைய பொருள்களை மாற்றப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எதிர்ப்பே இருக்காது, என நினைத்த வேலை ஒன்றில் திடீரென போட்டி உருவாகலாம். இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று, இன்று முடிவுக்கு வரலாம். கேளிக்கை, கொண்டாட்டத்தால் சந்தோஷம் உண்டு.

**விருச்சிகம்:**
மதிப்பு, கௌரவம் மேம்படும் நாள். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். நன்றி மறந்தவர்களை நினைத்து வருந்துவீர்கள்.


**தனுசு:**
சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிக் காட்டும் நாள். உள்மனதில் கோபம் இருந்தாலும், சிலரிடம் கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். பணவரவு உண்டு.

**மகரம்:**
வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். சேமித்த பணம் ஒன்றுக்கு திடீரென செலவு ஏற்படலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம்.

**கும்பம்:**
வேலையாள்கள் திடீரென எடுக்கும் விடுப்பால் கடும் சிரமங்களுக்கு ஆள்படலாம். பெரிய அளவில் திட்டமிட்ட காரியம் ஒன்றை கடைசி நேரத்தில் எளிமையாகச் செய்து முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சிலரின் செயற்பாட்டால் கோபம் அடையலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மீனம்:**
சுய தொழில்புரிவோர் கூடுதல் முற்பதிவுகளைப் பெற்று விறுவிறுப்பாகச் செயற்படுவர். உடன் பிறப்புக்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகலாம். புதிய முயற்சிகளில் எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணவரவுகள் தொடர்பான முக்கிய செய்திகளைக் கேட்கலாம். தெய்வ வழிபாடுகளுக்காகச் செலவு செய்வீர்கள்.

# வீரத்தலை
# வெற்றிடம்
# வீரத்தாய
# நிரப்பப்படு



பேரழிவுகளிலும், போரழிவுகளிலும் சிக்கித் துவண்டு, இனிமேல் இலங்கைத்தீவில் எமக்கு கௌரவ வாழ்வுக்கு வாய்ப்பேயில்லை என்ற நம்பிக்கையீனத்தில் நொடிந்து போய்க் கிடந்த ஈழத் தமிழினத்துக்குப் புதுத்தெம்பையும், நம்பிக்கையையும், உத்வேகத்தையும், உற்சாகத்தையும் ஊட்டியிருக்கின்றார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா. உலகத்தால் கவனிப்பாரின்றி கைவிடப்பட்டவர்கள் நாம் என்ற ஈழத்தமிழர்களின் ஆதங்கத்தை மாற்றி உங்களுக்காக, ரத்தத்தின் ரத்தமாக, அன்னையாக இருக்கிறார் என்ற நம்பிக்கையை உறைப்பாக, உவப்பாக, உணர்த்தியிருக்கிறார் அவர் - இதுதான் பொதுவாக ஈழத்தமிழர்களின் இன்றைய பேச்சு.

இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணத்திலும் சரி, வன்னியில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவிலும் சரி, கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கல்முனை போன்ற பிரதேசங்களிலும் சரி, இன்று பிரதான பேசு பொருளாகியிருப்பவர் தமிழக முதல்வர்தான்.

ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்துக்குள் பெரிய சத்தம் சந்தடியோ, ஆரவாரமோ இன்றி இலங்கை ஆட்சி பீடத்துக்கு எதிராக தமிழக சட்ட மன்றத்தில் அவர் அதிரடியாகக் கொண்டு வந்து, முன்மொழிந்து, நிறைவேற்றிய தீர்மானங்கள் ஈழத்தமிழர்கள் மத்தியில் இதுவரை இருந்து வந்த நம்பிக்கையீனத்தை அப்படியே புரட்டிப் போட்டிருக்கின்றன.

அதேவேளை, மறுபுறத்தில் தென்னிலங்கைச் சிங்கள ஆட்சியாளர்களை ஒரேயடியாக மலைக்க வைத்து, பேரதிர்ச்சிக்குள்ளும் அவை மூழ்கடித்திருக்கின்றது.

யுத்தத்தின் பெயரால் ஈழத்தமிழர்களைப் பந்தாடிக் கொன்று, குவித்து, அவர்களது தாயகத்திலேயே அவர்களை சிறுபான்மையினராக்கி, சிறுமைப்படுத்தி, சிங்கள மேலாதிக்கத்தைத் திணிக்கும் தனது அராஜகத்தை இதுவரை எந்தத் தங்குதடையுமின்றி முன்னெடுத்து வந்த சிங்கள ஆட்சி பீடத்துக்கு இப்போது 'செக் மேட்' வைக்கும் கைங்கரியத்தைத் தொடங்கியிருக்கின்றார் தமிழக முதல்வர்.

நீங்கள் உங்கள் எண்ணப்படி கொன்று குவித்து பந்தாடுவதற்கு ஈழத்தமிழர்கள் ஒன்றும் கிள்ளுக் கீரைகளல்லர்; ஈழத்துக்கு இருபது கிலோ மீற்றருக்கு அப்பால் தமிழகத்தில் அவர்களின் தொப்புள் கொடி உறவுகளாக ஆறு கோடித் தமிழர்கள் நாங்கள் கொந்தளிப்புச் சீற்றத்துடன் இருக்கின்றோம் என்ற செய்தியைத் தமது காட்டமான தீர்மானம் மூலம் தமிழக சட்டசபை ஊடாகக் கொழும்புக்கு உணர்த்தியிருக்கின்றார் ஜெயலலிதா - என்கின்றார் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர்.

**கருணாநிதிக்கு**
**தகுந்த பாடம்**

ஈழத் தமிழர் மீது கொடூர யுத்தம் கட்டவிழ்ந்த போது தமிழகத்தில் ஆட்சியிலிருந்த கலைஞர் கருணாநிதி நடத்திய பல்வேறு சதி நாடகங்கள் குறித்து இனிமேலும் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவை அனைத்தும் அம்பலமாகி விட்டன. அந்த அபத்த நாடகங்கள், நெஞ்சுக்கு நீதி உரைத்தவர் தம் நெஞ்சறிய இனத்துக்குப் பெரும் அநீதி இழைத்தார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள். பல்லாயிரம் ஈழத்தமிழர்களின் அழிவைப் பார்த்து, மனதுக்குள் ரசித்தபடி, தனது பதவியைத் தக்கவைத்து, குடும்ப அதிகாரத்தைத் தொடர்வதற்காக வரலாற்றுத் தவறிழைத்த கருணாநிதிக்கு வரலாறு சரியான தண்டனை வழங்கத் தொடங்கி விட்டது. ஈழத் தமிழர்களின் பேரழிவுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதன் மூலம் நீதி, நியாயம் நிலைநாட்டப்பட வேண்டுமொனால், ஈழத்தமிழர்களை நேரடியாகக் கொன்றொழித்த ஆட்சியாளர்கள் மட்டுமல்லாமல், அதற்கு மறைமுகமாக ஒத்துழைப்பு, வாய்ப்பு, வசதிகள் வழங்கி, நாடகமாடிய தரப்புகளும் தண்டிக்கப்படவே வேண்டும். வரலாறு அந்தத் தண்டனையைக் கொடுக்கும் தனது பணியைத் தொடங்கி விட்டது.

வெப்பம் நிறைந்த -, காற்றோட்டமில்லாத- சிறைக்கதவுகளுக்குப் பின்னால் தனது மகள் கனிமொழி வாடி வதங்குகின்றார் என இன்று கண்ணீர் வடிக்கும் கருணாநிதி, அன்று குளிர் சாதன அறைக்குள் அமர்ந்தபடி தாமும் தம் குடும்பத்தவர்களும் ஆட்சி அதிகாரத்தை ருசிப்பதற்காக, வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொன்றெழிக்கப்பட்டு, உறவுகளை, உடைமைகளை, அவயவங்களை இழந்து, கதறக்கதற அவர்கள் வாழ்வு சூறையாடப்பட்ட போது அந்தக் கொடூரத்துக்குத் துணைபோகும் விதத்தில் நாடகமாடினார்.

ஈவு இரக்கமற்ற அந்த வரலாற்றுத் துரோகத்தினால் தமிழக மக்கள் மீதும், தமிழக அரசியல் தலைவர்கள் மீதும் ஈழத்தமிழர்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகூட அடியோடு தகர்ந்து போயிற்று. போதாக்குறைக்கு ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொலை வெறித்தாண்டவம் ஊழிக்கூத்தாக உச்சத்தை எட்டிய 2009 மே மாதத்தில்தான் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவந்தன. அந்தத் தேர்தலில் தமிழக மக்கள் அளித்த தீர்ப்பு, அந்த மக்களைத் தங்களது தொப்புள் கொடி உறவுகள் என்று கருதி வந்த ஈழத் தமிழர்களுக்குப் பேரிடியாய் வந்து அமைந்தது.

**நம்பிக்கை ஊட்டும்**
**தலைவராக 'ஜெ'**

இனிமேலும் உறவுகளை நம்பிப் பயனில்லை என்ற பெரும் பரிதாபத்துக்குரிய கையறு நிலைக்குள் அவர்கள் மூழ்கியது அப்போதுதான். ஆனால், அதற்கு எல்லாம் ஒரேயடியாகப் பிராயச்சித்தம் செய்து, நம்பிக்கை ஊட்டும் ஒருவராக, உறுதியான தலைவராக இன்று உயர்ந்திருக்கிறார் புதிய தமிழக முதல்வர். இலங்கைத் தமிழர் விடயத்தில் அவரது வெளிப் படையான, ஒளிவுமறைவற்ற, உணர்ச்சிவசப்படாத, உறுதியான, திடமான அணுகுமுறை எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையைத் தருகின்றது. நாம் கைவிடப்பட்டவர்கள் அல்லர், எங்களுக்காக ஆறுகோடி இரத்தத்தின் இரத்தங்கள் காவலாக உள்ளன என்ற நம்பிக்கை எமக்கு இப்போதுதான் பிறந்திருக்கின்றது - என்றும் அந்த விரிவுரையாளர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லவனின்
# டம்
# யால்
# டுமா?



**நடுக்கடலில் மூழ்குபவனுக்கு ஒரு சிறிய பற்றுக்கோடு போல, நம்பிக்கைக் கீற்றாக, ஈழத் தமிழர்களுக்கு தமிழக முதல்வர் வந்திருக்கின்றார். ஈழத் தமிழர்களுக்கு நியாயம் தேடித்தரும் நிலைக் களமாக தமிழக சட்டப் பேரவை உருப்பெற்றிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்திக் கொள்ள ஈழத் தமிழர்களின் தற்போதைய அரசியல் தலைமைகள் தவறக் கூடாது.**

ஈழத்தமிழர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக் கும் தமிழக முதல்வரின் உறுதியான போக்கு ஈழத் தமிழர்கள் வாழும் புலம் தேசங்கள் எங்கும் கூடப் பொது உரையாடலுக்கான கருப் பொருளாகிருப் பதுதான் இன்றைய நிலைமை.

ஒருபுறம் சிங்களவர்கள் தமிழக முதல்வரை வசைபாடுகின்றார்கள். மறுபுறம் ஈழத் தமிழர்கள் அவரைப் போற்றுகின்றார்கள்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமது மாநில அரசின் திடமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் முதலாவது சமிக்ஞையாக இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தைத் தமிழக முதல்வர் வெளிப் படுத்தியுள்ளார். அதுவும் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்துக்குள்ளேயே, தமது அரசின் முதலாவது சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, அதனை அவர் வெளிப்படுத்தினார். அது மட்டுமல்ல, அந் தத் தீர்மானத்தை அவரே சபையில் முன்மொழிந் தமை மூலம் இவ்விடயத்தில் தமது உறுதிப்பாட் டையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

யஅந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு 24 மணி நேரம் கழிவதற்குள்ளேயே புதுடில்லியில் இருந்து பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் சென்னைக்கு விழுந்தடித்துப் பறந்து வந்து தமிழக முதல்வரைச் சந்தித்து, மூடிய அறைக்குள் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான செயல் பாட்டை, ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் தனது உத்வேகத்திட்டத்தை முதல்வர் ஜெய லலிதா உறுதியாக முன்னெடுப்பார் என்று உற்சாக மாக இருக்கிறார்கள் தமிழ் ஆர்வலர்கள்.

தமிழக மக்கள் எம்.ஜி.ஆரை இதய தெய்வம் என்ற போற்றினாலும், உண்மையில் அவரைப் பூஜை அறையில் வைத்துப் பூஜித்து தெய்வமாக வணங்குபவர்கள் ஈழத் தமிழர்களே. தங்களது விடுதலைப் போராட்டத்துக்கு உயிரூட்டி, உணர் வூட்டி, உரமேற்றியவர் எம்.ஜி.ஆர். மட்டுமே என்பதே தமிழர்களின் அசைக்க முடியாத கருத்து.

எம்.ஜி.ஆரினால் அடையாளப்படுத்தப்பட்ட அடுத்த தலைவர் தாம் என்பதற்கான பொறுப்புக் களை ஜெயலலிதா உணர்ந்து செயல்படுகின்றார். அடக்க ஆளின்றித் துள்ளிக் குதித்து அட்டகாசம் புரியும் ராஜபக்ஷ அதிகாரத்துக்கு அம்மா முற்றுப் புள்ளி வைப்பார் என்று நம்புகிறோம். இவர் தவறி னால் இனியாரும் இல்லை என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. என்றார் அவர்.

### நம்பிக்கைக் கீற்றாக

நடுக்கடலில் மூழ்குபவனுக்கு ஒரு சிறிய பற்றுக்கோடு போல, நம்பிக்கைக் கீற்றாக, ஈழத் தமிழர்களுக்கு தமிழக முதல்வர் வந்திருக்கின்றார். ஈழத் தமிழர்களுக்கு நியாயம் தேடித்தரும் நிலைக் களமாக தமிழக சட்டப் பேரவை உருப்பெற்றி ருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை வசமாகப் பயன் டுத்திக் கொள்ள ஈழத் தமிழர்களின் தற்போதைய அரசியல் தலைமைகள் தவறக் கூடாது. புதிய தமிழக முதல்வருடன் இணைந்து, ராஜபக்ஷவை அரசுக்குப் பெரும் அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தயாராக வேண்டும் என்கிறார் ஓய்வுபெற்ற தபால் அதிகாரி கந்தசாமி.

வன்னியில் புலிகளின் அனுதாபி ஒருவர் வேறு விதமாகக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

வீரத் தலைவன் பிரபாகரன் களத்தில் இருக்கும் போதே இத்தகைய தீவிர நிலைப்பாட்டை ஜெய லலிதா எடுத்திருப்பாரானால், இலங்கை அரசின் கதை கந்தலாகியிருக்கும். எங்களது துரதிஷ்டம் கதை வேறு மாதிரியாகிவிட்டது. இப்போது வீரத் தலைவன் களத்தில் இல்லை. ஆனாலும், 'லேட்' ஆக வந்தாலும் 'லேட்டஸ்ட்'டாக வந்திருக்கிறார் தமிழக முதல்வர் அவர்கள். - வெறும் ஜெயலலிதா வாக அல்லாமல் வீரத்தாய் ஜெயலலிதாவாக. வீரத் தலைவனின் வெற்றிடம் வீரத் தாயால் சரிவர நிரப்பப்படும் என நம்புவோமாக என்கிறார் அந்தப் புலி அனுதாபி.

ஈழத் தமிழர்களின் மூத்த அரசியல் தலைவர் ஒருவர் முக்கிய விடயத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

நடந்தவை நடந்து விட்டன. இனி நடக்கப் போகின்றவை குறித்துத்தான் நாம் சிந்திக்க வேண்டும். இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று - நடந்த கொடூரங்களுக்கப் பொறுப்புக் கூறும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குற் றங்களுக்கு உரியவர்கள் அவற்றுக்குப் பொறுப் பாக்கப்பட வேண்டும். மற்றது ஈழத் தமிழர்க ளுக்கு கௌரவமான வாழ்வுக்குரிய அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும்.

### சரியான சந்தர்ப்பம்

இவை இரண்டும் நிறைவேற்றப்பட வேண்டு மெனில், இவை தொடர்பான உரையாடல்களில் ஈழத் தமிழர் தரப்பு வலிமையுடன் பங்கு பெறக் கூடிய நிலைமை அவசியம். விடுதலைப் புலி களின் ஆயுத பலம் சிதைக்கப்பட்டதுடன் இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இடையிலான சமநிலை அந்தஸ்து தகர்ந்து விட்டது. மிகப் பல மான நிலையில் இலங்கை அரசு. மிகப் பல வீனமான கட்டத்தில் தமிழர்கள். இந்த சூழலில் நியாயமான பேச்சுக்கும் ரீதியான தீர்வுக்கும் இட மேயில்லை. தீர்வு முயற்சியில் தமிழர் தரப்புக்கு வலிமையான, பலமான நிலமையை அவர்க ளுக்கு மிகத் தீவிரமான ஆதரவு நிலைப்பாட்டை எடுப்பதன் மூலம் தமிழக முதல்வர் உருவாக்கி வருகின்றார். அதற்கு புதுடில்லியும் ஒத்துழைக்கு மானால் நீதியான தீர்வு எட்டப்படுவதற்கான யதார்த்தப் புறச்சூழல் விரைவில் உருவாகும் என்று நம்பிக்கை பொங்கக் கூறுகிறார் அவர்.

[illegible]

## கடவுளுக்கு பயப்பட வேண்டுமா?



ஓர் ஊரில் பிச்சைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக்கென்று தனியான குடிசை வீடு ஒன்று அந்த ஊருக்கு சற்றுத்தூரமாய் அமைந்திருந் தது. அந்தப் பிரதேசத்துக்கு மத்தியில் மயானம் அமைந்துள்ளது. ஊருக்குப் போக வேண்டும் என்றால் அந்த மயா னத்தைக் கடந்துதான் போகவேண் டும்.

அந்தப் பிச்சைக்காரன் ஓர் அநாதைச் சிறுவனை எடுத்து வளர்த்து வந்தான். அந்தச்சிறுவன் மயானப்பக்கம் போகாமல் இருப்பதற்காக தனது வீட்டை மயானத்துக்கு சற்றுத் தூரமாக அமைந்திருத் தான். அந்தப் பிச்சைக்காரன் சிறுவனை "இதோ பார் இரவு வேளையில் நீ அந்த மயானத்துப் பக்கம் போனால் அங்கே உள்ள பிசாசு பிடிச்சுச் சாப்பிட்டு விடும்!"என்று சொல்லி பயமுறுத்தி வைத்திருந்தான். சிறுவனும் அதை நம்பினான் . அந்தப்பக்கமே போவதில்லை.

காலங்கள் கடந்து சென்றன. அந்த சிறுவன் வளர்ந்து வாலி பப்பருவம் எய்தினான். இருந்தாலும் அந்தப்பிசாசு பயம் அப் படியே அவன் மனதில் படிந்திருந்தது. தனியாக அந்த மயானப் பக்கம் போக அச்சமடைந்த நிலையில் இருந்தான். இந்த மனநிலையில் அவன் இருக்க பிச்சைக்காரன் ஓர் நாள் அந்தச் சிறுவனை அழைத்தான். "தம்பி....பக்கத்து ஊருக்குப் போய் வாறியா ஒரு வேலை இருக்கு அதைச்செய்வாயா?"என்று கேட் டார்.

அதற்கு அவன் "போறேன்... ஆனால் பயமா இருக்கின்றது!" என்று கூறினான். பிச்சைக்காரன் உடனே "என்ன பயம்?"என்று கேட்டார்..

சிறுவன் "மயானத்தில் இருக்கின்ற பிசாசுக்குத்தான் பயம்" என்றான். உடனே பிச்சைக்காரன் பரிந்துகொண்டான். இந்தப் பயத்தை எப்படிப்போக்குவது என்று யோசித்துவிட்டு தாயத்து ஒன்றை எடுத்து அந்த இளைஞன் கையில் கட்டினார். அதன் பின்னர் இனிமேல் "அந்தப்பிசாசு உன்னை ஒன்றும் செய்ய முடியாது! கடவுள் அந்த பிசாசுவிடம் இருந்து உன்னைக் காப் பாற்றுவார்" என்று கூறினார்.

இந்த வார்த்தைகள் இளைஞனுக்கு சிறிது துணிச்சலை கொடுத்தன. இளைஞனும் புறப்படத் தொடங்கினான் துணி வோடு அந்த மயானத்தைக் கடந்து செல்லும் போது அவனது மனம் யோசிக்க ஆரம்பித்தது.

நாம் இப்போது ஏன் பிசாசுக்காகப் பயப்படுகிறோம். பிசாசே கடவுளைப் பார்த்துப் பயப்படவேணும் என்றால் அந்தக் கடவு ளும் எவ்வளவு பெரிய பிசாசாக இருக்க வேண்டும்? இவ்வாறு நினைக்க ஆரம்பித்தான்.

இப்போது பிசாசுவின் பயத்தைவிட கடவுளின் பயம்தான் அவனுக்கு அதிகமானது. அது மட்டுமல்லாமல் அதேசமயம் கடவுளின் தரகர்கள் மாதிரி நடிக்கின்ற போலி மனிதர்கள் மேலேயும் பயம் ஏற்பட்டுவிட்டது.

அந்த இளைஞன் பாவம். இரவில் பிசாசுக்காகப் பயந்தான் பகலில் மகா பிசாசான கடவுளுக்காகப் பயந்தான். போலிச் சாமியார்களைப் பார்த்தும் பயப்பட ஆரம்பித்து விட்டான்.

எந்த நேரமும் இளைஞன் அஞ்சி ,நடுங்கி வாழ்வதை அந்தப் பிச்சைக்காரன் கவனித்தான். அவனுக்கும் தான்செய்த தவறு புரிந்தது. அதனால் ஏற்பட்ட விபரீத விளைவை உணர்ந்தான் .

அதன் பின்னர் "தம்பி இங்கே வா!" என்று அந்த இளை ஞனை அழைத்தான். அவனின் கையில் தான் கட்டிய தாயத்தை தன் கையாலே அவிழ்த்தான். அவனுக்கு முன்னாலேயே அதை அடுப்பில் வீசினான். அதன் பின்னர் "வா போவோம் "என்று அவனை அழைத்துக் கொண்டு மயானத்துக்குப் போனான் பிச்சைக்காரன். அங்கு சென்று "இங்கே பார்! பேய் ,பிசாசு என்று எதுவும் இல்லை. ஒரு பேச்சுக்குத்தான் உன்னிடம் சொல்லி வைத்தேன்" என்று விளக்கமாகச் சொன்னான் அந்த பிச்சைக்காரன்.

இளைஞன் யோசித்தான். அதன் பின்னர் அவனது மனதில் ஓர் தெளிவு ஏற்பட்டது. இது நாள் வரையிலும் இவனுக்குள் உறைந்திருந்த பேய், பிசாசு பயம் விடை பெற்றுக்கொண்டு விட்டது. பயத்தால்உருவானபோலிக்கடவுளும் "போயிற்று வாறேன்" என்று செல்லி விட்டுப் போய்விட்டார்.

மனிதனுக்கு "தான்" என்கின்ற எண்ணத்தால் தான் துன்பங்கள், கவலைகள்,பாதுகாப்பற்ற நிலை,மரணப்பயம் என்பன உருவாகின்றன.எனவே இவற்றிலிருந்து தப்பிக்க கடவுளே கதி என்கின்ற சரணாகதி நிலையை அவன் உருவாக் கிக் கொள்கிறான்.என்கிறார் தத்துவமேதை ஓசோ.

கடவுளை பயத்தின் மூலமாக அடையவே முடியாது! என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**கோ.சுவாமிநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு




அ.இரவீந்திரன்
பரீட்சை இலக்கம்: 06

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்-1** நேரம்: 45 நிமிடங்கள்

## எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.


01. அடைப்பினுள் தரப்பட்டுள்ளவற்றை வகைப்படுத்தும் பொருத்தமான பொது இயல்பு எது?



1) மின்சாரத்தில் இயங்குபவை
2) தகவலை பரிமாறுபவை
3) உலோகப் பொருள்கள்
4) வீட்டில் பயன்படுத்துபவை


02. பாடலில் விவரிக்கப்படும் பறவையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க்கோடிடுக.

சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக்குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீயாவாய்





✱ 3ஆம், 4ஆம் வினாக்களுக்கு உள்ள கோலத்தில் அடுத்துவரும் உருவின் கீழ்க் கோடிடுக.


03.




04.




05. இவ்வுருவுடன் கீழ்வரும் எவ்வுரு செவ்வகத்தை உருவாக்குவதற்கு சரியாக பொருந்தும் எனத்தெரிவுசெய்க.





06. தரப்பட்ட சொல்லினைத் தளவாடியில் பார்க்கும்போது தோன்றும் சரியான விம்பம் எது?


**ATIM**

1) ∀TIM  2) WITA
3) MITA  4) MIT∀


07. இவ் உருவை மேல் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் எது?





08. அருகில் உள்ளவாறு வெட்டப்பட்ட தாளைக் கொண்டு உருவாக்கக் கூடிய சதுரமுகி எது?




09. இதனை விரிக்கும் போது தோன்றும் சரியான உருவின் கீழ்க்கோடிடுக.




✱ 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு படத்தில் காட்டப்பட்டுள்ள சதுர முகியினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



10. புள்ளிக் கோடிடப்பட்டுள்ள பகுதி வழியே வெட்டும்போது வரும் சரியான உருவின் கீழ்க்கோடிடுக.
1) நான்முகி  2) கூம்பகம்
3) முக்கோணம்  4) கூம்பு


11. வெட்டப்பட்ட உருவிற்கு எத்தனை உச்சிகள் உள்ளன.
1) 2  2) 4  3) 3  4) 5

✱ 12ஆம், 13ஆம் வினாக்களிலே வரும் மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

12. எழுத்தாளர் - நூல்
1) காடு - காட்டுத்தீ  2) கறையான் - புற்று
3) மருத்துவர் - தாதி  4) நீர் - தாகம்

13. நீதிமன்றம் - சட்டம்
1) பாடசாலை - ஒழுக்கம்  2) செய்தித்தாள் - உலகச்செய்தி
3) பேனா - எழுத்து  4) இராணுவம் - யுத்தம்

14. மொழி, சிங்களம், தமிழ் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் கீழ் உள்ள உரு காட்டுகின்றது. இதில் A யினால் காட்டப்படுவது யாது?
1) தமிழ்
2) சிங்களம்
3) மொழி




15. சுதந்திர தின விழாவில் பாடசாலை மாணவரின் அணிவகுப்பு நடைபெற்றது. ஒரு நிரையிலே 12 மாணவர்கள் நின்றனர். அவ்வாறு 5 நிரைகளில் மாணவர்கள் நின்றனர். பின்னர் அவர்களை ஒரு நிரையில் 20 மாணவர்கள் வீதம் நிறக்ச் செய்தால் எத்தனை நிரைகளில் மாணவர்களை நிறுத்தலாம்?
1) 5  2) 3  3) 4  4) 6

16. கமலாவின் தாய் செல்வி, பிரியாவின் சகோதரி கமலா, பிரியாவின் தந்தை குமரன் அவ்வாறாயின் செல்வியும் கமலாவும் முறையே குமரனுக்கு என்ன உறவு முறையாகும்?
1) மனைவி - மாமி  2) மனைவி - மருமகள்
3) மனைவி - மகள்  4) மனைவி - சகோதரி

✱ 17ஆம், 18ஆம் வரையான வினாக்களுக்குரிய சரியான விடையை பின்வரும் குறியீட்டின் அடிப்படையில் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
A = 3, AN = 5, RAN = 7, CAN = 9


17. R எனும் எழுத்தின் பெறுமானம் யாது?
1) 3  2) 2  3) 4  4) 5

18. C எனும் எழுத்தின் பெறுமானம் யாது?
1) 4  2) 5  3) 3  4) 2

19. பின்வரும் வாக்கியத்தில் திருத்தமான ஒழுங்கைக் காட்டும் விடையை தெரிவு செய்து அது குறித்து நிற்கும் விடையின் கீழ்க் கோடிடுக.
A. கஜன் மரத்திலிருந்து இறங்கி வீட்டுக்குப் போனான்.
B. சிங்கம் எழுந்து இரு நண்பர்களையும் அவதானித்தது.
C. சிங்கம் அவர்களை உண்டதும் காட்டுக்குள் சென்றது.
D. அது கர்ச்சித்த பின்னர் நண்பர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொன்றது.
1) ABCD  2) DCBA  3) BDCA  4) ACBD

20. ராஜன், கரன், தரன் ஆகியோர் குறித்த பணியை 7 நாள்களில் செய்து முடிப்பர். ராஜனும் கரனும் சேர்ந்து அப்பணியை 14 நாட்களில் முடிப்பர் எனின், தரன் தனியே இந்தப்பணியை எத்தனை நாள்களில் செய்து முடிப்பான்.
1) 21 2) 20 3) 15 4) 25

21. நான்கு வீரர்கள் மரதனோட்டம் ஓடி முடித்த நேரம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதன்படி வெற்றிபெற்ற வீரர் யார் எனத் தெரிவுசெய்க.



நிஸவான்  நிசாம்  சலீம்  அக்ரம்


1) சலீம் 2) நிசாம்  3) நிஸவான்  4) அக்ரம்

22. சாந்தனின் பையில் மூன்று வகையான காசுகள் உள்ளன. அவற்றின் பெறுமதி ரூ.19 ஆகும். அவனிடம் உள்ள காசுகள் எவையாகும்.
1) 10 ரூபாவில் 1 உம், 5 ரூபாவில் 2 உம்.
2) 5 ரூபாவில் 2 உம், 2 ரூபாவில் 2 உம், 1 ரூபாவில் 4 உம்.
3) 5 ரூபாவில் 2 உம், 2 ரூபாவில் 4 உம், 50 சதத்தில் 2 உம்.
4) 5 ரூபாவில் 2 உம், 2 ரூபாவில் 3 உம், 1 ரூபாவில் 1 உம், 50 சதத்தில் 2 உம்.

23. 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை எனின், 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி என்ன கிழமையாகும்?
1) ஞாயிறு  2) வெள்ளி  3) திங்கள்  4) செவ்வாய்

24. நகுலன் தனது 9ஆவது பிறந்த நாளை 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடினான். அவன் தனது 10ஆவது பிறந்த நாளை 2009ஆம் ஆண்டு என்ன கிழமையில் கொண்டாடி இருப்பான்?
1) வெள்ளி  2) வியாழன்  3) புதன்  4) சனி

25. பின்வரும் எண் கோலத்தை விளங்கிக் கொண்டு புள்ளிக் கோட்டில் வரவேண்டிய மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.




1) 12  2) 6
3) 8  4) 10

(17ஆம் பக்கம் பார்க்க)

விமர்சனங்களுக்கு: கல்விச்சுடர் ஆசிரியபீடம் தொலைபேசி: 021 5670259

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேட்டு வைத்த பாட்டுப் பெட்டி!

பஸ்ஸுக்காகக் காத்திருந்தான் அந்த இளைஞன். பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம்பெற்று வெளியேறி பல வருடங்கள் வேலையில்லாப் பட்டதாரி என்ற பெயரோடு வீட்டில் தண்டச் சோறாக இருந்தவனுக்கு இன்றைய 'இன்ரர்வியூ' நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. ''கட்டாயம் இந்த வேலை கிடைக்கும்'' தனக்குள் ஒன்றுக்கு நூறுமுறை சொல்லிக் கொண்டான். நேர்முகத்தேர்வுக்கு வந்திருந்தவர்களில் அவன்தான் அதிக தகுதியைக் கொண்டிருந்தான். அதிகாரிகள் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் அசராமல் பதில்சொல்லி அவர்களின் பாராட்டையும் பெற்றிருந்தான். தனியார் நிறுவன வேலைதான். ஆனாலும் சுளையாகச் சம்பளம். அரச வேலை ஒன்று கிடைக்கும் மட்டும் இப்போதைக்கு இதுபோதும்.

அரைமணி நேரக் காத்திருப்புக்குப் பின்னர், மினி பஸ் ஒன்று ஒருபக்கம் சாய்ந்தபடி அவனருகே வந்துநின்றது.

''அண்ணை எங்க போறீங்கள்?'' கொண்டக்டர் அவசரமாகக் கேட்டான்.

''கல்வியங்காட்டுக்கு'' என்று சொல்லிவிட்டு இந்த பஸ்ஸில் பயணிக்க தனக்கு மனமில்லை என்பதைக்காட்ட உதட்டைப் பிதுக்கினான்.

''அண்ணை உள்ளுக்குள்ள இடமிருக்குது. வேணும் என்றால் சீற்றும் தரலாம். வெளியால பார்த்து 'கிறவுட்' எண்டு நினைக்காதைங்கோ'' கொண்டக்டரின் வார்த்தைகள் அவனுக்குள் பயணம் செய்யும் மனநிலையை உண்டாக்கின. புதுமாப்பிள்ளைபோல ஆள்நுழைய இடமில்லை. ஒருமாதிரி வளைந்து நெளிந்து உள்ளே நுழைந்துவிட்டான். மூச்சுமுட்டியது. எந்தப் பக்கமும் அசையமுடியாமல் இறுகிப் போய் ஒற்றைக் காலில்தான் நிற்கவேண்டியிருந்தது. முகத்தில் வழிந்தோடும் வியர்வையைத் துடைப்பதற்கு 'பொக்கற்றில்' உள்ள கைக்குட்டையைக்கூட எடுக்க வழியில்லை. கை கீழே செல்லவோ, அல்லது கைக்குட்டையோடு மேலே வரவோ அங்குல இடம் தானும் இல்லை.

''ஒரு அரைமணித்தியாலப் பயணம்தானே. சமாளிப்பம்'' தனக்குத்தானே சமாதானம் சொன்னவாறு நெரிபட்டபடி அவனது பயணம் தொடர்ந்தது.

இன்னுமொரு தரிப்பிடத்தில் பஸ் நின்றது.

''ஏற்கனவே நிக்க இடமில்லாமல் தொங்கிக் கொண்டு வாறம். இதில என்னண்டு ஆக்களை ஏத்தப்போறாங்கள்?'' உள்ளிருந்தவர்கள் சினத்துக் கொண்டார்கள்.

அந்த பஸ் தரிப்பிடத்தில் நாலைந்து சுடிதார் அணிந்த பெண்கள். கொண்டக்டர் முகத்தில் கன நேர மாகக் காணாமல் போயிருந்த புன்னகை மீண்டு வந்தது. ஒவ்வொன்றாக எண்ணாமலே கொண்டக்டருக்கு 32பல்தான் என்பதை அவரது அகன்ற சிரிப்பு உணர்த்தியது. நின்றவர்களும் லேசுப்பட்டவரகள் அல்லவே. கொள்ளைச் குலுக்கிய சிரிப்போடு பஸ்ஸுக்குள் ஏறிக்கொண்டார்கள். அவர்களை வெகு பக்குவமாக உள்ளே ஏற்றுவதற்கு வசதியாக பஸ்ஸுக்குள் அடைபட்டிருந்த பலரைக் கொண்டக்டர் கீழே இறக்கினார். சீற் ஒன்றில் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த வயோதிபர் அருகில் சென்ற கொண்டக்டர்-

## கோணல் கோலங்கள்

''ஐயா! நீங்கள் நல்லூரடியில இறக்கமல்லோ கொஞ்சம் எழும்பி நில்லுங்கோ'' என்று சொல்லிவிட்டு அவரைத் தூக்கி எழுப்பினார். மலங்க மலங்க விழித்தபடி தள்ளாடிய உடலோடு வயோதிபர் எழுந்து நிற்க, அவரது ஆசனம் புதிதாக ஏறிய புன்னகைப் பூக்களுக்கு வழங்கப்பட்டது. மீண்டும் ஆள்களை அடைந்தபடி பயணம் தொடர்ந்தது. சீற்றிலிருந்த யுவதியை அடிக்கடி கொண்டக்டரின் கண்கள் மேய்ந்தன. சாரதியைப் பார்த்து கொண்டக்டர் கண்ணடித்து சிக்னல் கொடுக்க, திடீரென-

''அடியே சக்கரவல்லியே சந்தனமல்லியே!

நங்காய் நிலாவின் தங்காய்...'' என்றபடி பாட்டுப் பெட்டி உச்சக்குரலெழுப்பத் தொடங்கியது. சீற்றிலிருந்த 'சக்கரவல்லியும்' சில்லறைகளை வாங்கிக்கொண்டிருந்த 'கொண்டக்டர் மல்லியும்' பாட்டின் வரிகளுக்கேற்ப ரகசியங்களை கண்களால் பேசிக் கொண்டார்கள். இந்தப் பார்வை ஒன்றே போதும் நாடகத்தில் கொண்டக்டர் லயித்துப்போனதால், பல பயணிகளை அவர்களை இறக்கவேண்டிய இடத்தை விட்டு வேறெங்கோ தூரமாகக் கொண்டு சென்று இறக்கிக்கொண்டிருந்தார்.

எல்லாப் பாட்டுகளும் காதல் ரசம் சொட்டும் துள்ளிசையோடு இருந்தன. 'நிலவின் தங்கையின்' பார்வை அதிகரிக்க அதிகரிக்க பாட்டின் தொனியும் காதைப் பிளக்கத் தொடங்கியது. தலையே வெடித்துவிடும்போல இசை முழக்கம். பஸ் பயணமா? இசைக் குழுவின் கச்சேரியா? என்று எல்லோரும் தலையைப் பிய்க்கவேண்டியிருந்தது. ஒருவாறு தான் இறங்க வேண்டிய இடத்தை 'கைக்கணக்கில்' அனுமானித்து நமது இளைஞன் இறங்கிக்கொண்டான். இறங்கியவுடன் எதேச்சையாக செல்போனைத் தூக்கினான். 21 மிஸ்ட் கோல்கள்! அதுவும் ஒரே இலக்கத்தில் இருந்து. பஸ்ஸின் பாட்டுப்பெட்டிச் சத்தம் செல்போன் ஒலியை அமுக்கிவிட்டதால் அவனுக்குக் கோல் வந்த சத்தம் கேட்கவே இல்லை.


அவசரமாக அந்த நம்பருக்கு கோல் எடுத்தான். மறுமுனையில் அவனுக்கு 'இன்ரவியூ நடத்திய நிறுவனத்தின் அதிகாரி.

''என்ன ஐஸே! உமக்கு எத்தனை தரம் கோல் எடுத்தது? ஒரு பொறுப்பான ஆள்மாதிரி நீர் நடக்கேல்லை. திடீரெண்டு எங்கட கெட் ஒபிஸ் ஆள்கள் புதுசா செலக்டான உம்மைப்பார்க்க கூப்பிட்டவை. அதுக்குத்தான் கோல் எடுத்தனான். ஆனால் நீர் கொழுப்பில ஆன்சர் பண்ணேல்லை. அதாலை உமக்கு அடுத்த ராங்கில இருந்தவரைக் கூப்பிட்டு அவைக்குக் காட்டினம். அவரை அவைக்குப் பிடிச்சிட்டுது. நீர் வேற எங்கயாவது வேலையப் பாரும். உமக்குத்தான் அடிச்ச கோலைக்கூட எடுக்கநேரம் இல்லையே. வெரி சொறி.'' அதிகாரி போனைக் கட் பண்ணி விட்டார். இளைஞன் கண்ணீரோடு நின்றான்.

ஐயா! காதைப்பிளக்கும் அளவுக்குப் பாட்டைப் போட்டு அவசரமான தொலைபேசிகளுக்குக் கூட 'ஆன்சர்' பண்ணவிடாமல் களுத்தறுக்கும் கொண்டக்டர்களே! உங்களுக்கு இது சமர்ப்பணம்.

ஓடுகாலி


(16ஆம் பக்கத் தொடர்ச்சி)


26. 


A போத்தலை நிரப்ப D இப்போத்தலால் எத்தனை தடவை நீரூற்ற வேண்டும்.

1) 64 தடவை 2) 48 தடவை 3) 32 தடவை 4) 40 தடவை


* பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி 26ஆம், 27ஆம் வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்க.


விலை ரூ. 50


விலை ரூ. 80

27. அப்பிள் ஒன்றினதும் மாம்பழம் ஒன்றினதும் விலை யாது?
1) விலை ரூ. 50 2) விலை ரூ. 30
3) விலை ரூ. 40 4) விலை ரூ. 20

28. அப்பிள் ஒன்றின் விலை யாது?
1) விலை ரூ. 30 2) விலை ரூ. 10
3) விலை ரூ. 20 4) விலை ரூ. 40

29.  

இவ் இசைக்கருவியானது ஆயுதத்தின் ஒத்த சொல்லை சேர்த்து எழுதும் போது ஒரு மாவட்டத்தின் பெயர் வரும் அம்மாவட்டத்தை எழுதுக.
(..............................)

30. பண்ணை ஒன்றில் 12 மாடுகளும், 15 வாத்துக்களும் உள்ளன. அப்பண்ணையில் உள்ள பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 60 2) 50 3) 78 4) 80

* 31ஆம் 32ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட படத்தினை அடிப்படையாக கொண்டு விடை எழுதுக.

மைதானத்தைச் சுற்றி நடப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வரும் படம் காட்டுகின்றது. அதனைப் பயன்படுத்தி 30ஆம், 31 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.




31. இதற்கேற்ப மைதானத்தில் எந்நிறக் கொடிகள் அதிகளவில் நடப்பட்டுள்ளன?
1) பச்சை 2) மஞ்சள் 3) நீலம் 4) சிவப்பு

32. ஒவ்வொரு நிறத்திலுமுள்ள கொடிகளின் எண்ணிக்கையை குறைந்ததில் இருந்து கூடியது வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1) பச்சை, சிவப்பு நீலம் மஞ்சள் 2) பச்சை, நீலம், மஞ்சள், சிவப்பு
3) சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் 4) பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள்

* பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லை கண்டுபிடித்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

33. முதலாம் எழுத்து கண்ணில் உண்டு; பண்ணில் இல்லை. இரண்டாம் எழுத்து படத்தில் உண்டு பழத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து பல்லில் உண்டு பதவியில் இல்லை. அது என்ன? (..............................)

34. முதல் எழுத்து வில்லில் உண்டு; பல்லில் இல்லை. இரண்டாம் எழுத்து மரத்தில் உண்டு; மறத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து சொல்லில் உண்டு; சொதியில் இல்லை. நான்காம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை. அது என்ன? (..............................)

35. தவறிழைத்த மாணவனுக்குத் தண்டனை வழங்காமல் வேறு ஒரு மாணவன் தண்டனை பெறுதல் என்பதை விளக்கப் பொருத்தமான பழமொழி.
1) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
2) இட்டுக் கொட்டார் யாரும் இல்லை.
3) எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்?
4) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.

36. மாலை வேளை மலர்ந்தது கங்குல் மங்கை தோன்றப் போகிறாள் என்பதில் ''கங்குல் மங்கை'' என்று குறிப்பிடப்படுவது எது?
1) சூரியன் 2) நட்சத்திரம் 3) மங்கை 4) நிலா

37. இன்று இணையத்தளத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. இதற்குரிய காரணம் யாதாக இருக்கலாம்?
1) வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரித்தமை.
2) வேலை வாய்ப்புத் தேடி.
3) பொழுதுபோக்கு அம்சங்கள் இணையத்தளத்தில் உள்ளமை.
4) விஞ்ஞான தொழில்நுட்பம் பற்றிய அறிவு மக்களுக்கு ஏற்பட்டமை.

38. பாடசாலை ஒன்றில் எப்போதும் இருப்பது,
1) மரங்கள் 2) தளபாடங்கள்
3) கட்டடங்கள் 4) மைதானம்

39. மரக்கறித் தோட்டத்தில் மிளகாய், வெண்டி, கத்தரி, தக்காளி என்ற ஒழுங்கில் நடப்பட்டிருந்தது. அவ்வாறாயின் 32ஆவது இடத்தில் இருக்க வேண்டிய செடி யாது? (....................................)

40. நீர்த்தாங்கி ஒன்றில் ஒரு செக்கனில் 1 லீற்றர் நீர் வெளியேறுமெனில் 1 நிமிடத்தில் எத்தனை லீற்றர் நீர் வெளியேறும்?
(....................................)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக ஸ்தாபன விற்பனை

பிறவுண் வீதி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்துக்கும் முன் பாக 26A இலக்க, நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் சிவன் கணினிப் பூங்காவும் எழுது பொருள்களும் (Sivan Com puter Park Stationers) எனும் வர்த்தக ஸ்தாபனம் அலுமினிய கண்ணாடி, மர அலுமாரிகள், இறாக்கைகள், இரண்டு போட் டோ பிரதி இயந்திரங்கள் மற்றும் வியாபாரப் பொருள்கள் என்ப வற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. மு.ப.8.00 மணி முதல் பி.ப.5.00 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்புத் தொலைபேசி இல: 021 222 3843



## இந்தியாவில் உயர்கல்வி
## STUDY IN INDIA

**SSM** College Of Engineering
College Of Arts & Science
குமரப்பாளையம், தமிழ்நாடு.
affiliated to Anna University & Periyar University

**Available DEGREE / ENGINEERING Courses**

Mechanical Engineering, Electrical, Electronics, Communication Engineering, Computer Science, Information Technology, Textile Technology & Chemistry, Bio Technology, Microbiology, BBA, B.com, Computer Applications, BBM, Bsc

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் யாவும் Sri Lanka University Grant Commission இனால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இவற்றை பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, UK, USA, ஆகிய நாடுகளில் குடும்ப சகிதம் வதிவுரிமை (PR) பெற வாய்ப்புண்டு.

- IELTS தேவையில்லை
- Bank Sponsor தேவையில்லை
- தகமை : G.C.E A/L - 3 Passes

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருட Govt. Diploma (Engineering, Bio, Management) பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

**Call : 0777 767818 / 0776 209887**

SIC CENTER, 101/35, STANLY ROAD, JAFFNA.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**மகாலிங்கம் இராஜேஸ்வரி**



மண்ணில்
24.10.1938

விண்ணில்
03.07.2010

திதி: அபரபக்க ஸப்தமி
(22.06.2011)

ஆண்டொன்று கழிந்திட்ட போதினிலும்
ஆறவில்லை எங்கள் மனதின் சோகங்கள்
எண்ணியபடி வாழவைத்த எமையெல்லாம் ஊக்குவித்த
கண்ணியமான எம் அம்மாவின் நினைவுகள்
என்றென்றும் எமைவிட்டு அகலாது
இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா
சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
இருபாலை தெற்கு, கல்வியங்காடு. (2115)

குடும்பத்தினர்.

(49,22,23)


தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருந்த புதிய பிரிவுக்கான அனுமதிகள் 27.06.2011 திங்கள் காலை முதல் ஆரம்பமாகின்றன.

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- **3 மாத கால** கேக் ஐசிங் (7 வகை. 25 அமைப்புகளில்), ஐசிங் பூக்கள், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரங்கள் (50 வகை), பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Works. *கூந்தல் அலங்கார பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facials,* மணமகள் அலங்காரம் வகுப்புகள் ஆரம்பமாகும்.
- தையலில் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள். ➡ மேற்படி பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தையல் தெரிந்தவர்களுக்கான **2** வாரகால சாறி பிளவுஸ் தயாரிப்பு வகுப்புக்கள்.

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*


## விசா நிலையம் இடமாற்றம்

கொழும்பு, ஜூன்22

நோர்வே, பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் இலங்கைத் தூதரகங்களுக்கான செங்கன் விசா விண்ணப்ப நிலையம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை முதல் கொழும் பில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டட கிழக்கு கோபுரத்தின் 6ஆவது மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

செங்கன் விசா விண்ணப்ப நிலை யம் முன்னர் கொழும்பு 5 ஹவ்லொக் வீதியில் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

## மகாணமட்ட வினாடி வினா போட்டிகள் ஒக்ரோபரில்

பருத்தித்துறை, ஜூன் 22

வடமாகான பாடசாலைகளுக்கு இடையிலான விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது. வலய மட்ட விஞ் ஞான வினாடி வினாப் போட்டிகளை ஜூலை மாத முதல் வாரத்தில் நடத்தி முடிக்குமாறு மாகணக் கல்வித் திணைக் களம் கோரியுள்ளது.

இந்தப் போட்டி தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளில் நடத்தப்படவுள்ளது.

(வ-190)

## சட்டவிரோதமாக கால்நடைகளை கொண்டுசென்ற மூவர் கைது

கொழும்பு, ஜூன் 22

காலி, போகஹகொட பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கால் நடைகளை இரண்டு லொறிகளில் கொண்டுசெல்ல முயற்சித்த மூவர் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீதியில் பயணித்த இரண்டு லொறிகளைச் சோதனையிட்டபோது இந்த கால்நடைகள் மீட்கப்பட்டுள்ளன என்று ஹபராதுவ பொலிஸார் தெரிவித் தனர்.

28 கால்நடைகள் அந்த லொறிகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த ஹபராதுவ பொலிஸார் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## அக்குறணை வர்த்தக நிலையத்தில் தீ


கொழும்பு, ஜூன் 22

அக்குறணை நகர வர்த்தக நிலைய மொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட தீவிபத்தில் மாடிக் கட் டடம் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது.

கட்டடத்தில் தீ பரவியதற்கான கார ணம் இன்னமும் கண்டறிப்படவில்லை. இருப்பினும் மின் ஒழுக்கினால் தீ ஏற்பட்டிருக்கலாமெனக் கருதப்படு கின்றது.

இதனால் பல லட்சம் ரூபா நட் டம் ஏற்பட்டுள்ள தாகத் தெரிய வரு கிறது. இந்தச் சம் பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசார ணைகளை மேற் கொள்கின்றனர்.

## கண்ணீர் அஞ்சலி



S. ஆறுமுகம் அன் சன்ஸ்
ஸ்தாபகரும்,
முதுபெரும் கட்டட
ஒப்பந்தகாரருமாகிய


**K.S. ஆறுமுகம்**

அவர்கள் இறைபதம்
எய்தியதையிட்டுத் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டட ஒப்பந்தகாரர்கள்.

## இவரைக் காணவில்லை

அருளானந்தம்
**யோண்சன் இதயதாஸ்**



19.05.2009 அன்று இடப்
பெயர்வின்போது முல்லைத்தீவு
புதுமாத்தளனில் இருந்து
புறப்பட்ட இவர் தொடர்பான
எந்தத் தகவலும் இல்லாத
காரணத்தினால்
இவரது பெற்றோர் இவரைத்
தேடுகின்றனர். இவர்
தொடர்பான தகவல் தெரிந்தோர்
கீழ்வரும் முகவரிக்கு தயவு
செய்து அறியத்தரவும்.

தோ.அருளானந்தம்
தாளையடி.
T.P: 0778736590

(49,22,23)

## விண்ணக வாழ்வில்...
## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் கரங்களில்:
04.12.1945

இறைவனின்
திருப்பாதங்களில்
14.07.2009

**தியாகராஜா நவநீதன்**

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

35/6, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (48,24,25)

குடும்பத்தினர்

## பிரிவின் முதலாம் ஆண்டு நினைவுநாள்

பாசமுள்ள எமது அன்னை
**திருமதி அன்னலெட்சுமி வல்லிபுரம் B.A**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



மலர்வு
06.02.1939

மறைவு
04.07.2010

*திதி: 22.06.2011 (புதன்கிழமை)*

பாசமுடன் எமை பக்குவமாய் வளர்த்தெடுத்து
தேசத்தில் எமை சிறப்பாக வாழ வைத்து
நேசமாய் எம்முடன் மகிழ்ந்திருந்து மறைந்தாலும்
வாசம் செய்கிறீர் எம்மனதில் என்நாளும்...

108, கலைமகள் வீதி,
கல்வியங்காடு. (சி/984)- (49,22,20)

தங்கள் நினைவில் வாடும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனரமைப்பு பணிகளுக்காக காத்திருக்கும் நயினாதீவு முஸ்லிம் பள்ளிவாசல்

நயினாதீவு ஒரு புண்ணியபூமி என்பது அங்குள்ள மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தாகும். பிரசித்தி பெற்றதும் வரலாற்றுப் புகழ் மிக்கதுமான நயினை ஸ்ரீ நாக பூசணி அம்பாள் ஆலயம், நயினைராஜ மகா விகாரை, பள்ளிவாசல் என முப்பெரும் தெய்வங்களின் அருளாசி பெற்ற பூமி என்பதில் அங்கு மாறுபட்ட கருத்துக்கு இடமே இல்லை. அந்தப் புனித மண்ணில் கிழக்குக் கடற்கரையை அண்டியுள்ளது முஸ்லிம் மக்களுக்கான பள்ளிவாசல். இது சுமார் 125 வருடங்களுக்கு முற்பட்ட பழைமைமிக்கதாகும்.

நயினாதீவில் பள்ளிவாசல் தோற்றம் பெறுவதற்கு தொழில் ரீதியாக அங்கு தங்கியிருந்த முஸ்லிம் மக்களே காரணமாகும். 125 வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவின் கீழ்க்கரையில் இருந்து அங்கு சங்கு குளிப்பதற்காக வந்த முஸ்லிம் சம்மாட்டி முகமது மதார்.

நெடுந்தீவு, மன்னார், ஊர்காவற்துறை, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய பகுதிகளில் தொழில் செய்வதற்கு வசதியாக ஒவ்வொன்றிலும் சுமார் பதினைந்து இருபது பேர்கள் கொண்ட 25 படகுகளில் கீழ்க்கரையில் இருந்து வந்த முஸ்லிம்கள் தமக்கு வசதியாக நயினா தீவில் தங்கியிருந்து தமது தொழிலை மேற்கொண்டனர். சோழகக் காற்றுக் காலங்களில் தங்கியிருந்து தொழில் செய்ய நயினாதீவு மிகவும் வசதியாக இருந்ததுள்ளது.

தொழிலாளர்களுடன் தங்கியிருந்த முகமது மதார் உம்மாவாக மாறிய பொன்னி என்னும் பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அதனை அடுத்தே இங்கு முஸ்லிம் குடியிருப்புக்கள் இடம் பெற்றன. முஸ்லிம்கள் அங்கு தங்கித் தொழில் செய்ததால் தொழுகைக்கென அவர்களுக்கு ஒரு பள்ளி தேவைப்பட்டது அதனடிப்படையில் உருவானதே இந்தப் பள்ளிவாசல். இது அமைக்கப்பட்ட காலம் தற்சமயம் அங்குள்ள முஸ்லிம்களின் கூற்றுப்படி கி.பி. 1826 ஆம் ஆண்டாகும்.

தற்போது 25 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் நயினாதீவில் உள்ளனர். ஏழு பேர் கொண்ட பரிபாலன சபையின் தலைவராக உதுமான் முகமது கனியா என்பவர் விளங்கினார். யுத்தகாலத்தில் முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்த போதும் நயினாதீவில் முஸ்லிம்களின் இடப்பெயர்வு என்பது பெரியளவில் இல்லை. அந்தக் காலப் பகுதியில் வடபகுதிக்கான கட்டளைத் தளபதி கொமடேன் ரசிக் மட்டுமன்றி விடுதலைப்புலிகள் அமைப்பும் அங்குள்ள மக்களை இடம் பெயர வேண்டாம் எனக் கூறியிருந்ததாகவும் சொல்லப்பட்டது. இந்தக் காலங்களில் ஐந்து வேளைகளும் தொழுகை நடைபெற்ற ஒரு பள்ளி வாசலாக இருந்தது இந்தப் பள்ளிவாசல் தான் என்றுகூறிப் பெருமைப்படுகின்றனர் அங்குள்ள முஸ்லிம்கள்.

இந்தப் பள்ளிவாசலில் தற்போது பல்வேறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன. ஒரு மௌலவி இல்லாமல் சிரமப்படும் இங்குள்ள முஸ்லிம் குடும்பங்கள் ஒரு தொகைப் பணத்தை மாதாந்தம் வழங்கி ரூபா 20 ஆயிரம் கொடுப்பனவில் மௌலவி ஒருவரை நியமித் துள்ளனர். தற்போது அப்துல் லதீப் மௌலவியாக உள்ளார்.

இந்தப் பள்ளிவாசலை உரியமுறையில் செப்பனிட்டு எமது மதக்கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளன. எனினும் அதற்கான வசதிகள் தம்மிடம் இல்லை என்பதனால் அரசு இந்தப் பள்ளி வாசலின் மறுசீரமைப்புக்கு உதவ வேண் டும் என்பது இங்குள்ளவர்களின் கருத் தாகும். இந்தப் பள்ளிவாசலுக்கு அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா சில உதவிகளை வழங்கியுள்ளார். அத்துடன் புதிதாக ஒலி பெருக்கிக் கருவிகளையும் அவர் வழங்கச் சம்மதித்துள்ளதாகவும் தெரிவித்த உது மான் முகமது முகைதீன் முஸ்லிம்கள், அமைச்சர்கள், ஜனாதிபதியின் ஆலோசகர் எனச் சிறந்த பதவிகளில் உள்ளவர்கள் இந்தப் பள்ளிவாசல் குறித்துக் கவனிப்பதில்லை எனக் கூறினார்.



லக்ஸ்மன்

ஜனாதிபதியின் ஆலோசகரான அஸ்வரிடம் அண்மையில் இந்தப் பள்ளி வாசல் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இங்கே ஒரு மதுரஸா கட்டவேண்டும். இதற்கு அதி உயர் பதவியில் உள்ளவர்கள் உதவ வேண்டும் என்கிறார் முகமது முகைதீன். பள்ளிவாசலின் முன்புறத்தில் சுலைகா பீபியின் தர்கா சிதைந்த நிலையில் உள்ளது. சிறிய அளவிலாவது மினரா (முகப்பு) கட்டவேண்டும். எதிர்காலத்தில் அதற் கான சந்தர்ப்பம் கிடைக்குமோ இல்லையோ இப்போது அதைக் கட்டி முடிக்க முஸ்லிம் பெரியார்கள் உதவ வேண்டும்என்பதே இந்தப் பகுதி முஸ்லிம்களின் எதிர்பார்ப்பாகும். தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பாத யாழ்ப்பாணம், கொழும்புப் பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் ரூபா 6 லட்சம் செலவில் சில புனரமைப்புப் பணிகளுக்கு உதவியுள்ளனர்.

மதக் கடமைகளை முன்னெடுக்கக் கூடிய வசதிகளைக் கொண்டதாக இந்தப் பள்ளி வாசல் மாற்றப்பட வேண் டும் அதற்கு இங்குள்ள முஸ்லிம் மக்களும் ஏனையோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பதுதான் அவர்களின் ஆதங்கமாக உள்ளது. ஏனைய மதத்தவர் களும் கூட இந்தப் பள்ளி வாசலில் நேர்த்திக் கடன்களைச் செய்து வருகின்றனர் என்பதும் அதன் சிறப்புக்கும் தேவைக்கும் காரணமாகிறது. ★

# வளப் பற்றாக்குறையிலும் ஆசிரியர்களின் அயராத முயற்சியால் சிறந்த கல்வி வழங்கும் காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

காரைநகரில் கடற்கரைப் பகுதியில் ஊரிக் கிராமத்தில் அமைந்துள்ள ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையாக விளங்குகின்றது.

ஆசிரியர்களின் விடாமுயற்சியால் அநேகமான மாணவர்கள் கால்உறை, காலணி, கழுத்துப் பட்டி என்பவற்றுடன் சுத்தமாக பாடசாலைக்கு வருகை தருவதுடன் அவர்களின் வரவும் 90 வீதத்துக்கு மேல் காணப்படுகின்றது. அத்துடன் மேலதிக நேர வகுப்புக்கள், காலை வகுப்புக்கள் என்பவற்றை ஆசிரியர்கள் எடுத்து வருகின்றனர்.

பாடசாலையில் அடிப்படை வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றன. மாணவர் தொகைக்கேற்ப கட்டட வசதிகள் இல்லாமையால் கற்பித்தல் செயற்பாடுகளில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கட்டட வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கையை அடுத்து இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் 3 மில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்றுக்கான வகுப்பறைக் கட்டடம் மிகவும் பழைய கட்டடமாகக் காணப்படுவதுடன் எந்த நேரத்திலும் உடைந்து விழக்கூடிய நிலையிலும் உள்ளது. இப்பாடசாலைக்கென பிரார்த்தனை மண்டபம் ஒன்று இல்லாமையால் பிரார்த்தனை மண்டபத்துக்காக வகுப்பறையையே உரியவாறு சீர்செய்வதும் மீண்டும் வகுப்பறையாக்குவதும் இடம்பெறுவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பாடசாலையில் சுற்று வேலிகள் சீரான முறையில் அமைக்கப்படாமையினால் கால்நடைகள் இரவு வேளைகளில் பாடசாலையில் வந்து தங்குகின்றன. தினமும் அவற்றின் எச்சங்களை அகற்றித் துப்புரவு செய்வதில் ஆசிரியர்களும் மாணவர் களும் சிராமங்களை எதிர்நோக்குகின்றனர். விளையாட்டு மைதானம் இருந்தும் அது விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு ஏற்ற உரிய முறையில் செப்பனிடப்பட்டு புனரமைக்கப்படாமையினால் விளையாட்டுச் செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு கனடாவில் உள்ள காரை. கலாசார மன்றம் காரைநகர் அபிவிருத் திச் சபை ஊடாக சுற்றுவேலி அமைப்பதற்கு ஒரு தொகை நிதியை வழங்கியுள்ளது. அத்துடன் பாடசாலைக் கான மின்சார வசதியினையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.



டர்னிகன்

நூலகத்துக்கான கட்டட வசதியோ நூல்நிலையமோ அமைக்கப்படாததால் மாணவர்கள் வாசிப்புத்திறனை விருத்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் அதிபர், ஆசிரியர்களுக்கான அலுவலகங்களும்உரிய வசதிகளுடன் அமைக்கப்படாது உள்ளன.

காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கணினிக் கல்வியைப் போதிக்கும் ஒரே பாடசாலையாக இப்பாடசாலை விளங்குகின்றது. EEDP நிறுவனத்தால் நான்கு கணினிகள் வழங்கப்பட்டு தரம் 1-5 வரையான மாணவர்களுக்கு கணினிக் கல்வியும் போதிக்கப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரனால் மேலும் ஒரு கணினி இந்தப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைகொண்டுள்ள காரைநகர் அபி விருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரத்தின் முயற்சியால் காரைநகர் அபிவிருத்திச் சபை ஊடாகக் கடந்த வாரம் போட்டோப் பிரதி இயந்திரம், ஒலிபெருக் கிச் சாதனம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் வசதி இன்மையாலும் இந்தப் பாடசாலை மாணவர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தரம் 5 கல்வியை நிறைவுசெய்த மாணவர்கள் தரம் 6 கல்வியைத் தொடர்வதற்குப் பல மைல்கள் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கே கால்நடையாகச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் தரம் 5 கல்வியுடன் சில மாணவர்கள் பாடசா லைக் கல்வியை இடைநிறுத்துவதாகவும் கூறுப்படுகின்றது. எனவே இப்பாடசாலையில் ஏனைய வகுப்பு களையும் ஆரம்பிக்க வேண்டிய தேவையுள்ளது. இடப்பெயர்வுக்கு முன்னர் இந்த வீதியூடாக இடம் பெற்ற பஸ் சேவைகள் தற்போது இடம் பெறாமையால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இவ்வாறு கட்டட வசதி, குடிதண்ணீர், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமை, மாணவர்களின் வறுமைநிலை, போசாக்கின்மை என்பன காணப்படுகின்றன. எனினும் வெளியூர்களில் இருந்து வருகைதரும் அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியாலும் அர்ப்பணிப்புடனான சேவையாலும் இந்த மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் உயர்வடைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. ஆகவே மேலதிக வசதிகளை இந்தப் பாடசாலைக்கு ஏற்படுத்திக் கொடுக்க அனைத்துத் தரப்பினரும் முன்னின்று செயற்படுவார்களாயின் தீவகக் கல்வி வலயத்திலே ஆரம்பப் பாடசாலைகளில் கூடிய தொகை மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வித் தரம் மேலும் உயர்வதுடன் இந்தக் கிராமமும் உயர் வளமடையும் என்பதில் ஐயமில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரி மாறிய அரச அதிகாரிகள் தபால் மூலம் வாக்களிக்க முடியாது

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

அடுத்த மாதம் இடம் பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களில், 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் வாக்காளர் பெயர்ப் பட்டியல்களில் ஒரே முகவரியைக் குறிப்பிட்டிராத வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்க முடியாது எனத் தேர்தல் செயலகம் தெரிவித் துள்ளது.

நபரொருவர் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்துக் கொள்ளும்போது 2009 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் குறிப்பிட்டிருந்த முகவரியை 2010 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் மாற்றியிருந்தால் அது, தபால்மூல வாக்களிப்பு இழக்கப்படுவதற்கான காரணமாக அமையுமெனவும் தேர்தல் செயலகம் தெரிவிக்கிறது.

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் 2010 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப்பட்டியலே கவனத்தில் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, 2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரியில் இருந்து எவராவது மாறி இருந்தால் அவர்களால் தபால் மூலம் வாக்களிக்க முடியாது போய்விடும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. (எ-22)

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் தேக்கம்

கொழும்பு, ஜூன் 22

பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகப் பொது மக்களின் நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் தீர்க்க முடியாதுள்ளன. இதன் காரணமாகப் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் தேங்கிக்கிடக்கின்றன.

-இவ்வாறு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறிய தாவது:

பொலிஸ் ஆணைக்குழுவிடம் இருந்த பல அதிகாரங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் மாற்றப்பட்டுள்ளன. இதனால் பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் திகதியுடன் பொலிஸ் ஆணைக்குழுவின் ஆணையாளர்களின் பதவி நிறைவடைந்ததோடு, ஏற்கனவே செயற்பட்டுவந்த தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் செயலிழந்து விட்டது.

18ஆவது திருத்தத்தின்படி பொலிஸ் கான்ஸ்டபிளிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் வரையிலான அனைத்துப் பொலிஸ் ஊழியர்களினதும் நிர்வாகமும் பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியன மட்டுமே பொலிஸ் ஆணைக்குழுவின் பொறுப்பில் உள்ளன- என்றார்.

# விரிவுரையாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதிகளில் முன்னுரிமை

கொழும்பு, ஜூன் 22

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்குக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, பொதுவான சுற்றறிக்கைகளின் விதிமுறைகளைக் கடந்து பல் கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகள் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவார்களென கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில்கூட, பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கி பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித் துள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் ஆலோசனை ஒன்றுக்கு அமைய அமைச்சரவையின் இணக்கத்துடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-22)

# சோமாலிய கடற்கொள்ளையரால் இலங்கைக்கு ஆபத்து ஏதுமில்லை

கொழும்பு, ஜூன் 22

இலங்கைக்கு உட்பட்ட கடற்பிராந்தியத்தில் பாதுகாப்புப் பலமாகவே உள்ளது. எனவே எமக்கு ஒருபோதும் கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் இருக்காது என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைக் கடல் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சோமாலிய கடற்கொள்ளையர்களின் நடமாட்டம் இல்லை. நாம் எமது கடல் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம். பாதுகாப்பு பலமாகவே உள்ளது. எனவே, ஒருபோதும் சோமாலியக் கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் எமக்கு இருக்காது என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை தொடர்பாக நான் கருத்துக்கூற விரும்பவில்லை. அது எமது செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டது. எனினும், இலங்கைக் கடல் எல்லையில் வைத்து அந்தச் சேவைக்கு பாதுகாப்பு வழங்கவேண்டியது எமது பொறுப்பாகும். இலங்கைக்கு உட்பட்டக் கடற்பிராந்தியத்தில் பாதுகாப்புப் பலமாகவே உள்ளது என்பதையே எம்மால் கூறமுடியும் - என்றார். (சி)


# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்: 06.04.1930

ஆண்டவன் அடியில்: 22.06.2000



அன்னை மடியில்: 23.05.1933

ஆண்டவன் அடியில்: 07.05.2006

"இறைவா என்னைக் காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்" (திபா. 16:1)

அமரர் வைத்திய கலாநிதி
க.ஜோர்ஜ் (D.A.M., RIMP, J.P)

பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகை அடைந்து - புகழ்
மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்
நீங்காத நினைவுகளால் நீர் மல்கும் விழிகளுடன்
தாங்காத மக்கள் உற்றார் உலகோர்
ஏங்காத நாளில்லை ஏன் பறந்தீர் எம்மைவிட்டு?

திருமதி
ஜோர்ஜ் ஞானமலர்

நீங்காத நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்
ஆண்டாண்டு போனாலும் ஆர் மறப்பார் அரிய தொண்டை
மாண்டாருள் மாணிக்கமே மகிமையெல்லாம் சேர்த்து வைத்து
தூண்டாத மணி விளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவரே
இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்
குறையின்றி வாழ்வதற்காகக் கோயில் எல்லாம் கும்பிடுவோம்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கபிரியேல் ஜோர்ஜ் வைத்தியசாலை
Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(46,192)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக் கண்காட்சியில் இருந்து இலங்கை நிறுவனங்களை விரட்டுங்கள்

சென்னை,ஜூன்.22

சென்னை வர்த்தக மையத்தில் நாளை தொடக்கம் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இல்ல உள்வடிவமைப்பு மற்றும் அலங்காரப் பொருள்கள் கண்காட்சியில் இலங்கையைச்சேர்ந்த எந்தவொரு நிறுவனங்களும் பங்கேற்க அனுமதி வழங்காது விரட்டவேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

இல்ல உள் வடிவமைப்பு மற்றும் அலங்காரப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனங்கள் பங்கேற்கும் கண்காட்சி சென்னை வர்த்தக மையத்தில் நாளை தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்த கண்காட்சியை ஜாக் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் எனும் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

21ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த பன்னாட்டு கண்காட்சியில் கிழக்காசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன என்று கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் விநியோகித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு சம உரிமை அளிக்க மறுத்து வரும் அந்தநாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக பொருளாதாரத் தடையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம்



நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், தமிழ் மண்ணில் நடைபெறும் கண்காட்சியில் இலங்கை நிறுவனங்களின் பங்கேற்பை அனுமதிப்பது என்பது தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் அவமதிப்பதாகும்.

எனவே, சென்னை கண்

### சீமான் அறிக்கை

காட்சி ஏற்பாட்டாளர்கள் இலங்கையில் இருந்து வரும் எந்த நிறுவனத்தையும் சென்னைக் கண்காட்சியில் பங்கு பெற அனுமதிக்கக் கூடாது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட எந்த பொருள்களும் இந்தக் கண்காட்சியில் இடம்பெறச் செய்யவும் அனுமதிக்கக் கூடாது என்று நாம் தமிழர் கட்சி கேட்டுக்கொள்கிறது.

எங்களின் வேண்டுகோளையும் மீறி, இந்தக்கண்காட்சியில் இலங்கை நிறுவனங்களோ அல்லது பொருள்களோ பங்கு பெற அனுமதிக்கப்பட்டால் அதனை எதிர்த்து நாம் தமிழர் கட்சி போராடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ)

# திரைப்படமாகிறது பாபாவின் வாழ்க்கை

புட்டர்பத்தி,ஜூன்22


மகா சமாதியடைந்த சத்திய சாயி பாபாவின் வாழ்க்கை வரலாறை திரைப்படமாகத் தயாரிக்கப் போவதாக சினிமா இயக்குநர் கேடி ராமகிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும், முன்னாள் காங்கிரஸ் கட்சி உறுப்பினருமான ஹரிராம ஜோகையா மற்றும் ஜோனவிதுலா ராமலிங் கேஸ்வரா ராவ் ஆகியோர் புட்டபர்த்தி நகருக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி திரைப்படம் எடுப்பது குறித்து கேடி ராமகிருஷ்ணா கூறியதாவது:-

சத்தியசாயி பாபா வின் வாழ்க்கை வரலாறு தொடர் பான திரைப்படம் சர்வதேச தரத்தில் தயாரிக்கப்படவுள்ளது. மேலும் இந்திய மொழிகளுக்குள் பெரும்பான்மை மொழிகளில் தயாரித்து வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். (வ)

# புலிகள் மீதான போர்க்குற்றச்சாட்டை ஐ.நா. சபை திரும்பப்பெற வேண்டும்



### திருமாவளவன்

சென்னை,ஜூன்22

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது ஐக்கிய நாடுகள் சபை போர்க்குற்றம் சாட்டி அறிக்கை வெளியிட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபை திரும்பப் பெற வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கம் மக்களுக்காக, மக்களின் விடுதலைக்காகப் போராடிய இயக்கமாகும் என்று தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இனக்குற்றவாளியாக ஐக்கிய நாடுகள் சபை அறிவிக்க வேண்டும் ஐக்கிய நாடுகள் சபை குழு வெளியிட்ட அறிக்கையில இலங்கை ஜனாதிபதியை மட்டும் போர்க்குற்றவாளியாகக் கூறவில்லை. இருதரப்பையும் குற்றம் சாட்டித்தான் அவர்கள் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள சிலர் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

அவரை போர்க்குற்றவாளியாக அறிவிக்கக் கூடாது. லட்சக் கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷவை இனக் குற்றவாளியாக அறிவித்து, சர்வதேச நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்தி அவருக்குரிய தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக் கையை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டும் என்றார். (வ)



சிவசேனா கட்சி ஆரம்பிக்கப்பட்டதன் 45ஆவது ஆண்டையொட்டி, மும்பையில் நடந்த நிகழ்ச்சியில் அந்தக்கட்சியின் நிர்வாகத்தலைவர் உத்தவ் தாக்கரேயைச் சந்தித்து வாழ்த்துகிறார் இந்திய குடியரசுக் கட்சியின் தலைவர் ராமதாஸ் அத்வாலே.

# கனிமொழியின் பிணை நிராகரிப்பு

டில்லி, ஜூன்22

தி.மு.க. மாநிலங்கள் அவை உறுப்பினர் கனிமொழியும், கலைஞர் ரி.வி நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் தாக்கல் செய்த பிணை மனுவை நேற்றுமுன்தினம் நிராகரிப்புச் செய்தது உச்ச நீதிமன்றம். சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்ட பின்னர் அவர்கள் இருவரும் பிணை கோரி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தை முறையிடலாம் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# இருவாரங்களில் ரஜினி சென்னை திரும்புவார்

### தனுஷ் தெரிவிப்பு

சென்னை,ஜூன் 22

இன்னும் 15 நாள்களில் நடிகர் ரஜனிகாந்த் சிங்கப்பூரிலிருந்து சென்னையை வந்தடைவார் என்று அவரது மருமகனும், நடிகருமான தனுஷ் தெரிவித்துள்ளார்.

உடல்நலக் குறைவு காரணமாக கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி சென்னை மயிலாப்பூரில் உள்ள இசபெல்லா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ரஜினிகாந்த், பின்னர் சிறுநீரகப் பிரச்சினைக்காக போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேல் சிகிக்சைக்காக கடந்த மே மாதம் சிங்கப்பூர் சென்ற ரஜினிகாந்த் அங்கு உள்ள பிரபல தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் திருப்பதி திருமலையில் சாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தனுஷ் -

வீட்டில் நடை பயிற்சி மேற்கொண்டு வருகிறார். ரி.வியில் சினிமாப் படங்களை விரும்பிப் பார்க்கிறார். ரஜினிகாந்த் மருத்துவமனையில் இருந்து இருப்பிடம் திரும்பிய பின்னர் ஆரோக்கியத்துடன் உள்ளார். இன்னும் 15 நாள்களில் அவர் சென்னை திரும்புவார் - என்று தெரிவித்தார். (வ)

# கனிமொழியைச் சந்திக்க கருணாநிதி டில்லி பயணமானார்

சென்னை,ஜூன்.22

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் தனது மகள் கனிமொழியின் பிணை மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து அவரைச் சந்திப்பதற்காக தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று டில்லிக்குச் சென்றுள்ளார்.

தி.மு.க. மூத்த தலைவர்கள் துரைமுருகன், பொன்முடி உள்ளிட்டோருடன் அவர் தனியார் விமானத்தில் நேற்றுக்காலை டில்லிக்குப் பயணமானார். (வ)

# நடிகர் விஜயின் பிறந்த நாளில் 500 குழந்தைகளுக்கு தங்கமோதிரம்

சென்னை,ஜூன்22

நடிகர் விஜயின் பிறந்த நாளான இன்று ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் சென்னை, எழும்பூரில் உள்ள தாய்சேய் மருத்துவமனையில் இன்று பிறக்கும் சகல குழந்தைகளுக்கும் விஜய் தங்க மோதிரம் அணிவிக்கவுள்ளார்.

பிறந்த நாளையொட்டி விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதேவேளை மேற்படி வைத்தியசாலையில் தான் விஜய் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் தமிழகம் முழுவதும் இன்று பிறக்கும் குழந்தைகளில் 500 பேருக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படவுள்ளது.

கோடம்பாக்கம், அம்பேத் கர் சிலைக்கு அருகில் அமைந்துள்ள தாய்-சேய் அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு மோதிரம் அணிவித்து பரிசு பொருள்கள், ஊட்டச்சத்து உணவு என்பவற்றை விஜய் வழங்கவுள்ளார்.

சாலி கிராமத்தில் உள்ள பாலலோக் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பாடசாலையில் நடைபெறவுள்ள இலவச கண் பரிசோதனை சிகிச்சை முகாமை விஜய் ஆரம்பித்து வைக்கவுள்ளார். அத்துடன் சின்மயா நகரில் உள்ள முதியோர் இல்லத்தில் மதிய உணவும் வழங்கவுள்ளார்.

மேலும் ரசிகர்கள் அனைவரும் தனது பிறந்த நாளையொட்டி ரத்த தானம், கண் தானம் செய்யுமாறு அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

# இலங்கை தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணவேண்டும்

### கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சென்னை, ஜூன்22

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணக் கோரி ஜூலை 8ஆம் திகதியை அகில இந்திய அளவில் இலங்கைத் தமிழர் கருத்தொற்றுமை நாளாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடிக்க உள்ளது என்று அதன் தேசியச் செயலாளரான டி.ராஜா தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளரான டி.ராஜா டில்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை நேற்று முன் தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்த சந்திப்புக் குறித்து செய்தியாளர் களிடம் கருத்துக் கூறிய அவர்:

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கும்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குழு பரதமர் மன்மோகன் சிங்கை விரைவில் சந்தித்து வலியுறுத்தும். இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராகப் போர்க் குற்றம் புரிந்துள்ளது என்பதை ஐக்கிய நாடுகள் சபை அமைத்த குழு அளித்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உண்டு. தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் இந்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க இலங்கை ஜனாதிபதியை இந்திய அரசு வலியுறுத்தவேண்டும். என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பஸ் கட்டண அதிகரிப்பு தனியார் உரிமையாளர்கள் எதிர்ப்பு

கொழும்பு,ஜூன்22

புதிய பஸ் கட்டண அதிகரிப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விரைவில் தொழிற்சங்க நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

ஏழு வீத பஸ் கட்டண உயர்வு வழங்கப்படவுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் எனினும் இதுவரை தமது சங்கத்திற்கு இந்த விடயம் தொடர்பில் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

முன்னைய சந்தர்ப்பங்களில் போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் மற்றும் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்துரையாடியதன் பின்னரே பஸ் கட்டண அதிகரிப்பு உறுதிப்படுத்தப் படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தத் திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று முன்தினம் தீர்மானித்ததாக அதன் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதிய பஸ் கட்டணத் திருத்தம் பஸ் உரிமையாளர்களையும், பயணிகளையும் பாதுகாத்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அன்ஜன் பிரியன்ஜித் தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்த தமிழக மீனவர் 23 பேர் கைது

கொழும்பு, ஜூன் 22

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 23 தமிழ் நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளதாக இந்திய மீன்பிடித்துறை உதவிப் பணிப்பாளர் மார்கண்டேயன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மண்டபம் மற்றும் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 23 பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனினும் மத்திய கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை நேற்றிரவு 11 மணியளவில் இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்ததோடு அவர்களது 5 மீன்பிடிப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனினும் தமிழக மீனவர்கள் தப்பிச் செல்ல முற்பட்டபோதும் இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இந்திய மீனவர்களிடம் பறிமுதல் செய் யப்பட்ட 5 மீன்பிடிப் படகுகளும் மன்னார் கடற்படை முகாமில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# இளம் யுவதியைக் கடத்த முயற்சி கல்முனையில் 6 யாழ்.வாசிகள் கைது

## காதல் விவகாரம் காரணமாம்

கொழும்பு,ஜூன்22

கல்முனைப் பிரதேசத்தில் அரச நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் யுவதியொருவரை கடத்த முற்பட்ட 6 பேரை பிரதேச மக்கள் மடக்கிப்பிடித்து கல்முனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வழமைபோல அலுவலகத்துக்கு முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த யுவதியை வானில் வந்த ஆறுபேர் மறித்துக் கடத்திச் செல்ல முற்பட்ட போது முச்சக்கரவண்டி சாரதிக்கும் குறித்த நபர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதன்போது முச்சக்கர வண்டிச் சாரதி காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குறித்த ஆறுபேரையும் சுற்றிவளைத்த பிரதேச மக்கள் அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணையை மேற்கொண்ட போது காதல் விவகாரம் காரணமாக குறித்த யுவதியை கடத்திச் செல்ல முற்பட்டதாக அவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (ற)

# எந்தப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க இலங்கைப் போக்குவரத்துச் சபை தயார்

## போக்குவரத்து அமைச்சர் தகவல்

கொழும்பு,ஜூன்22

பஸ் போக்குவரத்துத் தொடர்பாக எந்தச் சந்தர்ப்பத்திற்கும் முகம் கொடுப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தயாராகவுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் குமார வெல்கம இதனைத் தெரிவித்துள்ளார்.

போராட்டம் என்ற வார்த்தை இலங்கைக்குப் புதியதொன்றல்ல எனவும் தற்போது அனைவரும் போராட்டங்களில் ஈடுபடுவதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

தற்போது இலங்கைப் போக்குவரத்து சபை சிறந்த நிலையில் காணப்படுவதாகவும் இந்த வருட இறுதியில் அது மேலும் வலுப்பெறும் என தான் எண்ணுவதாகவும் குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறான போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அனைத்து பஸ்களும் சேவையில் ஈடுபடுமெனவும் போக்குவரத்து அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற)

# மொறட்டுவ பல்கலை மாணவர் மோதல்

கொழும்பு,ஜூன்22

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இரு மாணவக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்த மோதலில் மாணவரொருவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவர் சிகிச்சைகளுக்காக லுனாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# வத்தளை தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பம்

வத்தளை கெரவலப்பிட்டிய பகுதியில் இறப்பர் மற்றும் தேயிலை களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்துத் தொடர்பாக விசாரணைகள் நடத்துவதற்கு அரச இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் ஏற்பட்ட இந்தத் திடீர் தீ விபத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக சுமார் 10 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

திடீர் தீ விபத்து ஏற்பட்ட இடத்தில் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தீயணைப்பு சேவைப் பகுதியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

மேலும் இந்த விசாரணை நடவடிக்கைகளுக்கு என மின் பொறியியல் பிரிவினரும், பொலிஸ் விஞ்ஞான ஆய்வுப் பிரிவினரும் வரவழைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எமது அன்புச் செல்வத்தின் 29ஆவது பிறந்தநாள் நினைவலைகள்...



### ஜஸ்ரின் றேகன் றெனோல்டஸ் (றீகன்)

| மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 22.06.1982 | 14.11.2010 |





மொட்டொன்று மலர்வதற்கு முன்
சட்டென்று விழுந்தது மண்ணில்
நீராட நீண்ட தூரம் சென்ற நீ
மீளாத்துயிலுடன் தோழர் தோளிலே வந்ததேனோ?
சிரிப்பிலெமை ஆழ்த்தி வைத்து
உடற்பொழிவினால் எமை மகிழ வைத்தவனே
சாந்தசொரூபமான நீ இன்று சமாதியாய் போனாயையோ!
எம் கண்ணீரைக் காண்பதில் உனக்கென்னடா இன்பம்
பெற்றதாய் பேதலிக்க, உற்ற தந்தை உறுதியிழக்க
உடன் பிறப்புக்கள், மைத்துனர்கள், அண்ணிமார் துடிதுடிக்க
உறவினரும், நண்பர்களும் கதிகலங்க
தாங்க முடியாத துன்பத்தைத் தந்து
நீ எங்கு சென்றாய்...
உன் பிறந்த நாளினிலே.. உன் நினைவுகளுடன்...

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(5079)

குடும்பத்தினர்.

இலங்கையில் முதலாவது மற்றும் ஒரே ஒரு தலை முடியியல் நிபுணத்துவ சிகிச்சை நிலையம் இதுவே

VCare இன்Dr.Hair ல்

தலைமுடி உதிர்தல்,ஆண்,பெண் வழுக்கை, பொடுகு,இளநரை,புளுவெட்டு,Psoriasis போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கு இலங்கை இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 23,24 ஆகிய திகதிகளில் யாழ் கிளையில் இலங்கை,இந்திய பிரபல தலைமுடியியல் நிபுணர்களின் நேரடி ஆலோசனை நடைபெறவுள்ளது.




முற்பதிவுகளுக்கு:0776291099

DR.HAIR V Care (Pvt) Ltd

21,Frazerr Avenue,Dehiwala. Phone:011 4874854,2735715
162/5,Jaffna Road, Vavuniya.Tel: 024 4924940
26,Brown Road, Jaffna.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதிக்குத் திரும்புங்கள்; சிரிய அதிபர் அழைப்பு

டமாஸ்கஸ், ஜூன் 22

சிரியாவில் நடந்து வரும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் சிறிய குழுக்களை கொண்ட நாசவேலைக்காரர்களின் செயல். எனவே பொதுமக்கள் அமைதிக்குத் திரும்ப வேண்டும் என, அந்நாட்டு அதிபர் பஷர் அல் அசாத் தெரிவித்துள்ளார்.


சிரிய அரசுக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் மூன்றாவது முறையாக நாட்டு மக்களுக்கு அதிபர் பஷர் அல் அசாத், தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:

சிரிய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய அரசு தயாராக இருக்கிறது. ஆனால், சிறிய குழுக்களை கொண்ட நாசவேலைக்காரர்கள் இதை நிறைவேற்ற விடாமல் சதி வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். தேசிய அளவிலான பேச்சு சிரியா நாட்டின் எதிர்காலத்தை சீரமைக்கும். வன்முறையைத் தொடர்ந்து, துருக்கி நாட்டில் அடைக்கலமானவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்ப வேண்டும். வன்முறையில் பலியானவர்களுக்காக வருந்துகிறேன். இவர்களது பலி நாட்டுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாசவேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். ஸ்திரத்தன்மை இல்லாமல் வளர்ச்சி இல்லை. வன்முறையால் சீர்திருத்தம் ஏற்படாது. சீர்திருத்தத் திட்டங்களைக் கொண்டு வர தேசிய அளவில் ஆணையம் அமைக்கப்படும்.

சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள மற்றொரு குழு ஏற்படுத்தப்படும். ஊழலை ஒழிப்பதில் மூத்த குடிமக்கள் தங்களை



ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். சமீபத்தில் குற்றங்களில் கைது செய்யப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட வேண்டும் என்று நீதித்துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

குறிப்பாக, ஜிசிர் அல் சுகுர் பகுதி மக்கள் நாடு திரும்ப வேண்டும். அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அமைதிப் பேச்சுக்கு மக்கள் முன்வரவேண்டும். இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

# வாக்களித்தபடி ஜூலையில். ஜப்பான் பிரதமர் பதவி துறப்பு

டோக்கியோ , ஜூன் 22

ஜப்பானில் சுனாமிக்கு பின் ஏற்பட்ட, நிதி நெருக்கடியை சமாளிக்க அரசின் கூடுதல் செலவினங்கள் கொண்ட பட்ஜெட்டுக்கு எதிர்க்கட்சிகள் ஒப்புதல் அளித்தன. இதற்கு கைமாறாகப் பிரதமர் பதவியை துறப்பதாக ஒப்புக்கொண்ட பிரதமர் நவோடா கான், எதிர்வரும் ஜூலையில் பதவி விலகுவார்.

ஜப்பானில் சுனாமிக்கு பின், அந்த நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் பாதிக்கப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைக்க பட்ஜெட்டில் கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டிய கட்டாயத்துக்கு, ஆளும் ஜப்பான் ஜனநாயகக் கட்சி தள்ளப்பட்டது. இந்தநிலையில், பிரதமர் நவோடா கானுக்கு எதிராக நீதிமன்றில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தன.

நாட்டை சீரமைக்க வழிவிடும்படியும் இதன்பின், நாட்டை இளைஞர்களின் கையில் ஒப்படைத்து விட்டு, பதவியை ராஜினாமா செய்யப் போவதாகவும் பிரதமர் அறிவித்தார். இதனால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராகவும் கானுக்கு ஆதரவாகவும் எதிர்க்கட்சிகள் வாக்களித்தன. மேலும், நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட கூடுதல் பட்ஜெட்டை நிறைவேற்றவும் ஆதரவு தெரிவித்தனர். இந்நிலையில், ஜப்பான் பிரதமர் நவோடா கான், அடுத்த மாதம் தன் பதவியை ராஜினாமா செய்வார் என, அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## நல்ல கண்காட்சி...



சர்வதேச விமானக் கண்காட்சி பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடந்தது. இதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் நாட்டு நவீன ரக போர் விமானத்தின் மாதிரியை அந்த நாட்டு அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி பார்வையிட்டார்.

# இந்தியாவுடனான பிரச்சினைக்கு போரால் தீர்வு காண முடியாது

## பாகிஸ்தான் பிரதமர் கிலானி

இஸ்லாமாபாத், ஜூன் 22

இந்தியாவுடனான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலமே தீர்வு காண வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். எந்தவொரு பிரச்சினைக்கும் போரால் தீர்வு காண முடியாது, எனப் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி கூறினார்.

பாகிஸ்தானின், பஞ்சாப் மாகாணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி மேலும் பேசியதாவது:

இந்தியா உள்ளிட்ட அனைத்து அண்டை நாடுகளுடனும் நட்புடன் இருக்க வேண்டும் என்றே பாகிஸ்தான் விரும்புகிறது. இந்தியாவுடனான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இதில், காஷ்மீர் பிரச்சினையும் அடக்கம். பிரதமர் மன்மோகன் சிங்கை, பல முறை சந்தித்துள்ளேன். அனைத்து பிரச்சினைகளையும், பேச்சு மூலம் தீர்க்கலாம் என அவரிடம் வலியுறுத்தியுள்ளேன். காஷ்மீர் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண வேண்டும்.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், இன்னும் சில நாள்களில் பாகிஸ்தான் வரவுள்ளார். பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பசீருடன், முக்கிய விவகாரங்கள் குறித்து அவர் பேச்சு நடத்துவார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப தீர்வு காண வேண்டும் என சர்வதேச சமுதாயத்திடம், பாகிஸ்தான் வலியுறுத்தும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் விரைவில் சட்டசபைத் தேர்தல் நடக்கவுள்ளது. இந்தத் தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடக்கும். இதன்மூலம், சர்வதேச சமுதாயத்தின் நன் மதிப்பு, பாகிஸ்தானுக்கு கிடைக்கும். இவ்வாறு கிலானி கூறினார்.

# அப்பாவி மக்களை கொன்றதற்கு நேட்டோ வருத்தம் தெரிவிப்பு

திரிபோலி, ஜூன் 22

திரிபோலியில் நிகழ்ந்த தாக்குதலில், குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் ஒன்பது பேர் பலியானதற்கு பொறுப்பேற்று, நேட்டோப் படை வருத்தம் தெரிவித்துள்ளது.

லிபியத் தலைநகர் திரிபோலியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நேட்டோப் படையினர் தீவிரத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில், இரண்டு குழந்தைகள் உட்பட ஒன்பது பேர் பலியாகினர். இதற்குப் பொறுப்பு ஏற்று, நேட்டோ வருத்தம் தெரிவித்து இருப்பதாக லிபியத் தூதுக் குழு அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சார்லஸ் பவ் சார்டு தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில்:

சம்பவம் குறித்து நாங்கள் இன்னும் இறுதி முடிவுக்கு வரவில்லை. ஆயுதங்களைத் தவறாகக் கையாண்டதால் இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்றார்.

நேட்டோ அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், லிபியாவில் நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலும், மிகவும் கவனத்துடன் கையாளப்படுகிறது.

பரிகா பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில், எதிரிகளின் ரோந்து வாகனங்கள் தான், பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. எதிர்பாராமல் நடத்தப்பட்ட தாக்குதலில் பலியானவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களுக்காக வருத்தம் தெரிவிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் நேட்டோப் படைகளின் ஒட்டு மொத்த ஆதரவு கிடைக்காததால், கிளர்ச்சியாளர்களால், நாட்டின் கிழக்குப் பகுதியில் முன்னேறிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு நேட்டோ அமைப்பு நாடுகள் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடே காரணம்.

# ஆப்கானில் குண்டு வீச்சு 25 தீவிரவாதிகள் பலி

ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வாலிடாட் பாதுகாப்புப் படைச் சோதனைச் சாவடி மீது 50 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினார்கள்.

இதை தொடர்ந்து பாகிஸ்தான் ராணுவம், எல்லை பாதுகாப்புப் படை மற்றும் விமான படை ஆகிய 3 பிரிவினரும் சேர்ந்து பதில் தாக்குதல் நடத்தினார்கள்.

பாகிஸ்தான் விமானப் படையின் போர் விமானங்கள் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடங்களின் மீது சரமாரியாகக் குண்டு வீச்சு நடத்தின. இதில் தீவிரவாதிகள் 25 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.

தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கி சண்டையில் 4 ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். 8 பேர் காயம் அடைந்தனர்.

பின்லேடன் கொல்லப்பட்ட பின் தீவிரவாதிகளை முற்றிலும் அழிக்கும் படி பாகிஸ்தானை அமெரிக்கா வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# துனிஷிய முன்னாள் அதிபருக்கு 35 ஆண்டு சிறைத் தண்டனை

## வருமானத்தை மீறி சொத்து சேர்த்ததுக்காக

துனீஸ், ஜூன் 22

வருமானத்துக்கு அதிகமாக அதிகாரத்தைப் பயன்படுத்தி அசையும் மற்றும் அசையா சொத்துக்களை சேர்த்ததாக எழுந்த குற்றச்சாட்டின் பேரில் துனீஷிய நாட்டின் முன்னாள் அதிபருக்கும் அவரது மனைவிக்கும் துனீஷிய நீதிமன்றம் 35 ஆண்டுகள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

துனீஸியாவில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி காரணமாக அந்த நாட்டு அதிபராக 23 ஆண்டுகள் பதவியில் இருந்த ஜினி-அல்-அபதின் பென்அலி கடந்த ஜனவரி மாதம் பதவி விலகியதுடன் நாட்டை விட்டு வெளியேறி சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்துள்ளர்.

எனினும் அவர் மீதுஅதிகாரத் துஷ்பிரயோகம் மூலம் சொத்து சேர்த்தது உள்ளிட்ட பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள், தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் துனீஸ் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

இதில் அதி பர் பென் அலி மற்றும் அவரது மனைவி ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து இவருக்கும் இவரது மனைவிக்கும் 35 ஆண்டுகள் சிறை தண்டனையும் 90 மில்லியன் துனீசியன் தினார் அபராதமும் விதிக்கப்பட்டது.

எதிர்வரும் 30ஆம் திகதி இந்தத் தண்டனை விவரம் அறிவிக்கப்படும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்டத்திலான ஹொக்கிப் போட்டியில் யூனியன், உடுவில் சம்பியன்களாகின

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான ஹொக்கிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியும் சம்பியன்களாகின.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆண்களுக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 2:0 என்ற கோல்களைப் பெற்று சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து குளமங்கால் ஆர்.சி. அணி மோதிக் கொண்டது.

உடுவில் மகளிர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் குளமங்கால் ஆர்.சி. அணியை வெற்றி கொண்டது. (ஐ-23)

# 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் கஜேந்திரன் புதிய சாதனை



யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற 2011 ஆம் ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் புதிய சாதனை நிலை நாட்டப்பட்டது.

சாவகச்சேரியைச் சேர்ந்த கஜேந்திரன் இந்தச் சாதனையைப் படைத்தார்.

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 800 மீற்றர் தூரத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த என்.நேசறூபன் 2.03.7 செக்கனில் ஓடியமையே இதுவரை சாதனையாக இருந்தது.

இந்தச் சாதனையை 2 வருடங்களின் பின் இம்முறை சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கஜேந்திரன் 02.03.3 செக்கனில் ஓடி முடித்து முறியடித்துள்ளார். (ஐ-23)

# பெண்களுக்கான மாகாண மென்பந்தாட்டம்; இரண்டாவது வருடமாக விக்ரோறியா சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 22

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இரண்டாவது தடவையாகவும் வட மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

ரஜிதா ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களைப் பெற்றார்.

வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த அனிதா 2 ஓவர்கள் பந்து வீசி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனாகி 25 ஓட்டங்களைப் பெற்றார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த பிரணவி, பானுப்பிரியா, ரஜிதா தலா 2 ஓவர்கள் பந்து வீசி தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள். (ஐ-86)

# யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் கூடைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் சம்பியனானது.

வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட அணியை எதிர்த்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதியது.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி 44:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அணியை வெற்றி கொண்டது. (ஐ-23)



மாவட்ட மட்டப் போட்டி 400 மீற்றர் தடை தாண்டலில் இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவி செல்வி சிவானந்தராசா வற்சாயினி. (ஐ)

# மாகாண சதுரங்கப்போட்டி சம்பியனானது மெதடிஸ்த

வலி.வடக்கு, ஜூன் 22

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வட மாகாண மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான சதுரங்க இறுதிப் போட்டியில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வட மாகாண சம்பிய னாகத் தெரிவுசெய்யப்பட்டது.

வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதிக் கொண்டன.

கடும் போட்டியாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் ஆட்ட நிறைவில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ஐ-86)

# பெண்களுக்கான தடகள போட்டியில் வென்றோர்

வலி.வடக்கு, ஜூன் 22

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான தடகளப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வெளியாகின.

அவற்றின் விவரம் வருமாறு:-

* 1500 மீற்றர் - ஆர்.காவேரி (தெல்லிப்பழை), என்.சுமதி (சண்டிலிப்பாய்), ஆர். துஷ்யந்தி (சங்கானை).
* 100 மீற்றர் - எஸ்.ஜக்ஷனா (தெல்லிப்பழை), எம்.விதுஷா (சாவகச்சேரி), எஸ்.சர்மிலா (சண்டிலிப்பாய்).
* 100 மீற்றர் தடை தாண்டல் - பி.மயூரி (நல்லூர்), கே.கீர்த்திகா (உடுவில்), எஸ்.மேரிபெனிஸ்ரா (யாழ்ப்பாணம்).
* 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - தெல்லிப்பழை பிரதேச செயலகம், சாவகச்சேரிப் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.
* 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், சாவகச்சேரிப் பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

(ஐ-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் லீக் முறையிலான இரண்டாவது சுற்று உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.45மணி - யூனியன் வி.க. எதிர் யாழ். ஐக்கிய வி.க.
* மாலை 5 மணி - குருநகர் பாடும்மீன் வி.க. எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் வி.க. (ஐ-23)

* * *

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் திருநகர் வி.கவும் உருத்திரபுரம் சந்திரோதயா வி.கவும் மோதுகின்றன. (ஐ-23)

# கூட்டுறவு விளையாட்டுப்போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 22

89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி வட மாகாண கூட்டுறவு அமைப்புகளுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. சில முடிவுகள் வருமாறு:

### 800 மீற்றர் ஓட்டம்

ஆண் - சிவராசா சிவதீபன் (கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்), வேலு ஜெயசீலன் (வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம்), இராசதுரை கெங்கநேசன் (கிளிநொச்சி முல்லைத்தீவு கிராமிய வங்கிகளின் சமாசம்)

பெண் - மணிவண்ணன் சுகந்தி (பனங்காமம்பற்று ப.நோ. கூ.சங்கம்), நாகேஸ்வரன் சுமதி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம்), அந்தோனிப்பிள்ளை சுனா (மன்னார் ப.நோ.கூ.சங்கம்)

### 1500 மீற்றர் ஓட்டம்

ஆண் - கிருஸ்ணன் ஜெயந்தன் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம்), வேலு ஜெயசீலன் (வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கம்), இராசதுரை கெங்கநேசன் (கிளிநொச்சி முல்லைத்தீவு கிராமிய வங்கிகளின் சமாசம்)

பெண் - நாகேஸ்வரன் சுமதி (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), சாம்பசிவம் சஜிதா (நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூ. சங்கம்).

### 100x4 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

ஆண் - கொடிகாமம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனங்காமம்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

பெண் - பணங்காமம்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

### 200x4 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

ஆண் - கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனங்காமம்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

பெண் - பனங்காமம்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

### 400x4 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

ஆண் - கொடிகாமம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், மன்னார் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பனங்காமம்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

பெண் - பனங்காமம்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். (ஐ-86)

# யங்பிளஸ் விளையாட்டுக் கழகம் இலகு வெற்றி


யாழ்ப்பாணம், ஜூன் 22

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்ச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யங்பிளஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்பிளஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குறிஞ்சி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

யங்பிளஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விம்பிள்டன் ரெனிஸ் தொடர்

# நடால், வீனஸ்

### முதல் சுற்றில் வெற்றி

விம்பிள்டன் ரெனிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டங்களில், ரபேல் நடால், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் மிக உயரிய விம்பிள்டன் ரெனிஸ் போட்டி லண்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனும், முதல் நிலை வீரருமான ஸ்பெயினின் ரபெல் நடால், அமெரிக்க வீரர் மைக்கல் ரஸ் செல்லை 6-4, 6-2, 6-2 என்ற நேர்செற் கணக்கில் வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இன்னொரு ஆட்டத்தில் அன்டி முர்ரே 4-6, 6-3, 6-0, 6-0 என்ற கணக்கில் டானில் கிமோனோவை வீழ்த்தினார்.

பெண்கள் பிரிவில் நடந்த ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் 6-3, 6-1 என்ற நேர்செற் கணக்கில் அகுல் அமன்முராடோவாவை (உஸ்பெகிஸ்தான்) எளிதில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றார். இதில், வீனஸ் வில்லியம்ஸ் விலை உயர்ந்த வித்தியாசமான உடையை அணிந்து ஆடினார்.

இன்னொரு ஆட்டத்தில் 22ஆம் நிலை வீராங்கனையான சகார் பீர் (இத்தாலி) 7-5, 4-6, 4-6 என்ற செற் கணக்கில் ரஷ்ய வீராங்கனையான செனியா பெர்வாக்கிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார்.



# 246 ஓட்டங்களுக்குள் சுருண்டது இந்தியா

கிங்ஸ்டன், ஜூன் 22

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில், இந்திய அணி, 246 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

மேற்கிந்தியத்தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது.

இதன் முதலாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் கிங்ஸ்டனில் தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணிக்கு, பெரும் சரிவே காணப்பட்டது.

61.2 ஓவர்களை எதிர்கொண்ட இந்திய அணி, 246 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

அந்த அணி சார்பாக முகுந்த் (11) டிராவிட் (40), லக்ஷ்மன் (12) ரெய்னா (82), ஹர்பஜன் சிங் (70) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்கை எட்டவில்லை.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக



பந்துவீச்சில், எட்வர்ட்ஸ் 4 விக்கெட்டுகளையும், ராம்போல், பிசூ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 34 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

சைமன்ஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பரத் (26), சர்வான் (2) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

# 'ஸ்ரீலங்கன் பிரீமியர் லீக்'

## இந்தியக் கிரிக்கெட் சபையுடன் பேச்சு

இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் டி.எஸ்.டி சில்வா, செயலாளர் நிசாந்த ரணதுங்க ஆகியோர் 'ஸ்ரீலங்கன் பிரீமியர் லீக்' தொடரில் ஏற்பட்ட குழப்ப நிலை குறித்து, இந்தியக் கிரிக்கெட் சபை அதிகாரிகளுடன் இன்று பேச்சு நடத்தவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

'ஸ்ரீலங்கன் பிரீமியர் லீக்' தொடரில் இந்திய வீரர்கள் பங்கேற்பதற்கு அந்நாட்டுக் கிரிக்கெட் சபை அனுமதி மறுத்ததையடுத்து, இத்தொடர் குறித்துப் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த நிலையிலேயே, இந்திய வீரர்கள் இந்த 'லீக்' தொடரில் பங்குபற்றுவதற்கு இந்திய அதிகாரிகளின் சம்மதத்தைப் பெறுவதற்காக இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவரையும் செயலாளரையும் இந்தியாவுக்கு விரையுமாறு தாம் கூறியுள்ளார் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் கட்டளைப்படி ஐ.சி.சியின் விதிகள் மாற்றப்பட்டன - மோடி

இந்தியக் கிரிக்கெட் சபையின் கட்டளைப்படி ஐ.சி.சியின் விதிகள் மாற்றப்பட்டன. இதன் காரணமாகவே 'இந்தியன் லீக்' கிரிக்கெட்டை முடக்க முடிந்தது. - இவ்வாறு லலித் மோடி அதிரடியாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) அமைப்பை முடக்க இந்திய கிரிக்கெட் சபை ஐ.சி.சியை வலியுறுத்தி விதிகளை மாற்றியமைத்தது

நான், ஜைல்ஸ் கிளார்க், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைத் தலைவர் நார்மன் ஆரண்ட்ஸே ஆகியோர் கொண்ட குழுவை ஐ.சி.சி. அமைத்து புது விதிமுறைகளை ஏற்படுத்தச் செய்தது.

"அனுசரணையாளர்கள், வர்ணனையாளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு ஐ.சி.எல்லுடனான தொடர்பை விடும்படியும், இல்லையேல் இந்தியக் கிரிக்கெட் சபையுடனான தொடர்பு இல்லாமல் போய்விடும் என்றும் மிரட்டல் விடுக்கப்பட்டது."

"அப்போது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, ஐ.சி.சியின் அனைத்து உறுப்பு நாட்டு கிரிக்கெட் சபைகளையும் ஐ.சி.எல். கிரிக்கெட்டை ஒழிக்க வலியுறுத்தியது.

"அத்துடன், அனுசரணையாளர்கள், வர்ணனையாளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு ஐ.சி.எல்லுடனான தொடர்பை விடும்படியும், இல்லையேல் இந்தியக் கிரிக்கெட் சபையுடனான தொடர்பு இல்லாமல் போய்விடும் என்றும் மிரட்டல் விடுக்கப்பட்டது.

"பிரிட்டனைச் சேர்ந்த பேர்ட் அன்ட் பேர்ட் என்ற சட்ட நிறுவனத்தைப் பயன்படுத்தி எங்கள் குழுவை அதனுடன் பணியாற்றச் செய்து ஐ.சி.எல். கிரிக்கெட் முடக்கப்பட்டது.

"இவையெல்லாம் செய்த பிறகே கடைசியாக ஐ.சி.எல். கிரிக்கெட்டில் பங்குபற்றி வீரர்களுக்கு மன்னிப்பு வழங்கும் உத்தியைக் கடைப்பிடித்து அதனை முற்றிலும் ஒழித்தனர்" எனக் கூறியுள்ளார் மோடி.




# மூன்றாவது ஆட்டம் சமனிலை தொடர் இங்கிலாந்தின் வசம்

சௌதம்டன், ஜூன் 22

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி, சங்கக்காரவின் சதத்தால் 2ஆவது இன்னிங்ஸில் தேநீர் இடைவேளையின்போது இலங்கை அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 334 ஓட்டங்களைச் சேர்த்தது.

அத்துடன், மழை பெய்தமையால் இந்தப் போட்டி சமனிலையில் முடிந்தது. அதனடிப்படையில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் தொடரைத் தன் வசப்படுத்திக்கொண்டது.

இங்கிலாந்து - இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடந்து வந்தது.

முன்னர் நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில் ஒன்றில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்த நிலையில், 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சௌதம்டனில் நடந்தது.

முதல் 3 நாள்கள் இடையிடையே மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் இலங்கை அணி, முதல் இன்னிங்ஸில் 184 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 4ஆவது நாளில் தேநீர் இடைவேளைக்கு முன்னதாக முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 377 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதைத் தொடர்ந்து 193 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணி, 4ஆவது நாள் ஆட்ட நேரம் முடிவில் 49 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 112 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

சங்கக்கார 44 ஓட்டங்களுடனும், ஹேரத் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது.

சங்கக்கரா, ரங்கன ஹேரத் ஆகியோர் தொடர்ந்து ஆடினார்கள். விக்கெட்டை மேலும் பறிகொடுக்கக்கூடாது என்ற நோக்கில் இருவரும் நிதானமாக ஆடினார்கள்.

எனினும், ஹேரத் 36 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார். இவரைத் தொடர்ந்து சமரவீர, சங்கக்காரவுடன் ஜோடி சேர்ந்தார்.

மதிய உணவு இடைவேளையின்போது இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 226 ஓட்டங்களைச் சேர்த்தது.

சங்கக்கார-சமரவீர ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. வேகமாக ஆடிய சமரவீர 72 பந்துகளில் 6 பௌண்டரிகள் அடங்கலாக அரைச் சதத்தை எட்டினார். மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய அணித்தலைவர் சங்கக்கார 217 பந்துகளில் 13 பௌண்டரிகள் அடங்கலாக சதம் கண்டார். சங்கக்கார அடித்த 25ஆவது சதம் இதுவாகும்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 326 ஓட்டங்களாக இருந்தபோது சங்கக்கார (119) ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ஜெயவர்த்தன, சமரவீரவுடன் இணைந்தார். தேநீர் இடைவேளையின்போது இலங்கை அணி 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 304 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது மழை குறுக் கிட்டமையால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

அப்போது, 141 ஓட்டங்களால் இலங்கை அணி முன்னிலை பெற்றிருந்தது. இறுதியில் இந்த ஆட்டம் சமனிலையில் முடிவதாக அறிவிக்கப்பட்டது.

சமரவீர 87 ஓட்டங்களுடனும், ஜெயவர்தன 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இந்தப் போட்டி சமனிலையில் முடிந்தமையால், 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை, இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஆட்டநாயகனாக இங்கிலாந்து வீரர் டிரிம்லெட் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்நாயகர்களாக மஹேல ஜெயவர்த்தன (இலங்கை), டிரிம்லெட் (இங்கிலாந்து) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் கடை வாடகைக்கு

இல. 61 கனகபுரம் வீதி, உதயநகர் கிழக்கு கிளிநொச்சியில் (பஸ் நிலையம் அருகில்) மூன்று கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0750415817, 0776701140

## காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எதிர்ப்புறமாகவுள்ள சங்கத்தானையில் இல. 12, பொற்றொழிலாளர் வீதி சங்கத்தானையில் 3 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
(நேரில்வரவும்) தொடர்புக்கு:
0771526874-சங்கத்தானை, 0775361370-கொழும்பு

## காணி விற்பனைக்கு

3 பரப்பு விசாலமுள்ள காணி நல்லூர் வலயக்கல்வி அலுவலகம் அருகாமையில் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு : 0772395774 (சி/1108) (34)

# கந்தரோடையில் குடும்பஸ்தரின் சடலம் நேற்றுக் காலை மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

சுன்னாகம், கந்தரோடையில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை சுன்னாகம் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

கந்தரோடை மேற்கைச் சேர்ந்த த.யோகேந்திரன் (வயது-40) என்ற குடும்பஸ்தரின் சடலம் இவ்வாறு மீட்கப்பட்டது.

பிரஸ்தாப நபரின் குடும்பத்தினரின் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். சம்பவ இடத்தில் மல்லாகம் பதில் நீதிவான் பி.ஜே. அன்ரனி மரண விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு வீட்டில் பிரஸ்தாப நபர் தனியே இருந்துள்ளார். அவரது குடும்பத்தவர்கள் அயலிலுள்ள தமது உறவினர் வீட்டில் அன்றைய தினம் இரவு தங்கி இருந்துள்ளனர். இந்த நிலையில் காலையில் வீட்டுக்குச் சென்று பார்த்த போது யோகேந்திரன் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்; சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் அவர் மதுபோதையில் காணப்பட்டதுடன் தனது மனைவியைக் கத்தியால் வெட்டி காயப்படுத்தியதாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-86)

## யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்வரும் வேலைகளுக்கான கேள்வி கோரல்.

மேற்படி எமது சங்கம் கீழ்வரும் வேலைகளை நிர்மாணிப்பதற்கு முழுச்செலவுக்குமான கேள்விக் கோரிக்கை கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை வழங்க விரும்புவோர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு வேலை தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்று 05.07.2011க்கு முன்பு கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கும் படியாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் தபால் உறையின் இடது மூலையில் கூறுவிலைக்கான வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும்.

**வேலை விவரம்**

01) முனீஸ்வரன் கிளைக் கட்டடம் - 01
02) நாவாந்துறை கிளைக் கட்டடம் - 01
03) நாவாந்துறை கிளைக் காணி சுற்றுமதில் - 01
04) நாவாந்துறை கிளைக் காணியில் கிணறு அமைத்தல் - 01

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
இல. 330, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (சி/1104)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### மகேந்திரன் சசீந்திரன்

பிறப்பு 13.10.1981 இறப்பு 22.06.2009



*மனம் நோகாமல்*
*குணம் அறிந்து*
*வலக்கரம் கொடுப்பது*
*இடது கை அறியாது*
*வாழ்ந்த உத்தமனே!*
*இன்று நீ எங்கேயடா...?*
*வாழ்வெல்லாம் சிந்தனையோடும்*
*சிரிப்போடும் - போராடி*
*நின்று ஜெயித்தவனே!*
*இருப்பவர்கள் எல்லாம் இறப்பார்கள்*
*இறப்பவர்களில் சிலரே இருப்பார்கள்*
*நீ போய் இரு வருடம் சென்றதையா*
*என்றும் நீ எம் நினைவில் வாழ்வாயடா!*

இல. 31, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில். (5078) (34) குடும்பத்தினர்.

## போக்குவரவுக்கு இடையூறு மூவருக்கு அபராதம் ரூ.5 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

மதுபோதையில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த மூன்று பேருக்கு யாழ். நீதி மன்றம் ரூபா 5 ஆயிரம் அபராதம் விதித்தது.

யாழ். போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூன்று பேரும் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா இரண்டு பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா அபராதமும், மற்றையவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். (ஒ-9)

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

**Spoken English**
ஆங்கில பயிற்சி மையம்

An ISO 9001:2000 Certified Company
veta
Experts in English Training

Foundation , First Step மற்றும் Next Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.



| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 9.30 a.m. | Sat, Sun | 9.30 a.m. | Sat, Sun | 4.30 p.m. |
| Mon, Wed, fri | 7.30. a.m. | Wed, Fri | 9.30 a.m. | Tue,Fri | 5.30 p.m. |
| Tue, Thu | 5.00 p.m. | | | Tue,Fri | 7.30 a.m. |

இலகுவான முறையில் ஆங்கிலம் பயிலுங்கள்.

UK Student Visa , Settlement Visa மூலம் U.K செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

**DMI COMPUTER EDUCATION**

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

## மரண அறிவித்தல்



சாயி அன்பர்

### முத்துக்குமாரு சிவபாதம் (சித்தன்கேணி)

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர் - AI)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், மலேசியா, சித்தன்கேணி, மாத்தளை, கொழும்பு, தற்போது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சாயி அன்பர் முத்துக்குமாரு சிவபாதம் அவர்கள் புட்டபத்தி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளையில் (09.06.2011) வியாழக்கிழமை இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு சுந்தரம்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், நடராசா - தையல்நாயகி தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற மங்களராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அருணேஸ்வரன் (பொறியியலாளர் - ராஜன்-ஆஸ்திரேலியா) உஷாதேவி (ஆஸ்திரேலியா), Dr.பிரபாகரன் (மாத்தளை), யசோதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிலேகா (ஆஸ்திரேலியா) மோகனசுந்தரம் (ஆஸ்திரேலியா), அருளானந்தம் (ஆஸ்திரேலியா), சாமிலா (மாத்தளை) ஆகியோரின் அன்புமாமனும், காலஞ்சென்ற செல்வமலர் மற்றும் கந்தையா (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்) பாலசுப்பிரமணியம் (பாலா ஓவசியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சந்திரராசா மற்றும் தவராஜகுமார் (சண்டிலிப்பாய்) மின்னாம்பிகை (சித்தன்கேணி) சாரதா (சின்னம்மா-கனடா), மனோரஞ்சிதமலர் (பரிஸ்), காலஞ்சென்றவர்களான அ.இராசையா, தனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், உருக்குமணி (வெள்ளவத்தை) அம்பிகாதேவி (சண்டிலிப்பாய்), நகுலேஸ்வரன் (சித்தன்கேணி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் (சிஸ்டரின் லோ) கணா, லாவண்யா, சுதன், கவி, சயிசங்கீத், ஸ்டேலா, ஸ்ரக்கிலா, ஸ்ரஸ்லா, சாலினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புட்டபத்தியில் 14.06.2011 (செவ்வாய்) நடைபெற்று புட்டபத்தியிலேயே தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை சாயி அன்பர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Telephone: 0716768527 Dr.சி.பிரபாகரன் (மகன்).

## மணல், சல்லி விற்பனைக்கு

நாகர் கோயில் மண் 7, 500/=, கண்டாவளை மண் 6, 000/=, பூநகரி மண் 7, 000/=, கருங்கல் சல்லி 3/4" 9, 500/=, கருங்கல் சல்லி 5 நூல் 10, 000/=.
தொடர்பு:- 0777780882.

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் சுற்றாடலில், இணைந்த குளியலறைகளுடன் கூடிய விசாலமான வீடு போதியளவு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள்/ அலுவலகங்களுக்கு ஏற்றது.
தொடர்பு:- 0718349728.

## தவறிவிட்டது

அனந்தர் புளியங்குளம், வவுனியாவைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஜதூசன் என்பவரது தே.அ.அ (890834531V) நாச்சிமார் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0770557857 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## விரிவுரையாளர் தேவை

பின்வரும் பாடநெறிகளுக்கான விரிவுரையாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.
* ஆங்கிலம் (English)
* சிங்களம் (Singalam)
* தகவல் தொழில்நுட்பம் (IT)

22, 23 ஆம் திகதிகளில் நேரில் வரவும்

தொடர்பு:- இல.01, (முதலாம் மாடி) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0727, 021 720 0777.

## விற்பனைக்கு

Canon Digital Camera 400D மொடல் அத்துடன் Lence 18-55mm Zoom, 28m-105mm Zoom, 70-200mm Zoom, 28mm, 50mm Micro, 430ES Canon Flash மற்றும் Electric Oven, Micro Way, Multi Function HP Printer & Copies
தொடர்பு:-
T.P:0777066051, 021 222 0781.

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராசா விமலாதேவி (ராசாத்தி)

16/10, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா விமலாதேவி 18.06.2011 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

இன்று (22.06.2011) புதன்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/10, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (5086) தகவல்: குடும்பத்தினர்.

## Computer Express

Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 5.30Pm
Course Fee 1000/=

Batch I - 22-06-2011 9Am or 3pm Batch II - 25-06-2011 9Am or 3pm
Batch III - 24-06-2011 9Am or 3pm Batch Iv - 26-06-2011 9Am or 3pm

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுடன் மோதவும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் பலமான ஆதரவு இலங்கைக்கு இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

''இலங்கைக்கு எதிரான, அரசியல் நோக்கங் கொண்ட பொய்ப் பரப்புரைகள் அனைத்தும் தோல்வியடையும். இந்த விடயத்தில் உலகுடன் மோதுவதற்கும் நாம் பயப்படவில்லை'' என்றார் பீரிஸ்.

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி களுக்கு அமைச்சர் அளித்த பதில்களில் தெரிவித்ததாவது:-

**ஊடகவியலாளர்:** இலங்கை போர்க்குற்றம் எனக் கூறப் படும் வீடியோக்களை சனல் - 4 தொலைக்காட்சி வெளி யிட்டுள்ளது. இது தொடர்பில் சர்வதேச ரீதியில் இலங்கை மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன. வெளிவிவகார அமைச்சு என்ற வகையில் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

**அமைச்சர்:** இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்த்து வதற்கான சதி முயற்சியே இது. இந்த வீடியோக்கள் கையடக்கத் தொலைபேசி மூலம் எடுக்கப்பட்டவை எனத் தெரிவிக்கப் பட்ட போதிலும் அவற்றின் ஒளி மற்றும் காட்சி (Audio, Visual) மற்றும் பின்னணி (Background) ஆகியவற்றை நோக் கும்போது போலி என்றே கூறலாம்.

இது தொடர்பாக விமர்சனங்களை அமைப்புகளுக்கும் இலங்கை வந்து நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும்படி பாது காப்பு அமைச்சும், நல்லிணக்க ஆணைக்குழுவும் அழைப்பு விடுத்தன.எனினும், அந்த அழைப்பு நிராகரிக்கப்பட்டது. பொய்யான தகவல்களை முன்வைத்து சிலரது நிழல்களின் கீழ் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள் எப்படுகின்றன.

இது முதலாவது, இரண்டாவது தடவையல்ல. இலங்கைக்குத் தொடர்ந்தும் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை வழங்குவதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு பிரஸல்ஸ் நகரில் முக்கிய கூட்டம் ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்பாடு செய் திருந்தது. அக்கூட்டத்துக்கு முதலாவது தினமே சனல் - 4 தொலைக்காட்சி இந் தப் போலியான முதலாவது வீடியோவை வெளியிட்டது.

அத்துடன், நான் பிரிட்டனுக்குச் சென்றிருந்த வேளை அந்நாட்டு வெளி விவகார அமைச்சரை சந்திக்க இருந் தேன். அந்தச் சந்திப்பு இடம்பெறு வதற்கு முன்னர் சனல் - 4 தொலைக் காட்சி இரண்டாவது வீடியோவை வெளியிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட் டனிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உரையாற்றச் சென்றார். அவர் உரையாற்றுவதற்கு முதல்நாளில் சனல் - 4 தொலைக்காட்சி மூன்றாவது வீடி யோவை வெளியிட்டது.

போர்க்களத்தில் தோல்வியுற்றவர்கள் திரண்டு, சர்வதேச சக்திகளுடன் இணைந்து இலங்கைப் பொருளா தாரத்தை சீர்குலைக்க சதி முயற்சி களைச் செய்து வருகிறார்கள். அதன் வெளிப்பாடுகளே இந்தப் போலி வீடி யோக்களாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்து வதற்கான முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், அந்த முயற்சி கள் அனைத்தும் வெற்றி அளிக்காமலே போகும். ஜனாதிபதியை எவராலும் வீழ்த்த முடியாது. உலகின் எந்த இடத் துக்கும் அவர் செல்வார்.

**ரஷ்யப் பயணம்**

இதேவேளை, ஜனாதிபதியின் ரஷ்ய பயணம் தொடர்பாக அமைச்சர் இதன் போது விளக்கமளித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக் களின் 2 லட்சத்து 97ஆயிரம் என்ற எண் ணிக்கையை 10 ஆயிரமாகக் குறைத் துள்ள சாதுரியத்தை ஸ்பெயின் பிரதமர் பாராட்டினார். அத்துடன் இலங்கையின் பல்கலைக்கழகக் கட்டமைப்பு மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை குறித்து பெருமிதம் கொள்வதாக ஸ்பெ யின் பிரதமர் கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதி திரிமித்தி மெத்வ தேயையும் ஜனாதிபதி சந்தித்தார். பயங்கரவாதம் இலங்கையில் மட்டுமல்ல, ரஷ்யாவிலும் உள்ளதாக அவர் கூறி னார். யுத்தம் இடம்பெறும் காலத்தைப் போன்றே எதிர்காலத்திலும் பொருளா தாரம் உட்பட உதவிகளை ரஷ்யா வழங் கும் என்றும் ரஷ்ய ஜனாதிபதி உறுதி மொழி வழங்கினார்.

அதேபோன்றே சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவேயையும் ஜனாதிபதி சந்தித் தார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் மேற்குலக நாடுகளின் முயற்சிகளுக்கு சீனாவும், ரஷ்யாவும். தமது எதிர்ப்பை வெளியிட்டன. சர்வ தேசத்துக்கு இலங்கை வழங்கும் மிகத் தெளிவான பதிலே இதுவாகும்.

- இப்படி பீரி ஸ் தெரிவித்தார்.

(உ-சி)

# அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றச்சாட்டுகள் உள்ளன. அவை குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கரிசனை கொண் டுள்ளது. குற்றச்சாட்டுக்கள் குறித்து முழுமையான விசாரணைகள் நடத்தப் படுவதற்கு அமெரிக்கா ஏற்கனவே ஆத ரவு தெரிவித்துள்ளது'' என்றார் அமெ ரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச் சாளர் விக்ரோரியா நுலன்ட்.

ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிரிவுக்கான உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக்கும் ஏனைய மூத்த அதிகாரிகளும் தொடர்ச்சி யாக இதுபற்றிய தமது கரிசனைகளை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

''அமெரிக்கர்கள் சனல்-4 வெளி யிட்ட ஆவணப்படத்தைப் பார்த்துள்ள னர். அதில் மிகவும் அதிர்ச்சியை ஏற் படுத்தும் சில படங்களும் இடம்பெற் றுள்ளன''- என்றும் அவர் மேலும் கூறினார்.

(உ)

# வடக்கு, கிழக்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மாநாடு நேற் றுக்காலை கொழும்பு கியூ வீதி யிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அளவெட்டியில் நடைபெற்ற கூட்டமைப்பின் கூட்டத்துள் புகுந்து மீது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டி யது. வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எதிர்ப்பதனாலேயே இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கை இராணுவம் தனது கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருக்கவே விரும்புகின்றது. தமிழ் மக்களுக்கு உரிய தலைமையை வழங்கி ஜனநாயக செயற் பாட்டைக் கூட்டமைப்பு முன்னெடுத்தும் தமிழ் மக்களின் குரல் ஒடுக்கப்படுகின்ற நிலையே காணப்படுகின்றது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாது காப்பு வழங்கிய பொலிஸ் பாதுகாப்புப் பிரிவினர் தாக்கப் பட்டுள்ளனர். இவர்களைத் தாக்கியது யார்? இராணுவத்தினரே தாக்குதல் நடத்தியுள்ளனர். அப்படியாயின் ஆட்சித் தரப்பில் முரண்பாடு உள்ளதா?

இது ஒரு சிறிய சம்பவம்; இதை ஏன் அமெரிக்கத் தூது வரிடம் முறையிடுகின்றனர்? - என பாதுகாப்புச் செயலர் கேள்வி எழுப்புகின்றார். இவர் முன்னர் யுத்த காலப் பகுதியில் ஈராக்கில் அமெரிக்காவின் செயற்பாட்டை ஆதரித்தார். பாகிஸ் தானில் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட விதத்தைக் கண்டிக்கின்றார். இவரே இன்று பேரினவாத முகாமின் முதன்மையானவராகக் காணப்படுகின்றார்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(உ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி சீவரத்தினம் சரோஜினிதேவி



புங்குடுதீவு 3 வட்டாரம் சங்கத்தாகேணியடியைப் பிறப்பிடமாகவும் 816, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீவரத்தினம் சரோஜினிதேவி நேற்று 21.6.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவண முத்து (கிளாக்கர்) - பேரின்பம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், ரவிச்சந்திரன் (கனடா), சூரியகலா (கனடா), சந்திரகலா (கனடா) ஜெசிகலா (முத்திரைச்சந்தி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

*816, பருத்தித்துறை வீதி,*
*முத்திரைச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய வீ.மகாலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

### பொன்னர் வீரபாகு

அவர்களின் இயற்கை எய்துகையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லக்சுமி வெளியீடு,
*166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

பிரதம ஆசிரியரும்,
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

**தேடுகிறோம் அக்காவே.... திரும்பி வா !**

திருமதி
### புஸ்பாமலர் குலதாசன்
(முகாமைத்துவ உதவியாளர்
கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி.)



*அன்புடன் அகமகிழ்ந்து*
*அம்மாவாய் அரவணைத்த*
*புஸ்பா அக்காவே...*
*உதயப் பொழுதிலே*
*இதயம் நொருக்கிய*
*சேதி கேட்டோமே...*
*அருள்சொரி இறைவன்*
*இருள்தனை நிறைத்து*
*இடருற செய்ததேனோ...*
*பிரிந்திட்ட உமை நாமும்*
*விரிந்திட்ட உலகமதில்*
*எங்குபோய் தேடுவோமோ...*

**உதவி ஆணையாளரும் சக உத்தியோகத்தர்களும்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி.**

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை - மேரியூடி
(புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆசிரியை)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீஸ் யோஜ் (அந்தோனிப்பிள்ளை) கிறிஸ்ரீனம்மா தம்பதியரின் புதல்வி செல்வி மேரியூடி நேற்று திங்கட் கிழமை (21.06.2011) காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.06.2011) புதன்கிழமை அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலைக்கு மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாஷையூர்.* *(5096)*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி ஆன் யூலியற் றுட்ரா பஸ்தியாம்பிள்ளை



சுருவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கெண்ட திருமதி ஆன் யூலியற் றுட்ரா பஸ்தியாம்பிள்ளை நேற்று (21.06.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் சவரி முத்து-மேரிலூட்ஸ் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் றுட்ரா பஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை -இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் கரோன், அஞ்சலி ஆகியோரின் அன்புத் தாயும் சப்றினாவின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான ஜோ ஸ்ரனிஸ்லோஸ், சாள்ஸ் அமிர்தநாயகம் மற்றும் மேரிதிரேசா, பீற்றர் ஜெராட், மேரிஸ்ரெலா, விக்ரர் இம்மனுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 100, 4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம். (ஜெயா அச்சகம்)*

தகவல்:
*திரேசா சவிரிமுத்து*
*(சகோதரி)*

### திருமதி சீமான்பிள்ளை லூர்த்தம்மா

*இறைவன் எனது மீட்பானார்-அவரே எனக்குத் துணையானார்.*
*அவரைக் கொண்டு நான் வாழ-எதனைக் கண்டும் பயமில்லை*



பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கெண்ட திருமதி சீமான்பிள்ளை லூர்த்தம்மா நேற்று (21.06.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மா.சீமான்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், வின்சன் சகாயராசா (சுவிஸ்), வின்சன் அன்ரனிமுத்து, கிறேஸ்பற்றிமா (லண்டன்) கிறேஸ் மெற்றில்டா மரியதாஸ் (ஆசிரியர்-நெல்லியடி, மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயும் அற்றோனிக்கம்மா (சுவிஸ்), பேபி, இன்பநேசன் (லண்டன்), ஜெயக்குமார் ஆகியோரின் மாமியும், அருள்சன், யானுசா, ஜீனுசா, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.06.2011) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்த போதும் சனி, ஞாயிறு மற்றும் திங்கள் கிழமைகளில் படையினர் தமது பதிவு நடவடிக்கைகளைப் பல பகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொண்டனர். சங்கானை, உடுப்பிட்டி பகுதிகளில் வீடுகளுக்கு நேரடியாகச் சென்ற படையினர் வீட்டில் இருந்தவர்களை ஒளிப்படம் எடுத்து அவர்களின் விவரங்களை முழுமையாகப் பதிவுசெய்தனர். "பதிவுகளை நிறுத்துவது தொடர்பான முடிவு சகல படைப் பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டது. தகவல் சென்று சேராத படைப்பிரிவுகள் சில சமயங்களில் பதிவுகளை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் உடனடியாக அனைத்துப் பதிவுகளும் நிறுத்தப்படும்" என்றார் ஹத்துருசிங்க. (உ-ஐ)




லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

June மற்றும் July / August Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

■ இலவச IELTS வகுப்புகள் ■ 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
■ 4 வருட visa உத்தரவாதம் ■ GCE(O/L) தகமை போதுமானது

Jaffna

காலம்: 21st June 2011 & 22nd June 2011: 10.00 a.m. - 5.00 p.m.

இடம்: LONDON METROPOLITAN COLLEGE No:197, Arasady Road, Jaffna

Hot Line: 021 222 7230, 071 4150 995

எமது சேவை முற்றிலும் இலவசமானது

* Condition Apply

Portsmouth · Middlesex University · icp · CTL · British Institute of Technology & E-commerce

EXPONET Overseas Consultants

Head office - 379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka Tel:0714150995

Jaffna Branch - 197, Arasady Road, Jaffna

London Branch - No:56, The Gardens Harrow, Middlessex HA1 4EY, UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

## கிளிநொச்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பிரதே சபைகளுக்குமான வாக்குகளும் யாழ்.செயலகத்தில் வைத்தே எண்ணப்பட்டு வந்தன. இம்முறை இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. "ஜூலை 23ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள்யாவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கு மான வாக்கு எண்ணும் பணி இம்முறை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலேயே இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன" என்று யாழ். தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார். (உ-9)

## பிரபாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டில் ஏறாவூர் மற்றும் காத்தான்குடி ஆகிய இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களையும் காண்பிக்க வேண்டும். போரின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை. 20 வருடங்களுக்கு முன் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இப்போது அவர்கள் மீள் குடியமர்ந்து வருகின்றனர். இந்த சுதந்திரத்துக்கு எதிராக நம்மால் நாட்டைக் காட்டிக்கொடுக்க முடியாது.

இந்த நாட்டை காட்டிக் கொடுப்பதற்காகவே கரு ஜயசூரிய இன்று சட்டமூலம் ஒன்றையும் கொண்டுவந்தார்.எமது பிரதம கொறடா தினேஷ் குணவர்தன அதனை எதிர்த்து முறியடித்து விட்டார்.

ஒஸாமா பின்லேடன் உட்பட அவரது மனைவி, பிள்ளைகள் கொல்லப்பட்டனர். ஆனால் இலங்கையில் பிர பாகரன் கொல்லப்பட்ட போதிலும், அவரது மனைவி ஜனாதிபதியால் பராமரிக்கப்பட்டு வருகிறார். அவரது பிள்ளைகளுக்கு கல்வி புகட்டப்பட்டு வருகிறது. இது அல்லவா மனித உரிமை.

- என்றார்.

விற்பனையாகின்றது

புகையிரத திணைக்கள அத்தியட்சகர்களுக்கு ஆள்களை சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி

P.கமல்தாசன்

பூபாலசிங்கம், அன்னை துர்க்கா புத்தகசாலை.

LOGIC

MCQ பல்தேர்வு வினாத்தொகுப்பு வெளிவந்து விட்டது.

P. கமல்

பூபாலசிங்கம் புத்தகசாலை.

இணைந்த கணிதம் (2013 A/L)

பி.விமலநாதன்

புதன், வெள்ளி பி.ப. 3.30 ஆரம்பம் 24.06.2011

N.E.W ஆனைப்பந்தி

வேலைவாய்ப்பு

கணினி ரைப்செற்றிங் செய்வதில் நல்ல தேர்ச்சி உடையவர் தேவை. (Photoshop, Pagemaker, Corel draw)

★ பெண்கள் மட்டும்.
★ வேலை இடம்: யாழ் நகரம்.
★ மாதச்சம்பளம்:- 12000/=

பெயர் முகவரியை SmS மட்டும் செய்யவும்.
0775040714

MyWay இன் SPOKEN ENGLISH

ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள்,

சனி, ஞாயிறு 3 மாத பயிற்சிநெறி

பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்

25.06.2011 சனிக்கிழமை

பிரிவுகள் : காலை 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6

27.06.2011 முதல் அனுமதி நிறுத்தப்படுகிறது

பயிற்சிக்கான மொத்த கட்டணம்

ரூபா 3000/- மட்டும்

MyWay 182, Stanley Rd, Jaffna 077 33 63 456

SINGER PLUS சுன்னாகம் கிளை

இலவச செயன்முறை விளக்கமும் பயிற்சியும் சமையற்கலை, தையற்கலைகளில் ஆர்வமுள்ளவர்களுக்கான செயன்முறை விளக்கங்களுடன் கூடிய பயிற்சி.

இடம்: SINGER PLUS சுன்னாகம்

காலம் இன்று (22.06.2011) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு

அனுமதிகள் இலவசம்

ஆர்வமுள்ள அனைவரும் இப்பயிற்சியில் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு SINGER PLUS சுன்னாகம்

இல: 136 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே 021 2240555

கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்



கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சுவேலைகள், Plumbing, Electrical, Painting, Grill Work, பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும், நவீன முறைகளிலும், குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

அழையுங்கள் - 0776679564

எங்கள் சேவை உங்கள் இல்லம் தேடி வரும்

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

Annual Prize Day – 2011

Saturday, 25th June 2011 at 9.00 a.m

Chief Guests

Dr. Dan Seevaratnam

Chairman

Governing body for C.M.S Schools in Sri Lanka.

&

Mrs. Pauline Seevaratnam

Chairperson

Ven. S. P. Nesakumar

Archdeacon of Jaffna.

Parents, old girls & well wishers are cordially invited

Principal, Staff & Students

BIT கணினிப் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம

புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. Call me: 0776577359

BIT கற்கைநெறியினைத் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கற்பிக்கும் ஆசிரியரால் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

MIS By Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

74, [illegible] வீதி [illegible] யாழ்ப்பாணம்.

மீண்டும்

LOGIC பிரத்தியேக வகுப்புக்கள்

LRC நாவலர் வீதியில் விரைவில்

BY.P. கமல்

வேலைக்கு ஆள் தேவை

கணினி அறிவுடைய English Tamil Typing மற்றும் Designing தெரிந்த பெண்கள் வேலைக்குத் தேவை. திருநெல்வேலிக்கு அருகாமையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

Best 1 Com (அறிவொளி)

27, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம். தொடர்பு: 021 222 0066

சிங்கர் பிளஸ் - சுன்னாகம் கிளை

பரிசு பெறுவோர் விவரம்

சிங்கர் பிளஸ் சுன்னாகம் கிளையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு 23.01.2011 அன்று 2009/2010 இல் கொள்வனவுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரிடையே நடத்தப்பட்ட "சிங்கர் பிளஸ் சுன்னாகம் வாடிக்கையாளர் அதிர்ஷ்டம்" இல் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

1 ஆம் பரிசு - சிங்கர் LCD TV.
கே. உதயகுமார் (தேவாலய வீதி, புன்னாலைக்கட்டுவன்.)

2 ஆம் பரிசு - சிங்கர் சலவை இயந்திரம்
திருமதி வி. பத்மநாதன் (மயிலணி, சுன்னாகம்.)

3 ஆம் பரிசு - லுமாலா துவிச்சக்கர வண்டி
எஸ். செந்தூரன் (கந்தரோடை, சுன்னாகம்.)

ஆறுதல் பரிசுகள்:-

கே. கிருபாகரன் (உடுவில் மத்தி, மானிப்பாய்), எம். தர்மபாலன் (உடுவில் கிழக்கு, சுன்னாகம்), வல்லிபுரம் ராஜநாயகம் (ஐயனார் கோயிலடி, சுன்னாகம்), திருமதி ஜே. ஜெயரட்ணம் (மில் வீதி, ஏழாலை மேற்கு), என். மீனாட்சிசுந்தரம் (அம்பலவாணர் வீதி, உடுவில்), திருமதி எஸ். மலர் (கோப்பாய் வடக்கு), ஏ. தற்பரன் (அலக்ஸாந்தர் வீதி, கொழும்பு-06), எஸ். வாமதேவன் (அம்மன் வீதி, உரும்பிராய் மேற்கு), வி. அருந்தவன் (சூராவத்தை, சுன்னாகம்), ஜீ. இரத்தினசிங்கம் (புலவனார் வீதி, கல்வியங்காடு)

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் இன்று (22.06.2011) புதன் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

சிங்கர் பிளஸ் - சுன்னாகம்

இல.136, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். தொ.பே:-021 224 0555.

Quick Learning Course

Spoken English with Grammar

Duration 1 Month Rs. 3000.00

உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

04-07-2011

Batch A : 09.00 AM - 01.00 PM
Batch B : 01.30 PM - 05.30 PM

BRITISH COLLEGE OF HIGHER STUDIES (BCHS)

No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்

Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முற்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் உங்களுக்கு ஏற்ற நேர அட்டவணையை தெரிவுசெய்து வீண் விரயத்தைத் தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாக்கிளை உப தலைவரும், பொறியியலாளருமான சு.அன்பழகன் உரையாற்றுகிறார். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி மேகலா அன்பழகன் வழங்குகிறார். (190)



# இளங்கவிஞர்கள் யாப்பிலக்கணம் கற்று மரபுக் கவிதைகளை படைக்க முயலவேண்டும்

## கவிஞர் வை.க.சிற்றம்பலம் தெரிவிப்பு

சுன்னாகம், ஜூன் 22

இளங்கவிஞர்கள் யாப்பிலக்கணம் கற்று மரபுக் கவிதைகளை படைக்கமுயலவேண்டும் என வலியுறுத்தினார் முதுபெரும் கவிஞர் வை.க.சிற்றம்பலம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் நடத்தப்பட்ட ஞான விலாசம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச சபையின் பிரதம முகாமை உதவியாளர் எஸ்.சுகுணராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாவலர் பெருமான் செய்த அரும்பெரும் சேவையால் தான் இன்றுவரை யாழ்ப்பாண மக்கள் இலக்கணச் செழுமையுடன் பேசுகின்றனர். நாவலரது காலத்தில் பலர் புலவர்களாக, பண்டிதர்களாக இருந்துள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து உ.வே. சாமிநாதையர் தான் பதிப்பித்த சிந்தாமணி நூலை சுன்னாகம் குமாரசாமிப் புலவருக்கு அனுப்பி வைத்தார். புலவர் அதிலுள்ள பிழைகளைக் கண்டறிந்து கூறினார். இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்றுச் சிறப்புமிக்கவர்களாக அந்தக் காலப் புலவர்கள் வாழ்ந்தனர்.

ஆனால் இன்று மரபுக் கவிஞர்கள் அருகிவிட்டனர். யாப்புக்கமைய எழுதுவது அருகி விட்டது. பலரும் புதுக்கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இளம் கவிஞர்கள் யாப்பிலக்கணம் கற்று ஓசையுடன் கவிதை பாடுவதற்கு முயற்சிக்க வேண்டும்- என்றார்.

நிகழ்வில் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் வெள்ளி மலை சஞ்சிகையை வெளியிட்டு வைக்க, ஓய்வுபெற்ற அதிபர் ஆறுமுகம் அதனைப் பெற்றுக்கொண்டார். உடுவில் பிரதேச மத்தியஸ்தர் சபைத் தலைவர் சு.தம்பித்துரை நூலக சமூகம் சார்பாகப் புலவருக்கும் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். கவிஞர் பா.பாலச் சந்திரன் தலைமையில் சிறப்புக் கவியரங்கமும் இடம்பெற்றது.(வ-38)

# கடற்றொழிலாளர் வாழ்வாதார மேம்பாட்டுக்கு கடல்சார் பயிற்சிகளை ஆரம்பிக்கவேண்டும்

## கல்லூரி உதவிப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 22

கரையோரப் பிரதேசங்களில் வாழும் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் தொழில் விருத்தியை மேம்படுத்துவதற்கு கடல்சார் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்கான பயிற்சி நெறிகள் பல்கலைக் கழகங்களில் வளங்கப்படுதல் அவசியமாகும். இவ்வாறு தெரிவித்தார் யாழ். கடலோட்டு மற்றும் கடற்றொழில் கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம் பிள்ளை.

தங்கல்ல சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தால் யாழ். மாவட்ட மாணவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் தங்கல்ல சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலை மேப்படுத்தும் வகையில் தங்கல்ல சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் பயிற்சிநெறி மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என எதிர் பார்க்கின்றோம். இத்தகைய செயற்பாடு இன, மத, மொழிக்கு அப்பால் உறவுப் பாலத்தை ஏற்படுத்திக் கொடுத் துள்ளது. ஏனெனில், இதுதான் வெளிமாவட்டத்துக்குச் சென்று பயிற்சி பெறும் முதலாவது நிகழ்வாகும்.

இது தொடர்பான பயிற்சி நெறிகள் யாழ். மாவட்டத்திலும் எதிர்காலத்தில் நடத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் கரையோரக் கடற்றொழிலாளர்களின் தொழில் ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப் படுவதுடன், புதிய தொழில் நுட்பங்களைக் கையாளக்கூடிய வழிமுறைகளையும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (வ-313-160)

# முதுமைக்காலத்தில் ஓய்வூதியம் பெறுவதில் பங்காற்றுவோருக்கு அரசு கைகொடுக்கும்

## சமூக பாதுகாப்புச் சபை யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி

நாவற்குழி, ஜூன் 22

தமது முதுமைக்காலத்தில் ஓய்வூதியம் பெறுவதற்கான பங்களிப்பைச் செலுத்துவோருக்கு அரசு கைகொடுக்கின்றது என்று இலங்கை சமூகப் பாது காப்புச் சபையின் யாழ். மாவட்ட இணைப் பதிகாரி பா.பிரதீபன் தெரிவித்தார்.

இலங்கை சமூகப்பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளை இணைப்பதற்கான நடமாடும் சேவை அண்மையில் கோப்பாய் மத்தி கிராம சேவகர் சி.பாலசுந்தரம் மற்றும் கிராமப் பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்ற போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்:-

அரச திணைக்களச் சேவையிலுள்ளோர், விவசாயிகள், மீனவர் மட்டுமே ஓய்வூதியத் திட்டங்களில் இணைய முடியுமென்ற நிலைமை 1996 ஆம் ஆண்டு இலங்கை சமூகப்பாதுகாப்புச் சபை நிறுவப்பட்டதும் மாற்றியமைக்கப்பட்டது. இப்போது நாளாந்தத் தொழில்களில் ஈடுபடும் சகலரும் ஓய்வூதியம் பெறும் நிலைமை உருவாக்கப்பட்டதால் இந்த ஓய்வூதியத் திட்டங்களில் எமது மக்கள் ஆர்வத்துடன் இணைந்து வருகின்றனர். 18வயது முதல் 59.வயது வரையிலான சுயதொழில்களில் ஈடுபடும் அனைவரும் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

ஓய்வூதியம் பெறும் காலத்தில் உங்களுக்கு அருகிலேயே ஓய்வூதியம் வழங்கப் பட வசதி செய்யப்பட்டுள்ளது. இப்போது எமது யாழ். அலுவலகம் கணினி வலைப் பின்னலில் இணைக்கப் பட்டுள்ளது. ஆகவே, உங்களுக்கான ஆவணங்களும் ஓய்வூதியமும் மிக விரைவாகவே வழங்கப்படும்.-என்றார் அவர். (எ-121)

# பேரிடர் முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறை

நாவற்குழி, ஜூன் 22

கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் யாழ்.மாவட்டத்திலுள்ள அதன் தொண்டர்கள் 35 பேருக்கு பேரிடர் முகாமைத்துவம் தொடர்பான இருநாள் வதிவிடப் பயிற்சி ஒன்றை நிறுவனத்தின் மத்தியூஸ் வீதியிலுள்ள கேட்போர் கூடத்தில் அண்மையில் நடத்தியுள்ளது.

இந்தப் பயிற்சியில் அனர்த்தங்களை இனம் காணுதல், முன் ஆயத்தம் செய்தல், அனர்த்தம் ஏற்பட்டால் அதன் போது சேதங்களைக் குறைத்தல், அனர்த்தம் ஏற்படக்கூடிய இடங்களை இனம் காணுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்தத் தொண்டர் களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தப் பயிற்சி நெறியில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-121)

# விக்னேஸ்வராவுக்கு அன்பளிப்புப் பொருள்கள்

நாவற்குழி, ஜூன் 22

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்.-பத்மநாபா அணியினர் மின்மணி, உள்ளக ஒலிபெருக்கி வசதி என்பனவற்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்த அமைப்பின் உறுப்பினராக இருந்து காலஞ்சென்ற கைதடி மத்தியைச் சேர்ந்த சின்னவன் இராசசுந்தரம், நாகன் தவராசா, வேலன் இராசேந்திரன் ஆகியோரின் நினைவாக அவர்களின் உறவினர்களால் இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது.(எ-121)

# கொடுப்பனவுகள் வந்து சேர்ந்தன

நவாலி, ஜூன் 22

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், காசநோய், புற்றுநோய் ஆகியவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்களின் ஜூன் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-100)

# நல்லூர் செயலக கலாசாரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய இசை, நடனம், பேச்சு, கவிதை, நாடகம், நாட்டுக்கூத்து போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் ஒரு தொகுதி விவரம் நேற்றைய உதயனில் பிரசுரமாகின. அவற்றின் தொடர்ச்சி வருமாறு:

**கவிதை**

**திறந்த பிரிவு**

நித்தியா யோகராஜா (மூத்த விநாயகர் வீதி நல்லூர்), கனகரத்தினம் குமணன் (அரியாலை), ஆரணி முகுந்தன் (கொக்கு வில் இந்துக்கல்லூரி), நளின் பிறேம்லால் (அரியாலை மேற்கு).

**சிரேஷ்ட பிரிவு**

சாலினி இரவீந்திரன் (முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), துளசி உமாகரன் (இந்து மகளிர் கல்லூரி), திவ்வியா சுரேந்திரன் (இந்துமகளிர் கல்லூரி).

**நாடகம்/நாட்டுக்கூத்து**

**போட்டி**

**கீழ்பிரிவு**

இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலை.

**சிந்து நடைக் கூத்து**

**திறந்த பிரிவு**

இந்து மகளிர் கல்லூரி, கலைக்குழு காந்தி சனசமூக நிலையம் அரியாலை மேற்கு, அரியாலை பத்மா கலாமன்றம், வடமோடி நாட்டுக்கூத்து (திறந்த போட்டி) பாரம்பரிய மேம் பாட்டுக் கழகம், அரியாலை பத்மா கலாமன்றம்

**நவீன /சமூக நாடகம்**

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ கிருஷ்னலயா நாடகமன்றம்.

**இசை நாடகம்**

அரியாலை பத்மா கலாமன்றம், கோண்டாவில் கிழக்கு நாராயண சனசமூக நிலையம், அரியாலை வசந்த கானசபா. (வ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொன்னாலை
# திருவருள்மிகு ஸ்ரீ
# மஹா கும்பாபி

## ஆபத்பாந்தவனிடம் அபயம் கேட்போம்



உலகில் அருமையும் பெருமையும் வாய்ந்தது மானிடப்பிறவி. அதனை நாம் புண்ணிய பயனாய் அடைந்துள்ளோம். இப் பிறவி மூலம் ஓர் மேலான பேரின்ப நிலையை அடைய நாம் முயற்சிக்க வேண்டும்.

மானிட வாழ்க்கை நிலையில்லாதது. மரண பயம் ஒரு புறம். நாளை என்ன நடக்குமோ என்ற கவலை மறுபுறம். இவ்வாறான சூழ்நிலையில் இவைகளிலிருந்து விடுபடவும் கவலைகள் நீங்கி மன அமைதியும் நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படவும் இறைவழிபாடு இன்றியமையாததாகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புகள் அமைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இன்றைய தினம் நிகழ்கின்றது. பரம தயாளனாகிய ஸ்ரீமத் நாராயணன் அநாத ரட்சகன். நல்லவர்களை பாதுகாத்து தர்மத்தை நிலைபெறச் செய்பவன். அவனைச் சரணடைவோம். இன்றைய பொன்னான நாளில் அனைவரும் காத்தற் தெய்வமான கண்ணனின் கருணையால் சகல வளங்களும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஆசி கூறிப் பிரார்த்திக்கின்றோம்.

''நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''.

பிரதிஷ்டா சிரோமணி ஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக் குருக்கள்,
பிரதிஷ்டா பிரதமகுரு,
ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், பொன்னாலை.

## செஞ்சொற் செல்வரின் செய்தி



எங்கள் திருநாட்டில் கண்ணபிரான் திருக்கோயில்களில் முதன்மையானது பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் திருக்கோயிலென்றால் மிகையாகாது. அற்புதம் நிறைந்த கோயில் தச அவதாரநாயகனின் அருளாட்சியை வெளிப்படுத்தும் புதுமை மிக்க ஆலயம். இத்திருக்கோயிலில் தொன்று தொட்டு நடைபெற்றுவரும் கூட்டு வழிபாடு உள்ளத்தை உறைய வைக்கும் உன்னத வழிபாடு. கண்ணன் மீது ஆடிப்பாடி மகிழும் ஆனந்தத் திருக்கூட்டத்தை வேறு எங்கும் காணமுடியாது. இத் திருக் கோயிலின் மேன்மையை அறிந்து குடாநாட்டுக்கு வெளியேயிருந்தும் ஏராளமான பக்தர்கள் தேடிவந்து வழிபாடு செய்வதைக் காணலாம்.

இந்த ஆலயத்தின் மீளாஅடியவர்களின் அயராத முயற்சியால் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு, வர்ண வேலைப்பாடுகளுடன் திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமை சிறப்புக்குரிய விடயமாகும். வரம் தரும் வரதராஜப்பெருமாளின் கும்பாபிஷேகத்தோடு இம்மண்ணில் நீதி நிலைத்திடப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர், சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்.



**22.06.2011 புதன்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் முற்பகல் 10 மணிக்கு மண்டலாபிஷேகம் நிகழும். 06.08.2011 வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகும்.**

ஸ்ரீ முருகன் களஞ்சியம்
புதினப் பத்திரிகை முகவரும்
L.P. GAS ஏக விநியோகஸ்தரும்
விற்பனையாளரும்
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை

கணேசா ஹாட்வெயர் ஸ்ரோஸ்
மின்சார உபகரணங்கள்
ஏகவிநியோகஸ்தர்
காரைநகர் றோட், மூளாய்

ஸ்ரீராம் களஞ்சியம் (அப்பன்)
பல்பொருள்
வாணிபம்
காரைநகர் றோட்,
மூளாய்

New Star Medicals
Main Street,
Moolai

Super Shoes
154, Navalar Road,
Jaffna.
Tel: 021 222 6809

சிங்கப்பூர்
ஜூவல்லறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

S.T.PARAMESWARAN & CO.(PVT) LTD.
TRANSPORT SERVICES
Colombo - Jaffna - Colombo
Head Office: 182, Central Road,Colombo - 12.
Tel : 0112347210, Fax : 0112395472
Branch Office: 79, Stanley Road,
Jaffna. T.P : 0212227316

கேதீஸ் க
பல்பொருள்
மொத்தமாகவும், சில்
விலைக்கு பொருள்
கொள்
வழக்கம்பரை





S.R.P. அ
உள்ளூர் விளைபொருள்கள் விற்பனை
இல.18, 19, புதிய சந்தை, புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் ஸ்ரீ ராம்

# ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
# ...பிஷேகச் சிறப்புமலர்- 22.06.2011



## தலமும் இருப்பிடமும்

தட்சிணகைலாச மகாக்ஷேத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கையின் வட பாகத்தில் வீணாகான புரமென்று சொல்லுகின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத்திக்கில் நீர் நிறைந்த குளங்களும் வயல்களும் முன்னே இருக்கவும், உவர் நீர்க் கடலும் சமுத்திரமும் தெற்கு, மேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்றதாய் இவற்றுக்கு நடுவண் சதுரங்கமென்னும் மணற் பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்யஸ்தலம் இருக்கின்றது. ஆலயத்துக்கு முன்னே குறுக்காகச் செல்லும் தெருக் கரை மார்க்கமாகப் பருத்தித்துறைக்குப் போகலாம். ஆலயத்துக்கு முன் (கிழக்கு மேற்காகச்) செல்லும் மண்தெரு, மூளாய் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கின்றது.

### தலப்பெயர்கள்

இத்தலத்துக்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

சுவர்ணாலயபுரி

இந்திரன் வசிக்கப்பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியபடியாலும் இப்பெயர் பெற்றது.

சதுரங்கம்

ஆலய உற்பத்திக் காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ்விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்கு பிரீதியாக அமைந்த தலப் பெயர். பாரதநாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அரங்கங்கள் உள்ளன.

பொன்னாலயம்

முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம். பொன்னென்னும் பல பொருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

### கோயிலமைப்பு

இந்த ஆலயம் பொன்னாலை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் மிக அழகாக விளங்குகின்றது. இதற்கு இப்போது இரு பிரகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஏழு பிரகாரங்கள் இருந்தன. அவற்றில் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது.

இப்போது தேரோடும் வீதியில் அதாவது கோயிலுக்குப் போகின்ற முன்னமைப்பில் இவ்வாலயத்தோடு புராதனமாயமைந்தவரும் வரந்தருபவருமான நரசிங்க பைரவர் வீற்றிருந்தருளியுள்ளார். உட்பிரகாரத்தில் தெற்கே நாகதம்பிரான், வட மேற்கே சனீஸ்வரன் கோயிலும், வடக்கே தீர்த்தக் கிணறும் வன்னியும், அடுத்தாற் போல நவக்கிரகக் கோயிலும் வசந்த மண்டபமும், ஈசான திசையில் யாக மண்டபமும் இருக்கின்றன.

### தலப்பெருமை

செய்தற்கு அரிய பெரிய திருப்பணி குளக்கோட்டு மகாராசனால் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போதும் சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே புலவர்களாலும் பக்தர்களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அநேகம் இப்போது இல்லாமல் போயின. சிலவே உள்ளன. பறாளாய் விநாயகர் பள்ளு என்ற நூலில் இத்தலப் பெருமை கூறப்பட்டுள்ளது.

உ

### ஓம் நமோ பகவதே வாசுதேவாய சரணம்

பொன்னடியி லிருமருங்கும்
பொருந்தி யிருந்தே
பொன்னாலைப் பெரு மாளுன்
புகழை யேத்த
மன்னியிரு அந்தணர்கள்
மறைகள் ஓத
மாபெரும் சாந்திவிழா
மண்ணிற் கண்டார்
இன்ப நிறை வாழ்வுதனை
இகத்திற் சுகித்தும்
இறவாத பெருவாழ்வின்
இன்பிற் திழைத்தும்
துன்னுபயம் வாராத
தூய வாழ்விற்
துலங்கிடவும் அருளிடையா
வரத ராஜா

க.தி.க.சிவபாலன்
அடியாருக்கு அருளூட்டும் அண்ணலார்.

...Medicals
...reet,
...ai

திவானி ரவல்ஸ்
திருமண வைபவங்கள்,
விழா நிகழ்வுகளுக்குக்
குறித்த நேரத்துக்கு
ஒழுங்குசெய்து தரப்படும்.
காரைநகர் றோட், மூளாய்

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப் புடைவைகளின்
சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

ஹரன் ஸ்ரோர்ஸ்
பல்பொருள்
வாணிபம்
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை

கூல் பானங்கள்,
கேக் வகைகள் மற்றும்
சிற்றுண்டி வகைகள்
அனைத்தையும் பெற்றிட
லிங்கம்
கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

...ஸ் களஞ்சியம்
...பொருள் வாணிபம்
...வும், சில்லறையாகவும் நியாய
...த பொருள்களைப் பெற்றுக்
கொள்ளலாம்.
...க்கம்பரை, சுழிபுரம்.

கணேஸ் ஸ்ரோஸ்
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாயவிலைக்குப் பொருள்களை
பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

...த்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...
சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
T.P. 021 222 1723
770, 772, கே.கே.எஸ். வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421, Fax: 222 0421

சந்திரகாந்தன்
திருமண சேவை
இயக்குநர்- எஸ்.ஆனந்தி,
தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

...ன் சன்ஸ்
...பனை ஏற்றுமதி ஏக விநியோகஸ்தர்
...ம். சூராவத்தை, சுன்னாகம்.

கோடானுகோடி பக்தர்களைக்
காத்து இரட்சிக்கும் கண்ணா!
கருணையுள்ள திருமாலே!
உலகத்தை இயக்கும் உட்பொருளே!
எம் பெருமானே! காணக் கண் கோடி வேண்டும்
இப் புண்ணியநாளை
உன் அருளை சாந்தி, சமாதானத்துடன்
வாரியள்ளித் தந்திடப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

## German, Swiss

German , Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. German Embassy இல் கேட்கப்படும் A-1 Certificate இற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்
**German Institute No 10, Palaly Road, Jaffna**

## பிரத்தியேக/ குழு வகுப்புக்கள்

க.பொ.த (உ/தரம்) இரசாயனவியல்
க.பொ.த (சா/தரம்) கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
உங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பிக்கப்படும்.
[அடிப்படையிலிருந்து இலகு கற்பித்தல் முறையில்]
**தொடர்புக்கு: 0774014345**

## காணி விற்பனைக்கு

இணுவில் கிழக்கு ரயில் பாதைக்கு மேற்குப் பக்கமாக உள்ள 2 பரப்பு வெறும் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்: 077 9004268
0750414490
(5063) (45-19-21)

## வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் சென். ஆன்ஸ் தேவாலயத்துக்கு அண் மித்து 6 பரப்பில் 5 படுக்கை அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. முன்பக்கத்தில் 10இற்கு மேற்பட்ட வாகனங்கள் தரிப்பதற்குரிய வசதி உண்டு. அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வைத்தியசாலைகள் நடத்துவதற்கு உகந்தது.
தொடர்பு : T.P: 0776154279

## Tipper விற்பனைக்கு

LD - xxxx தொடர் இலக்க சிறந்த நிலையிலுள்ள Ashok Leyland ரொபோக்கோ ரக இன்ஜின் கொண்ட Tipper விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 3601749, 077 8767804
(5067) (45)





யாழ்ப்பாணம், ஜூன்.22

சாவகச்சேரி, சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் அன்றய தினம் மாலை 5 மணிக்கு தீ மிதிப்பும் இடம்பெறும்.

திருவிழாக்கால பூசைகளை சிவஸ்ரீ பா.முரளிதரக் குருக்கள் நிகழ்த்துவார். (ற)

* * *

கரவெட்டி கீழ்க்கரவை கிழவிதோட்டம் விக்கின விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாத்தினங்களில் விஷேட தவில், நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெறும். (ற-421)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் விமலானந்தன்



கெனடி லேன், திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் விளையாட்டு அரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் இல.10, வின்சன் கோட்டம், 7ஆம் ஒழுங்கை, வேப்பங்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விமலானந்தன் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தயாளன், சுரேஷ், நிரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவச்செல்வி, ஜெயந்தா, கலைவாணி, வைகுந்தன் ஆகியோரின் மாமனாரும் நிஷப்தன், அபிநயா, வைஸ்ணவி, ஆரணி, அருவின், அஜய் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (23.06.2011) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக பி.ப. 4 மணியளவில் தச்சனாதங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 10, வின்சன் கோட்டம் ,*
*7ஆம் ஒழுங்கை,*
*வேப்பங்குளம்.*

தகவல்:
குடும்பத்தினர்
0245671494

## UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified suppliers for the following furniture.

| Wooden Furniture | Quantity |
|---|---|
| Laboratory tables | 10 |
| Bench & Table | 07 |
| Shape bench & Table | 10 |
| Laboratory tab with all necessary fittings | 24 |
| Ceramic basin for Laboratory table with all necessary fittings | 24 |
| Cupboards | 20 |

Bid forms may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna on payment of a non refundable fee of Rs. 500.00 at the Shroff's Counter, University of Jaffna until 01.07.2011.

Perfected Bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

**Bids will be accepted till 2.00 p.m on 13.07.2011 and open immediately thereafter.**

**Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.**

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

**P.O Box 57,**
**Thirunelvely, Jaffna.**
**20.06.2011**

Registrar
University of Jaffna


## வாங்கி விட்டீர்களா? வாசித்து விட்டீர்களா?

**கவர்ச்சிகரமான பரிசில்கள்!**
**உங்களுக்கு காத்திருக்கின்றன**

1. ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட அமெரிக்கப் படையினரின் விசேடத் தாக்குதல் அணிக்கு இடப்பட்ட பெயர் என்ன?
2. இனிது இனிது இதழில் வெளிவந்த 'கஸல்' கவிதைகளில் உங்களுக்கு பிடித்த வரிகள் ...?
3. '2012' ஆங்கிலத் திரைப்படத்தை இயக்கியவரின் பெயர் என்ன?
4. மர்லின் மன்றோ பிறந்த இடம்..?
5. புதுமைப்பித்தனின் படைப்புக்களை எந்த ஆண்டு தமிழக அரசு நாட்டுடமையாக்கியது?

நீங்கள் செய்ய வேண்டியது இது தான். மேலே உள்ள ஐந்து கேள்விகளுக்கும் விடை எழுதி அனுப்பி வையுங்கள். இக்கேள்விக்கான விடைகள் இனிது இனிது இதழில் உள்ளன.




பல்சுவை மாத இதழ்

கேள்விகளுக்கான விடைகளை எழுதி எதிர்வரும் 30-06-2011 இற்கு முன்பாக கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

எல்லா பிரதேசங்களிலும் இப்போது பரபரப்பாக விற்பனையாகிறது

ஆசிரியர்,
இனிது இனிது
உதயன் வெளியீட்டகம்,
361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

inithumagazine@uthayan.com

## துள்ளிக் குதிக்கும் பள்ளிச் சிறுவர்களே !

எதிர்காலம் மேன்மையுற •
ஆற்றல்களை வளர்க்க •
ஆக்கங்களுக்கு இடந்தர •
ஆளுமையை விருத்தி செய்ய •

வாங்குங்கள் !
வாசியுங்கள் !!
எழுதுங்கள் !!!




சிறுவர்களுக்கான மாத இதழ்

எல்லா பிரதேசங்களிலும் இப்போது பரபரப்பாக விற்பனையாகிறது

அர்ச்சுனா
உதயன் வெளியீட்டகம்,
361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

archunamagazine@uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org